



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www.tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:290 | 05-05-2026 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

05.05.2026 சித்திரை 22

செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் 5.55

**திதி:**
இன்று அதிகாலை 4.41 வரை திரிதியை பின்பு சதுர்த்தி.

**நட்சத்திரம்:**
இன்று பிற்பகல் 12.03 வரை கேட்டை பின்பு மூலம்

**யோகம் :**
இன்று இரவு 11.15 வரை சிவம் பின்பு சித்தம்.

**கரணம்**
இன்று அதிகாலை 4.41 வரை பத்திரை பின்பு மாலை 5.39 வரை பவம் பின்பு பாலவம்.

**யோகம் :**
இன்று பிற்பகல் 12.03 வரை சித்த யோகம் பின்பு அமிர்த யோகம்.

**சந்திராஷ்டமம் :**
இன்று பிற்பகல் 12.03 வரை பரணி பின்பு கார்த்திகை

**நல்ல நேரம்**
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 : 5.30.

**இராகு காலம்**
பிற்பகல் 3.00 – 4.30.

**எமகண்டம்**
காலை 9.00 – 10.30.

**குளிகை**
பிற்பகல் 12.00 – 1.30.

இன்று சங்கடஹர சதுர்த்தி நாள்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# முதல்வர் ஆகிறார் விஜய்

**சென்னை, மே 5:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் தவெக-வுக்கு சாதகமாக அமைந்துள்ளது. தனிப்பெரும்பான்மை பெறாவிட்டாலும் கூட தனித்துப் போட்டியிட்ட முதல் தேர்தலில் 105+ இடங்களை வசமாக்கியதே தவெகவுக்கு இமாலய சாதனைதான்.

ஆனாலும் ஆட்சியமைக்க 118 எம்எல்ஏக்கள் வேண்டுமென்ற நிலையில், அடுத்ததாக தவெக பக்குவமாகக் காய் நகர்த்த வேண்டிய மிகப்பெரிய சவால் எழுந்துள்ளது.

தவெக ஆட்சிக்கு வந்த கதையை சற்றே துரிதமாக நாம் திரும்பிப் பார்ப்போம். பிப்ரவரி 2, 2024-ல் தான் தவெக தொடங்கப்பட்டது. சரியாக 2 ஆண்டுகள் 3 மாதங்கள் நிறைவு செய்த கட்சிக்கு தமிழக மக்கள் பேராதரவை வழங்கியிருக்கிறார்கள்.

இந்தச் சூழலில் இது தவெகவின் எழுச்சியா இல்லை தமிழகத்தில் திராவிடக் கட்சிகளின் சறுக்கலா என்பது ஆழமான விவாதப் பொருள்.

அதன் அடிப்படையில், தவெகவின் வெற்றிக்கான காரணங்கள் சிலவற்றை பட்டியலிட்டால், அதில் தமிழகத்துக்கும் திரைக் கவர்ச்சிக்குமான பந்தம் முதலிடம் பெறும். "திரை நட்சத்திர வழிபாட்டில் ஊறிப் போன தமிழகத்தை நன்கு புரிந்து வைத்திருந்தாலேயே திரைவாழ்வில் உச்சத்தில் இருந்த விஜய் கட்சி, அரசியல் என்ற பயணத்துக்கு முதலில் தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். அவருடைய நம்பிக்கை சோரம் போகவில்லை." என்கின்றனர் தேர்ந்த அரசியல் நிபுணர்கள்.

அடுத்ததாக அரசியலில் பெரிதும் அனுபவம் இல்லாத விஜய்க்கு தோதாக, தோளாடு தோளாக நிற்க விசிகவில் இருந்து விலகிய எலக்‌ஷன் ஸ்ட்ராடஜிஸ்ட் ஆதவ் அர்ஜூனா வந்து சேர்ந்தார். அவர் செய்த கிரவுண்ட் ஒர்க், அவர் வகுத்துக் கொடுத்த ஸ்ட்ராடஜிகளையும் விஜய் ஒரு 'மாணவ ஒழுக்கத்தோடு' கடைப்பிடித்திருப்பார் என்றே நாம் கருத வேண்டியிருக்கிறது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

திரைக் கவிர்ச்சி, எலக்‌ஷன் ஸ்ட்ராடஜிஸ்ட் துணையோடு விஜய்க்கு இன்னும் அதிகமாக பலன் கொடுத்தது அவர் கையிலெடுத்த எதிர்ப்பு அரசியல். தமிழகம் கடந்த 59 ஆண்டுகளாக திராவிடக்கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, மாறி மாறி திராவிடக் கட்சிகளை அரியணை ஏற்றிய பூமி. அப்படியிருக்க ஆளும் திமுக எதிர்ப்பு அரசியலை விக்கிரவாண்டி தொடங்கி தனது கடைசி நாள் பிரச்சாரம் வரை ஆக்ரோஷமாக பழகினார் விஜய்.

ஆனாலும் அதிலொரு சூட்சமத்தை தன்வசம் வைத்துக் கொண்டார். அதன்படி, திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்தாலும் திராவிடக் கொள்கைகளை விமர்சிக்கவில்லை. தனது கொள்கைத் தலைவர்களில் பெரியாரையும் சேர்த்தே வைத்திருந்தார். திமுகவுக்கு எதிராக கூரான வாளைச் சுழற்றிக் கொண்டே 'அதிமுக பலவீனமாகிவிட்டது; அதற்கு தலைமை சரியில்லை' என்று மீண்டும் மீண்டும் மேடைகளில் சொல்லி அதிமுக வாக்குகளுக்கும் வேட்டு வைத்துக் காட்டியிருக்கிறார்.




அத்தனைக்கும் முத்தாய்ப்பாக தனது பிரச்சார வாகனத்தில் தனது படத்துக்குப் பின்னணியில் அண்ணாவையும், எம்ஜிஆர் படத்தையும் பொறித்துக் கொண்டார். ஆக பெரியார், எம்ஜிஆர், அண்ணா என யாரையும் விஜய் விட்டுவைக்கவில்லை. உங்களுக்கு அண்ணா, எம்ஜிஆர் பிடிக்கும் ஆனால் அதிமுக மேல் அதிருப்தியா என்னிடம் வாருங்கள், உங்களுக்கு பெரியார், அண்ணா பிடிக்கும் திமுக மேல் அதிருப்தியா என்னிடம் வாருங்கள் என்று விசாலமான கதவைத் திறந்து வைத்தார்.




மூன்றாவதாக தமிழ் தேசியம் என்று சீமான் பேசிக் கொண்டிருக்க திராவிடமும் - தமிழ் தேசியமும் ஒன்று தான் என்று நாதக அதிருப்தியாளர்களையும் தன் பக்கம் வரவு வைத்துக் கொண்டார்.

கூடவே, "நான் எந்த மத நம்பிக்கைக்கும் எதிரானவன் இல்லை" என்று கூறி பல்வேறு தரப்பு வாக்குகளையும் தன் பக்கம் மடைமாற்றும் வேலையையும் பக்குவமாக செய்து வந்திருக்கிறார் என்றே நாம் புரிந்து கொள்ள வேண்டும் என அரசிய விமர்சகர்கள் சிலர் கூறுகின்றனர்.

ஆனால், இன்னொரு தரப்பினர் இதையெல்லாம் திட்டவட்டமாக மறுக்கின்றனர். விஜய்யின் வெற்றி முழுக்க முழுக்க திரை பிம்ப வழிபாட்டின் வெளிப்பாடு என்று அடித்துக் கூறுகின்றனர். விஜய் ஒரு 'கல்ட் பாலிடிக்ஸை' உருவாக்கி தமிழகத்தை ஆபத்தான பாதைக்கு இட்டுச் செல்லப் போகிறார் என்று ஆவேச ஆரூடம் கூறுகின்றனர்.

இன்னொரு தரப்பினர், "இது மக்கள் தீர்ப்பு. அதை ஏற்கத் தான் வேண்டும். 5 ஆண்டுகால அரசு சலுகைகளுக்குப் பிறகும். கல்வி வளர்ச்சி, மகளிர் மேம்பாடு என பல்வேறு திட்டங்களுக்குப் பிறகும், அதே மாதிரியான திட்டங்கள் எங்கள் ஆட்சி அமைந்தால் நிச்சயம் தருவோம் என்று ஏற்கெனவே பலமுறை ஆட்சியில் இருந்த அதிமுக சொல்லியும், இளைஞர்கள் மட்டுமல்லாது பெண்கள், வயதானவர்கள், பாரம்பரியமாக திமுக, அதிமுகவுக்கு வாக்களித்தவர்கள் எனப் பலரும் தவெகவுக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்றால் மக்கள் ஏதோ ஒரு மாற்றம் வேண்டுமென விரும்பியிருக்கிறார்கள் என்றே அர்த்தம்.

மாற்றத்தை மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அரசியல் வரலாற்றில் கட்சி ஆரம்பித்த மிகக் குறுகிய காலத்தில் ஆட்சி அமைத்தோர் பட்டியலில் தவெக தனக்கும் ஓரிடத்தைப் பெற்றுக் கொண்ட நிலையில், இனி அதன் வாயிலாக மக்களுக்கான ஆட்சியாக நடைபெறுகிறதா என்பதை கண்காணிப்பதும், அவ்வாறு நடக்காத போது இடித்துரைப்பதே மாற்றத்தை தேர்ந்தெடுத்த மக்கள் சக்தியின் வேலையாக இருக்க வேண்டும்" எனக் கூறுகின்றனர்.

"இந்தத் தேர்தல் முடிவுகளின் வெளிப்பாடு மக்கள் வாரிசு அரசியலையும், டெல்லியில் இருந்து இயக்கி நடக்கக்கூடிய 'ப்ராக்ஸி அரசியலை'-யும் வெறுக்கின்றனர் என்பது உறுதியாகியிருக்கிறது. கூடவே, தமிழக தேர்தல் வரலாற்றின் மிகப் பெரிய கரும்புள்ளியாக இருந்த ஓட்டுக்குப் பணம் கொடுக்கும் பழக்கத்துக்கு பலத்த அடி தவெகவால் வழங்கப்பட்டிருக்கிறது" என்று மூத்த பத்திரிகையாளர் ஒருவர் சுட்டிக் காட்டுகிறார்.

அதேபோல் இனியும் ஹீரோ ஒர்ஷிப்பை ஊக்குவிக்காமல், மாநில உரிமைகளை சமரசம் செய்துவிடாமல், சமூகத்தின் விளிம்பு நிலை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்பவராக, அரசியல் முன்னோர் வகுத்த பாதைகளில் மக்கள் நலன் சார்ந்தவற்றை தழுவிக் கொண்டு விஜய் இருக்கட்டும் என்ற ஆதங்கக் குரல்களும் தமிழக அரசியல் களத்தில் ஒலிக்கின்றன.

# மேற்கு வங்கம், புதுச்சேரி, அசாமில் பாஜக: கேரளாவில் காங்கிரஸ் ஆட்சி

**கொல்கத்தா, மே 5:**

மேற்கு வங்க வரலாற்றில் முதல்முறையாக பாஜக ஆட்சியைப் பிடிக்க இருக்கிறது. மொத்தமுள்ள 294 தொகுதிகளில் சுமார் 200 தொகுதிகளைக் கைப்பற்றும் நிலையில் பாஜக இருப்பதால், அக்கட்சியின் மூத்த தலைவரான சுவேந்து அதிகாரி முதல்வராவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரிணமூல் காங்கிரஸ் 10 தொகுதிகளில் வெற்றி மற்றும் 73 தொகுதிகளில் முன்னிலையில் இருந்து வருகிறது.

காங்கிரஸ் 2 இடங்களிலும் கம்யூனிஸ்ட் கூட்டணி 2 தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளன.

இதன்மூலம், மேற்கு வங்க களம் பாஜகவுக்கும் திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கும் இடையேயான போட்டியாக மட்டுமே இருந்துள்ளது. இதில், மம்தா பானர்ஜியின் 15 ஆண்டு கால ஆட்சியை பாஜக முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.




### புதுச்சேரி

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் முதல்-மந்திரியாக, அகில இந்திய என்.ஆர். காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரங்கசாமி பதவி வகித்து வருகிறார்.

இதில், புதுச்சேரியில் அகில இந்திய என்.ஆர். காங்கிரஸ் கட்சியின் தலைவர் மற்றும் முதல்-மந்திரியான ரங்கசாமி தட்டாஞ்சாவடி தொகுதியில் 4,441 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

மொத்தமுள்ள 30 தொகுதிகளில் மதியம் 2.30 நிலவரப்படி அகில இந்திய என்.ஆர். காங்கிரஸ் கட்சி 9 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. பா.ஜ.க. (2), காங்கிரஸ் (1), தி.மு.க. (1), அ.தி.மு.க. (1), சுயேச்சை ஒருவர் என அடுத்தடுத்து வெற்றியை பெற்றுள்ளனர்.

இந்நிலையில், புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் - பாஜக கூட்டணி 15 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. காங்கிரஸ் கூட்டணி 11 தொகுதிகளிலும், மற்றவை 3 தொகுதியிலும் முன்னிலையில் உள்ளது.

### அசாம்

அசாமில் மொத்தம் 126 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. கடந்த ஏப்ரல் 9ஆம் தேதி, அங்கு ஒரே கட்டமாகத் தேர்தல் நடந்தது. 85.96 விழுக்காடு வாக்குகள் பதிவாயின.

அசாமில் மொத்தமுள்ள 126 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில் பெரும்பான்மைக்கு 64 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும்.

இந்நிலையில், அசாமில் 98 தொகுதிகளில் பாஜக முன்னிலையில் உள்ளது. இதன் மூலம் அசாமில் பாஜக ஆட்சியை தக்க வைத்துள்ளது.

பாஜகவைச் சேர்ந்த ஹிமந்த பிஸ்வா சர்மா மீண்டும் பதவியேற்க உள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

### கேரளா

கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 90+ தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. இதன் மூலம் இக்கூட்டணி கேரளாவில் மீண்டும் ஆட்சியை கைப்பற்ற உள்ளது.

மொத்தமுள்ள 140 சட்டப் பேரவைத் தொகுதிகளில், ஐக்கிய ஜனநாயக முன்னணியில் காங்கிரஸ் 95 தொகுதிகளில் போட்டியிட்டது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 27 தொகுதிகளில் போட்டியிட்டது. இதர தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு வழங்கப்பட்டன. கேரளாவில் 140 தொகுதிகளுக்கும் கடந்த ஏப்ரல் 9ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில் பதிவான வாக்குகள் 43 மையங்களில் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன. கேரளாவில் மொத்தமுள்ள 140 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில் பெரும்பான்மைக்கு 83 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும். இந்நிலையில், கேரளாவில் 89 தொகுதிகளில் காங்கிரஸ் கூட்டணி முன்னிலையில் உள்ளது. இதன் மூலம் கேரளாவில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியை பிடிக்க உள்ளது.






## திருக்குறள் குறள்-610

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான் தாஅய
தெல்லாம் ஒருங்கு



அடியால் உலகத்தை அளந்த கடவுள் தாவியப் பரப்பு எல்லாவற்றையும் சோம்பல் இல்லாத அரசன் ஒரு சேர அடைவான்.

## சிந்திக்க ஒரு நொடி




என்ன ஆச்சு ஏன் என்று கேட்க ஆளே இல்லை என்ற வாக்கியம் வயதுக்கேற்றவாறு மாறும்....
இளமையில் கர்வமாக...
முதுமையில் பரிதாபமாக.
என்பதுதான் நிதர்சனமான உண்மை

**உஷா முத்துராமன்**

## திருநேர் அண்ணாமலையாருக்கு தாராபிஷேகம் சிறப்பு வழிபாடு





**திருவண்ணாமலை மே 5:**
கிரிவலப் பாதையில் அமைந்துள்ள திருநேர் அண்ணாமலையார் திருக்கோயிலில் அக்னி நட்சத்திரத்தை முன்னிட்டு சிவலிங்கத்தின் மீது தாரா அபிஷேகம் நடைபெறும். மே 4 முதல் மே 28 வரை தினமும் காலை 7:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை தாராபிஷேகம் நடைபெறும். ஏலக்காய், லவங்கம்,பச்சை, கற்பூரம், பன்னீர் ஆகியவை தாரா பாத்திரத்தில் மூலிகை நீர் சொட்டு சொட்டாக சிவலிங்கத்தின் மீது படும்படி தாராபிஷேகம் நடைபெறும். உலக நன்மைக்காகவும், மழை வேண்டியும்,வெப்பம் தனிய தாராபிஷேகம் நடைபெறும். ஏராளமான பக்தர்கள் திருநேர் அண்ணாமலையாரை வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## குதிரை வாகன புறப்பாடு



**தஞ்சாவூர், மே 05:**
மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் சித்திரை திருவிழாவில் ஏழாவது திருவிவான நேற்று (03.05.2026) மாலை 7 மணியளவில் சுவாமி குதிரை வாகனத்தில் எழுந்தருளி நம் ஸௌராட்ஷ்ட்ர சமூக வீதிகளில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். திருவிழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், குதிரை வாகன கமிட்டி மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.
**செய்தி: T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

# சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினத்தையொட்டி பாராட்டு



**வந்தவாசி, மே 05:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசியில் சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினத்தை முன்னிட்டு ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் வந்தவாசி தீயணைப்பு நிலையத்தில் பணிபுரியும் தீயணைப்பு வீரர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு தீயணைப்புத் துறை செயல் அலுவலர் மு.பிரபாகரன் தலைமை தாங்கினார். கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் வரவேற்றார். தலைமை ஆசிரியர் க.வாசு, எக்னோரா கிளை தலைவர் ரயில்வே சு.தனசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக, மேனாள் மாவட்ட மருத்துவ இணை இயக்குனர் டாக்டர் எஸ். குமார் பங்கேற்று, தீயணைப்புத் துறையினரின் அரும்பணிகளை பட்டியலிட்டு கூறினார்.

மேலும் அவர்களின் அளப்பரிய தொண்டிற்கு நாம் தலை வணங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும் இந்த நிகழ்வில் சமூக ஆர்வலர் மலர் சாதிக், கேப்டன் பிரபாகரன், குறும்பட துணை இயக்குநர் முகமது ஜியா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நிகழ்வில் தீயணைப்பு வீரர்கள் பூவரசன், அருண் குமார், கோதண்டராமன், விக்னேஷ் குமார் ஆகியோர் பங்கேற்றனர். இறுதியில் ஓய்வு பெற்ற டிஇஓ உதவியாளர் ஜெயக்கண்ணு நன்றி கூறினார்.

## சேஷ வாகனம்



ஸ்ரீ ஸ்ரீனிவாச பெருமாள் திருக்கோவில், தில்லை ஸ்தானம் 3ம் திருநாள் மாலை சேஷ வாகனம்

# பேராசிரியர் ஆ. இராமலிங்கம் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாள்



**மயிலாடுதுறை , மே , 05 :**
மயிலாடுதுறை மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞர் டாக்டர் இராம.சேயோன் அவர்களின் தந்தை ஏ.வி.சி கல்வி நிறுவனங்களின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் ஆ. இராமலிங்கம் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாள் அவரது இல்லத்தில் அனுசரிக்கப்பட்டது,

நிகழ்வில் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், மாவட்ட துனை செயலாளர் ஞானவேலன் , திமுக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் கல்யாணம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெகவீர பாண்டியன், அருள் செல்வன் மயிலாடுதுறை நகரமன்ற தலைவர் குண்டாமணி (எ) என். செல்வராஜ், நகரமன்றஉறுப்பினர்சர்வோதயன், மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பிஎம். ஸ்ரீதர், மாநில பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் பி. சிவதாஸ், ஒன்றிய கழக செயலாளர்கள் முருகமணி, இளயபொருமாள், மங்கை சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.கே.மருது , கழக தலைமை பொதுக்குழு உறுப்பினர் நத்தம் வின்சென்ட், தலைமை செயற்குழு உறுப்பினர் இராம இளங்கோவன், கழக நெசவாளர் அணி அமைப்பாளர் நாங்கூர் பழனிவேல், கழக விவசாய அணி துணை அமைப்பாளர் முத்துக்குமாரன் மற்றும் கழக நிர்வாகிகள், நண்பர்கள் ஆகியோர் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினர்.

## சந்திர பிரபை வாகனம்



நேற்று மாலை சந்திர பிரபை வாகனம் பட்டணம் கோவில் சென்னை கேசவ பெருமாள் கோவில் சென்னை

## ஹனுமாந்த வாகனம்



நேற்று மாலை ஹனுமாந்த வாகனம் எம்.ஜி.ஆர் நகர் பிரசன்ன வெங்கடேஸ்வர பெருமாள் கோவில் சென்னை

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வெற்றி



திருப்பத்தூர் மாவட்டம் (047)- வாணியம்பாடி சட்டமன்ற தொகுதியில் திமுக மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் சையத் பாரூக் இவரை எதிர்த்து விசில் சின்னத்தில் தவெக சார்பில் போட்டியிட்ட சையத் புர்கானுதீன் என்பவர் பெற்ற வாக்குகளை விட 2982 வாக்குகள் கூடுதலாக பெற்று வெற்றி பெற்று தேர்தல் அலுவலர் அஜிதா பேகத்திடம் வெற்றி சான்றிதழ் பெற்றார்.

## சூர்ய பிரபை வாகனம்



நேற்று காலை சூர்ய பிரபை திருவல்லிக்கேணி பார்த்த சரதீ பெருமாள் கோவில் சென்னை

## ஹம்ச வாஹனம்



நேற்று மாலை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெரும் காலாம் கோவில் சென்னையில் ஹம்ச வாஹனம்

## சேஷ வாகனம்



நேற்று காலை சேஷ வாகனம் எம்.ஜி.ஆர் நகர் பிரசன்ன வேங்கடேஸ்வர பெருமாள் கோவில் சென்னை

# ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து அதிகரிப்பு

**தருமபுரி, மே 5:**

தருமபுரி: ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து விநாடிக்கு 3,000 கனஅடியாக உயர்ந்துள்ளது. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர் வரத்து கடந்த 3 நாட்களாக விநாடிக்கு 1,200 கனஅடியாக இருந்தது.

இந்நிலையில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த மழை காரணமாக நீர்வரத்து சற்று அதிகரித்துள்ளது. அதன்படி, நேற்றைய அளவீட்டின்போது நீர்வரத்து விநாடிக்கு 3,000 கனஅடியாக அதிகரித்துள்ளது.


# பெரம்பலூர் அருகே சூறைக்காற்றுடன் மழை: 100 ஏக்கர் மக்காச்சோள பயிர்கள் சேதம்

**பெரம்பலூர், மே 5:**

கடும் சூறைக் காற்றுடன் மழை பெய்ததில் பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டத்துக்கு உட்பட்ட மலையாளப்பட்டி கிராமத்தில் 100 ஏக்கர் மக்காச் சோளம் மற்றும் 20 ஏக்கர் வாழை மரங்கள் வயலில் சாய்ந்து சேதமடைந்துள்ளன.

பெரம்பலூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் சூறைக் காற்றுடன் பரவலாக மழை பெய்தது. இதனால், பல நாட்களாக கடுமையாக நிலவி வந்த வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அதேவேளையில், சில இடங்களில் வேளாண் பயிர்கள் சேதமடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இந்நிலையில், வேப்பந்தட்டை வட்டம் மலையாளப்பட்டி கிராமத்தில் சூறைக்காற்றுடன் பெய்த மழையால் 100 ஏக்கர் மக்காச்சோள பயிர்கள், 20 ஏக்கர் வாழை மரங்கள் வயலில் சாய்ந்துவிட்டன. இதனால், பல லட்ச ரூபாய் இழப்பீடு ஏற்பட்டு உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்றை பள்ளிகளில் கற்பிக்க வேண்டும்: உயர் நீதிமன்றம் உத்தரவு



**மதுரை, மே 5:**

காரைக்குடியைச் சேர்ந்தவர்கள் ராஜேஷ் என்ற ராஜேஷ்குமார், விஜய் என்ற விஜயகுமார். இவர்கள் புலிக்குத்தி பேருந்து நிறுத்தம் பகுதியில் ஒட்டப்பட்டிருந்த அம்பேத்கரின் சுவரொட்டியைச் சேதப்படுத்தி அதை வீடியா பதிவு செய்து சமூக வலைதளத்தில் வெளியிட்டதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிர்வாகி போலீஸில் புகார் அளித்தார்.

அதன்பேரில் இருவர் மீதும் சோமநாதபுரம் போலீஸார் எஸ்.சி. எஸ்.டி.வன்கொடுமைச் சட்டத்தில் வழக்குப் பதிவு செய்தனர். இந்நிலையில் இரு தரப்பினர் இடையே சமரசம் ஏற்பட்டுள்ளதால் கீழமை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை ரத்து செய்யக் கோரி இருவரும் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுவை நீதிபதி எல்.விக்டோரியா கௌரி விசாரித்தார்.

ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது, 'மனுதாரர்களிடம் அம்பேத்கர் குறித்து சரியான புரிதல் இல்லை. இருவரும் தலா 101 அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்று நூலை வாங்கி, அதில் ஒன்றை படிக்க வைத்துக்கொண்டு, மற்ற புத்தகங்களை டி.கல்லுப்பட்டியில் உள்ள முருகப்பா அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் பிளஸ் 1, பிளஸ் 2 மாணவர்களுக்கும், மற்ற வகுப்பு மாணவர்களுக்கும் வழங்க வேண்டும்.

இருவரும் புத்தகத்தை முழுமையாகப் படித்து வாய்மொழித் தேர்வுக்கு தயாராக இருக்க வேண்டும். மேலும், அடையாறு புற்றுநோய் நிறுவனத்துக்கு தலா ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும்' என உத்தரவிட்டார்.

அடுத்த விசாரணையின்போது, மனுதாரர்கள் இருவரிடமும் அம்பேத்கரின் வாழ்க்கை மற்றும் பணிகள் தொடர்பாக 30 கேள்விகள் கேட்கப்பட்டன. இருவரும் திருப்திகரமாக பதிலளித்தனர். இதையடுத்து, புகார்தாரரும் வழக்கை முடிக்க சம்மதம் தெரிவித்தார்.

# இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம்: பூந்தமல்லி - வடபழனி வழித்தடத்தில் விரைவில் ரயில் சேவை

**சென்னை, மே 5:**



இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் மெட்ரோ ரயில் சேவை, பூந்தமல்லி - வடபழனி தடத்தில் விரைவில் தொடங்கவுள்ளது. சட்டப் பேரவைத் தேர்தலுக்குபிறகு அமையும் புதிய அரசு, ரயில் சேவையை தொடங்கி வைக்கும் என்று மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையில், இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் 116.1 கி.மீ தொலைவுக்கு 3 வழித்தடங்களில் செயல்படுத்தப்படுகிறது. இவற்றில் கலங்கரை விளக்கம் - பூந்தமல்லி வரையிலான 4-வது வழித்தடம் (26.1 கி.மீ) ஒன்றாகும்.

இத்தடத்தில் ஒரு பகுதியாக, பூந்தமல்லி புறவழிச்சாலை நிலையம் - வடபழனிவரை 14.64 கி.மீ. தொலைவுக்கு உயர்மட்டபாதை அமைக்கப்பட்டுள்ளது. இத்தடத்தில் மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் மற்றும் அவரது குழுவினர் கடந்த பிப்ரவரியில் ஆய்வு மேற்கொண்டனர்.

ரயில்வே தண்டவாளத்தின் தரம், மெட்ரோ ரயில் நிலையம், பிரேக்கிங் தொழில்நுட்பம், பயணிகள் பாதுகாப்பு தொடர்பாக ஆய்வு செய்தனர். இதுதவிர, அதிவேக சோதனை ஓட்டம் மேற்கொண்டனர்.

இதன்முடிவில், பூந்தமல்லி முதல் வடபழனி வரை வழித்தடத்தை பயன்பாட்டுக்கு கொண்டு வர மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் ஒப்புதல் அளித்தார்.

அதே நேரத்தில், பூந்தமல்லி- போரூர் வரை 15 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்களை இயக்கவும், போரூர் சந்திப்பு முதல் வடபழனி தடத்தில் ஒவ்வொரு திசையிலும் ஒரு நேரத்தில் 25 கி.மீ. வேகத்தில் இயக்கவும் நிபந்தனை விதிக்கப்பட்டது.

இதையடுத்து, மார்ச் மாதம் மெட்ரோ ரயில் சேவை தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மார்ச் 15-ம் தேதி தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதால், மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படாதநிலை உருவானது.

தற்போது சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று (மே 4) நடைபெறவுள்ளது. இதையடுத்து இன்னும் ஒரு வார காலத்தில் புதிய அரசு பதவியேற்கவுள்ளது.

இந்நிலையில், பூந்தமல்லி முதல் வடபழனி வரையில் மெட்ரோ ரயில் சேவை விரைவில் தொடங்கவுள்ளது. ரயில் சேவை தொடங்கும்போது, பூந்தமல்லி - போரூர் வரை அனைத்து நிலையங்களில் நின்று செல்லும்.

போரூர் முதல் வடபழனி வரை இடையில் உள்ள நிலையங்களில் நிறுத்தப்படாது. பூந்தமல்லி முதல் வடபழனி வரை ரயில் இயக்கப்படவுள்ளதால், வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் பயணிகள் இறங்கி, சென்ட்ரல் - பரங்கிமலை (பச்சை நிற வழித்தடம்) வழித்தடத்தில் இயக்கப்படும் மெட்ரோ ரயில்களில் ஏறி, விரும்பிய இடத்துக்கு பயணிக்க இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: பூந்தமல்லி - வடபழனி வரை மெட்ரோ ரயில் சேவை தொடங்க தயாராக உள்ளது.

புதிய அரசு அமைந்தவுடன், இத்தடத்தில் ரயில் சேவையை தொடங்கி வைக்கும். இத்தடத்தில் முக்கிய நிலையங்களான போரூர், வடபழனி ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்கள் தயாராக இருக்கின்றன.

போரூர் - வடபழனி தடத்தில் ஆலப்பாக்கம், வளரசவாக்கம் போன்ற மெட்ரோ ரயில் நிலையங்களில் இறுதிக்கட்ட பணிகள் நடைபெறுகின்றன. இதுபோல, இத்தடத்தில் மற்ற ரயில் நிலையங்களில் கட்டுமானப்பணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன.

இந்த நிலையங்களில் கட்டுமானப்பணிகளை முடித்து, படிப்படியாக பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# சார்ஜாவில் இருந்து சென்னை வந்த விமானத்தின் அவசரகால கதவை திறந்து பயணி குதித்து ஓடியதால் பரபரப்பு

**சென்னை, மே 5:**

சார்ஜாவில் இருந்து சென்னை வந்த விமானத்தின் அவசரகால கதவை திறந்து பயணி ஒருவர் குதித்து ஓடியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனால், அடுத்ததாக லண்டனில் இருந்து வந்த விமானம் சென்னையில் தரையிறங்க முடியாததால், பெங்களூருக்கு திருப்பி அனுப்பப்பட்டது. சார்ஜாவில் இருந்து ஏர் அரேபியன் ஏர்லைன்ஸ் விமானம், 217 பயணிகளுடன் நேற்று அதிகாலை 3.25 மணிக்கு சென்னை சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கி, ஓடு பாதையில் இருந்து டாக்ஸி வேயில் வந்து நிற்க தயாரானது.

அப்போது, விமானத்தில் இருந்த புதுக்கோட்டையை சேர்ந்த முகமது நிஜாமுதீன் செரீப் (30) என்ற பயணி திடீரென விமானத்தின் அவசரகால கதவை திறந்து, மின்னல் வேகத்தில் அதன் சரக்கு பாதை வழியாக வெளியில் குதித்து ஓடினார். இச்சம்பவம் சென்னை விமான நிலையத்திலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சென்னை விமான நிலையத்தின் ஓடுபாதை பகுதியில் அவசரகால அபாய அறிவிப்பு எச்சரிக்கை மணி ஒலிக்கப்பட்டது. உடனடியாக, பாதுகாப்பு அதிகாரிகள் விரைந்து வந்து, விமானத்தின் அவசரகால கதவு வழியாக வெளியில் குதித்து ஓடிய பயணியை சுற்றி வளைத்து பிடித்தனர்.

இதற்கிடையில், விமானம் அது நிக்க வேண்டிய இடத்துக்கு பதிலாக, டாக்ஸி வேயில் நிறுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து, அடுத்ததாக லண்டனில் இருந்து 284 பயணிகளுடன் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் சென்னையில் தரையிறங்குவதற்காக வந்தது. டாக்ஸி வேயில் ஏர் அரேபியன் ஏர்லைன்ஸ் விமானம் நின்று கொண்டு இருந்ததால், அந்த விமானம் சென்னையில் தரையிறங்க முடியாததால், பெங்களூருக்கு திருப்பி அனுப்பப்பட்டது.


உடனடியாக, மத்திய உளவுத் துறை அதிகாரிகள், சென்னை விமான நிலைய உயர் அதிகாரிகள் பாதுகாப்பு அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை மேற்கொண்டனர். இதற்கிடையே, ஓடும் விமானத்தில் இருந்து கீழே குதித்த பயணியை தனி அறையில் வைத்து பாதுகாப்பு அதிகாரிகள் விசாரிதனர். விசாரணையில், அந்த பயணி மனநிலை பாதிக்கப்பட்டவர் போல் பேசியதால், அவர் அவர் உண்மையில் மனநிலை பாதிக்கப்பட்டவரா என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். சென்னை வந்த ஏர் அரேபியன் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் சென்னையில் இருந்து மீண்டும் சார்ஜாவுக்கு அதிகாலை 4 மணிக்கு புறப்பட வேண்டும். ஆனால், இந்த சம்பவம் காரணமாக விமானம் தாமதமாக 7.45 மணிக்கு புறப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதேபோல், பெங்களூருக்கு திருப்பி அனுப்பப்பட்ட பிரிட்டிஷ் ஏர்வேஸ் பயணிகள் விமானம், பெங்களூரில் இருந்து சென்னைக்கு திரும்பியது.

சென்னையில் இருந்து அதிகாலை 5.35 மணிக்கு லண்டன் புறப்பட வேண்டிய அந்த விமானம் காலை 9 மணி அளவில் லண்டன் புறப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

# வணிக காஸ் சிலிண்டர் விலை உயர்வால் சென்னையில் ஹாஸ்டல், பிஜி வாடகை 10 சதவீதம் அதிகரிப்பு

**சென்னை, மே 5:**



சென்னையில் வணிக காஸ் சிலிண்டர்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் தங்கும் விடுதிகளின் (ஹாஸ்டல், பிஜி) வாடகையை அவற்றின் உரிமையாளர்கள் 10 சதவீதம் வரை உயர்த்தியுள்ளனர்.

பல்வேறு மாவட்டங்களிலிருந்து படிக்க வரும் மாணவர்கள், வேலைக்கு வரும் இளைஞர்கள் ஹாஸ்டல், பிஜி போன்ற தங்கும் விடுதிகளில் தங்கி தங்களது படிப்பையும், வேலையையும் தொடர்கின்றனர்.

அந்த வகையில் சென்னையில் மட்டும் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விடுதிகள் இயங்கி வருகின்றன. அதில் 12 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் வணிக காஸ் சிலிண்டர்களின் விலை கடுமையாக உயர்ந்ததால், விடுதிகளின் வாடகை 10 சதவீதம் வரை உயர்த்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு ஐடி விடுதி மற்றும் பிஜி உரிமையாளர்கள் நலச் சங்கம் வெளியிட்ட சுற்றறிக்கையில், "அமெரிக்கா - ஈரான் போர் காரணமாக இந்த ஆண்டின் தொடக்கத்தில் ரூ.1,899 ஆக இருந்த 19 கிலோ வணிக காஸ் சிலிண்டர் விலை தற்போது ரூ.3,258 ஆக உயர்ந்துள்ளது.

இதனால் சமையல் செலவுகள் கட்டுப்படியாகாததால், சென்னையில் ஹாஸ்டல், பிஜி வாடகை 10 சதவீதம் வரை அதிகரிக்கப்படுகிறது. அதன்படி ஏசி இல்லாத தங்குமிடத்துக்கான மாதாந்திர கட்டணம், 4 பேர் தங்கும் அறைகளுக்கு ரூ.6,500-ல் இருந்து ரூ.7,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அதே போல் 3 பேர் தங்கும் அறைகளுக்கு ரூ.7 ஆயிரத்திலிருந்து ரூ.8 ஆயிரமாகவும், 2 பேர் தங்கும் அறைகளுக்கு ரூ.8 ஆயிரத்திலிருந்து ரூ.9 ஆயிரமாகவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இவை அடிப்படை விலைகள் தான், இருப்பிடம் மற்றும் வசதிகளுக்கு ஏற்ப வாடகை மாறுபடலாம்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் உள்ள விவரங்களின்படி, விடுதிகளின் வாடகை வரும் 5-ம் தேதி (இன்று) முதல் அமல்படுத்தப்படலாம் என கூறப்படுகிறது.

ஏஜென்சிகளிடம் பெரும்பாலும் சிலிண்டர்கள் கிடைக்காததால், கள்ளச் சந்தையில் ரூ.6 ஆயிரம் முதல் ரூ.7 ஆயிரம் வரை கொடுத்தே சிலிண்டர்களை பெற வேண்டியிருப்பதால் தங்கும் விடுதிகளின் வாடகையை கூட்டுவதற்கான தேவை ஏற்பட்டிருப்பதாக சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

சென்னையில் விடுதிகளின் வாடகை அதிகரிப்பு இளைஞர்கள், மாணவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# தமிழகத்தில் மின் விநியோகத்தில் இதுவரை சிக்கல் ஏற்படவில்லை: மின்வாரிய தலைவர்



**சென்னை, மே 5:**

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிக மின் நுகர்வு உள்ளது. உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் மின் விநியோகத்தில் இதுவரை சிக்கல் ஏற்படவில்லை என்று தமிழ்நாடு மின் வாரிய தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் ஜெ.ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்தியாவிலேயே மிக உச்சபட்ச மின் நுகர்வு தமிழகத்தில்தான் பதிவாகியுள்ளது. 21,000 மெகா வாட் முதல் 23,000 மெகா வாட் வரை மின் நுகர்வு உயர்ந்துள்ளது. குறைந்தபட்சமே 18,000 மெகா வாட்டாக உள்ளது. பகல், இரவு நேரங்களில் 21,000 முதல் 22,000 மெகா வாட் வரை தேவை உள்ளது.

12 மணிவரை இருந்த மின் தேவை, தற்போது நள்ளிரவு 1 மணிவரை நீடிக்கிறது. இந்த ஆண்டு 9 சதவீத மின் தேவை வளர்ச்சி இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. அதற்கேற்ப இதுவரை இல்லாத அளவிலான உச்சத்தை தமிழகம் எட்டியுள்ளது. மாநில அரசின் உற்பத்தி, மத்திய அரசு நிறுவனங்களின் மின் பகிர்வு மற்றும் நீண்ட கால ஒப்பந்தங்கள் மூலம் மின்சாரம் பெறப்படுகிறது.

தமிழகத்தில் 11,000 மெகாவாட் சோலார் மற்றும் 11,000 மெகாவாட் காற்றாலை மின் திறன் உள்ளது. பகல் நேரத்தில் சோலார் உற்பத்தி கைகொடுக்கிறது. காற்றாலை சீசன் இன்னும் தொடங்காத நிலையிலும், உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் மின் விநியோகத்தில் இதுவரை சிக்கல் எழவில்லை. இரவு நேரங்களில் மின் தேவையைப் பூர்த்தி செய்யப் பிற மாநிலங்களில் இருந்து மின்சாரம் வாங்கப்படுகிறது. சில நேரங்களில் உபரி மின்சாரம் விற்கவும் செய்யப்படுகிறது. மின் நுகர்வு தொடர்பான புகார்களை விசாரிக்க பீக் ஹவர்ஸ் சமயங்களில் சிறப்புத் துணைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மின் விசிறிகள் முதல் ஏசி வரை பயன்பாடு அதிகரித்துள்ளது. மேலும் உணவகங்கள் மற்றும் வீடுகளில் மின்சார அடுப்புகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதும் முக்கியக் காரணமாகும். இரவு நேரங்களில் தொழில் துறையினரின் மின் தேவையும் அதிகரித்துள்ளது.

ஐபிஎல் போட்டிகளால் மட்டும் மின் தேவை அதிகரிக்கவில்லை; மாறாகக் கோடை வெப்பம் மற்றும் பொதுவான மின்னணு சாதனங்களின் பயன்பாடே முக்கியக் காரணம். உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதால், தமிழகத்தில் மின் விநியோகம் சீராக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# 'ஜனநாயகன்' படத்தின் ஓடிடி ஒப்பந்தம் ரத்து- படக்குழுவுக்கு கோடி கணக்கில் இழப்பு

**சென்னை, மே 5:**

எச்.வினோத் இயக்கத்தில் நடிகர் விஜய் நடிப்பில் உருவான 'ஜனநாயகன்' திரைப்படம் தொடர்ந்து சிக்கல்களை சந்தித்து வருகிறது. ஆரம்பத்தில் ஜனவரி 9ஆம் தேதி வெளியீடு செய்ய திட்டமிடப்பட்டிருந்த இந்த படம், தணிக்கைச் சான்றிதழ் தாமதமானதால் ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கிடையில், தணிக்கை வாரிய மறுஆய்வில் இருந்தபோதே கடந்த ஏப்ரல் 3ஆம் தேதி படம் சட்டவிரோதமாக இணையத்தில் கசிந்தது. இந்த சம்பவம் திரையுலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி சிலரை கைது செய்துள்ளனர். பின்னர், 'ஜனநாயகன்' படத்தை வரும் மே 8ஆம் தேதி திரையரங்குகளில் வெளியிட தயாரிப்பாளர்கள் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதே நேரத்தில், வெளியீட்டு தாமதம் மற்றும் ஆன்லைன் கசிவு காரணமாக, படத்தின் ஓடிடி உரிமையை வாங்கியிருந்த நிறுவனம் தனது ஒப்பந்தத்தை ரத்து செய்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து, தயாரிப்பு நிறுவனம் புதிய ஓடிடி தளத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல்.

ஆனால், படம் கசிந்ததை காரணமாகக் கொண்டு புதிய ஒப்பந்தம் குறைந்த தொகையில், சுமார் ரூ.50 கோடிக்கு மட்டுமே செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக 'ஜனநாயகன்' படக்குழுவிற்கு சுமார் ரூ.70 கோடி வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


## திருப்பதி கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3.52 கோடி

**திருப்பதி, மே 5:**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை மற்றும் விசேஷ தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இலவச தரிசனத்தில் பல மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர்.

இந்த நிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 71 ஆயிரம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 36 ஆயிரத்து 144 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று தேவஸ்தான அறிவித்த ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3 கோடியே 52 லட்சம் ஆகும்..

## விடுமுறை தினம்: ராமேஸ்வரம் கோவிலில் நீண்ட நேரம் காத்திருந்து பக்தர்கள் தரிசனம்



**ராமநாதபுரம், மே 5:**

தமிழகம் முழுவதும் தற்போது பள்ளிகளுக்கு கோடைவிடுமுறை விடப்பட்டுள்ளது. இதனால் கடந்த சில நாட்களாக ராமேசுவரம் கோவிலுக்கு வரும் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து உள்ளது. இதேபோல் இன்றும் ராமேசுவரம் கோவிலில் பக்தர்கள் கூட்டம் மிக அதிகமாக இருந்தது. பக்தர்கள் அக்னி தீர்த்த கடலில் புனித நீராடி கோவிலில் உள்ள தீர்த்த கிணறுகளிலும் நீண்ட வரிசையில் காத்திருந்து புனித நீராடினர்.

பின்னர் கோவிலில் சுவாமி மற்றும் அம்பாள் சன்னதியில் ரூ.100, ரூ.200 சிறப்பு கட்டண தரிசன பாதை மற்றும் இலவச தரிசன பாதையிலும் 3 மணி நேரத்திற்கு மேலாக வரிசையில் நின்று தரிசனம் செய்தனர். ராமேசுவரம் கோவிலில் 4 ரத வீதி, அக்னி தீர்த்த கடற்கரை பகுதி என எங்கு பார்த்தாலும் பக்தர்கள் கூட்டமாக காட்சி அளித்தது.

இதேபோல் ராமேசுவரம் நகர் பகுதியில் உள்ள ராமர் பாதம், லட்சுமணேசுவரர் கோவில், ராமர் கோவில், கோதண்ட ராமர் கோவில், தனுஷ் கோடி, பாம்பன் ரோடு பாலம் உள்ளிட்ட இடங்களிலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகமாக இருந்தது.

கோடை விடுமுறையை தொடர்ந்து ராமேசுவரம் கோவிலுக்கு பக்தர்கள் வருகை அதிகரித்துள்ளதால் சீதா தீர்த்தம் சாலையில் இருந்து ராமர் தீர்த்தம், திட்டக்குடி சந்திப்பு, தனுஷ்கோடி செல்லும் சாலை, கோவில் செல்லும் சாலை வரையிலும் வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்றபடி ஒன்றன்பின் ஒன்றாக சென்றன. நகரின் பல்வேறு இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

# திருச்செந்தூர் கோவிலில் அலைமோதிய பக்தர்கள் கூட்டம்

**திருச்செந்தூர், மே 5:**



முருகப்பெருமானின் அறுபடைவீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நாள்தோறும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மட்டுமல்லாமல் ஆந்திரா, கேரளா, கர்நாடகா, புதுச்சேரி போன்ற மாநிலங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து செல்கின்றனர்.


கோடை விடுமுறையை ஒட்டி கடந்த 2 வாரமாக திருச்செந்தூரில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது. வரும் வாரம் பிளஸ்-2, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு முடிவுகள் வெளியாக உள்ள நிலையில் தேர்வுகளில் வெற்றி பெறவும், உயர் கல்வியில் இடம் கிடைக்கவும், வேலை வாய்ப்புகள் கிடைக்க வேண்டியும் பெற்றோர் குடும்பத்துடன் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய வந்தவாறு உள்ளனர். இன்று ஞாயிறு விடுமுறை நாள் என்பதால் கோவிலில் கூட்டம் வழக்கத்தை விட அதிகமாக காணப்பட்டது. பக்தர்கள் அதிகாலையில் இருந்தே கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் சுமார் 3 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

கோவில் நடை வழக்கம்போல் இன்று காலை அதிகாலை 4 மணிக்கு திறக்கப்பட்டது.

5 மணிக்கு விஸ்வரூபம், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம், தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

# சித்திரை பிரம்மோற்சவ விழாவை ஒட்டி திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் கருட சேவை உற்சவம்

**சென்னை, மே 5:**



திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் சித்திரை பிரம்மோற்சவ விழாவையொட்டி, கருட வாகனத்தில் பார்த்தசாரதி பெருமாள் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

சென்னை, திருவல்லிக்கேணியில் அமைந்துள்ள பார்த்தசாரதி சுவாமி கோயிலில், இந்த ஆண்டுக்கான சித்திரை பிரம்மோற்சவ விழா கடந்த 1-ம் தேதி கொடியேற்றத்துடன் கோலாகலமாகத் தொடங்கியது.

தொடர்ந்து, புன்னைமர வாகனம், சேஷ வாகனம், சிம்ம வாகனத்தில் சுவாமி வீதி உலா வந்தார். விழாவின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான கருட சேவை நேற்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அதிகாலை 5 மணி அளவில், கம்பீரமான கருட வாகனத்தில் பார்த்தசாரதி பெருமாள் எழுந்தருளினார். சிங்கராச்சாரி தெரு, தேரடி தெரு, வடக்கு குளக் கரை தெரு மற்றும் தெற்கு மாட வீதிகள் வழியாக சுவாமி வீதி உலா வந்தபோது, ஆயிரக்கணக்கான பக்தர்கள் 'கோவிந்தா.. கோவிந்தா..' என முழக்கமிட்டு சுவாமியை தரிசித்தனர்.


தொடர்ந்து, பகல் 12 மணி அளவில் ஏகாந்த சேவையும், இரவு அம்ச வாகனத்தில் சுவாமி வீதி உலாவும் நடைபெற்றது. பிரம்மோற்சவத்தின் தொடர்ச்சியாக, இன்று காலை சூரிய பிரபை வாகனத்திலும், இரவு சந்திர பிரபை வாகனத்திலும் சுவாமி எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளிக்க உள்ளார்.

இன்று (மே 5) நாச்சியார் திருக்கோலம் உற்சவம் நடைபெற உள்ளது. பிரம்மோற்சவ விழாவின் மிக முக்கிய நிகழ்வான தேரோட்டம் வரும் 7-ம் தேதி காலை 7 மணிக்கு நடைபெற உள்ளது.

அலங்கரிக்கப்பட்ட பிரம்மாண்ட தேரில் பார்த்தசாரதி சுவாமி எழுந்தருளி மாட வீதிகளில் வலம் வரவுள்ளார். இதற்காக தேரை தயார் செய்யும் பணிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை கோயில் நிர்வாகத்தினர் மிகத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

# மதுரை விஜயத்தை முடித்துக் கொண்டு புறப்பட்டார் கள்ளழகர்

**மதுரை, மே 5:**



மதுரை தல்லாகுளம் ராமநாதபுரம் மன்னர் சேதுபதி மண்டகப்படியில் பூப்பல்லக்கில் எழுந்தருளிய கள்ளழகரை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நேற்றிரவு முதல் இன்று காலை வரைவிடிய விடிய தரிசனம் செய்தனர்.

மே 6-ல் திருவிழா நிறைவுபெறுவதை முன்னிட்டு இன்று மலைக்குப் புறப்படுகிறார். மதுரை அழகர்கோவில் கள்ளழகர் கோயில் சித்திரைத் திருவிழா ஏப்.27-ம் தேதி தொடங்கியது.

மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் அளிக்க சுந்தரராஜப் பெருமாள் கள்ளழகர் கோலத்தில் ஏப்.29-ல் அழகர் மலையிலிருந்து மதுரைக்குப் புறப்பட்டார். ஏப். 30-ல் மூன்று மாவடியில் எதிர்சேவை நடந்தது. மே 1-ம் தேதி அதிகாலை 5.48 மணிக்கு பச்சைப் பட்டு உடுத்தி கள்ளழகர் தங்கக் குதிரையில் வைகை ஆற்றில் இறங்கினார். ராமராயர் மண்டபத்தில் பக்தர்கள் தண்ணீர் பீய்ச்சி அடித்து தீர்த்தவாரி செய்து குளிர்வித்தனர். அன்றிரவு வண்டியூர் வீரராகவப் பெருமாள் கோயிலில் தங்கினார்.

இதையடுத்து 6-ம் நாளான மே 2-ம் தேதி மதுரை வண்டியூரிலுள்ள பெருமாள் கோயிலிலிருந்து கருட வாகனத்தில் புறப்பாடாகி தேனூர் மண்டபத்தில் சுந்தரராஜ பெருமாள் எழுந்தருளினார்.

அங்கு திருமஞ்சனமாகி மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் அளித்தார். அதைத் தொடர்ந்து ராமராயர் மண்டபத்தில் இரவு 11 மணியளவில் எழுந்தருளினார்.

அங்கு திருமஞ்சனமாகி இரவு தொடங்கி விடிய விடிய தசாவதார நிகழ்ச்சி நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் விடிய விடிய சுவாமி தரிசனம் செய்தனர்.






## நலம் தரும் மருத்துவம்

### பழங்கள் உண்ணுவதால் ஆபத்தா?

'பழங்களையும் காய்கறிகளையும் நிறைய சாப்பிடுங்கள்' என்ற அறிவுரையை நாம் அனைவரும் கேட்டிருக்கிறோம். ஆரோக்கிய உலகில் பழங்கள், வைட்டமின்கள், ஆன்டிஆக்ஸிடன்ட்கள் மற்றும் நார்ச்சத்து நிறைந்த இயற்கையின் கொடையாகப் போற்றப்படுகின்றன.

ஆனால் நாம் சத்துக்கள் நிறைய கிடைக்க வேண்டும் என்பதற்காக பழங்களுடன் சில ஒவ்வாத பொருட்களைச் சேர்த்து அறியாமையால் ஊடகங்களில் சொல்வதைக் கேட்டு சாப்பிட்டு விட்டு அவதிக்குள்ளாகிறோம். உதாரணமாக ஆப்பிள்களுடன் மாம்பழம், வாழைப் பழங்கள் மற்றும் ஆரஞ்சுப் பழச்சாறு போன்ற பழங்களின் கலவை ஆரோக்கியமற்ற சர்க்கரை உத்வேகத்துடன் உங்கள் வாழ்க்கையைத் தலைகீழாகப் புரட்டிப் போடும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

பழங்களில் உள்ள சர்க்கரை இயற்கையானது, அதனால் பெரிய தீங்கு எதுவும் ஏற்படாது என்று மக்கள் பொதுவாகக் கருதுகின்றனர். இருப்பினும், பழங்களில் இருந்து கிடைக்கும் அதிகப்படியான பிரக்டோஸ் கூட, கொழுப்பு கல்லீரல் அல்லது உடலில் டிரைகிளிசரைடுகளின் அளவு அதிகரிப்பது போன்ற பின் விளைவுகளுக்கு வழிவகுக்கும். சாப்பிடும் நேரமும், பழங்களைச் சேர்த்து உண்ணும் முறையும் மிகவும் முக்கியம். மேலும், உணவுக்குப் பிறகு அதிக அளவில் பழங்களைச் சாப்பிடுவது அல்லது மாவுச்சத்து நிறைந்த உணவுகளுடன் சேர்த்து உட்கொள்வது, உடலின் மொத்த கலோரிச் சுமையை அதிகரிக்கக்கூடும். எலுமிச்சை, ஆரஞ்சு, தர்பூசணி மற்றும் திராட்சைப் பழம் போன்ற அமிலத்தன்மை கொண்ட பழங்களை மாலையில் உட்கொள்ள வேண்டாம், ஏனெனில் அது செரிமானத்தில் சிக்கலை ஏற்படுத்தக்கூடும். பிரியாணியை சாப்பிட்ட பின் தர்பூசணி சாப்பிட்டதால் ஏற்பட்ட உணவு விஷ பாதிப்பு காரணமாக மும்பையைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்தனர் என்ற அண்மை செய்தி அதிர்ச்சியை தருவதாக உள்ளது.

நான்கு பேர் கொண்ட அந்தக் குடும்பம் தன் வீட்டில் நெருங்கிய உறவினர்களுடன் ஒன்றாக இரவு உணவாக பிரியாணி சாப்பிட்டுள்ளனர். பின்னர் உறவினர்கள் தத்தம் வீடுகளுக்குச் சென்ற பின் நள்ளிரவில், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரும் தர்பூசணி சாப்பிட்டதாகக் கூறப்படுகிறது. சிறிது நேரத்திற்குப் பிறகு, வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகளுடன், நால்வரும் உடல்நலக்குறைவாக உணரத் தொடங்கினர். அவர்கள் நால்வரும் மருத்துவமனைக்கு அவசரமாகக் கொண்டு செல்லப்பட்டனர், அங்கு அவர்கள் அனைவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இதன் தொடர்பாக தீவிர விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

தர்பூசணி போன்ற பழங்களில் நல்ல நிறத்திற்காக சேர்க்கப்படும் வேதிப் பொருட்கள் தீங்கு விளைவிக்கக் கூடும். கவனமாக இருப்பது நல்லது.

# தூக்கம் வரவில்லையா? உங்கள் லேப்டாப்பில் இருக்கும் இந்த ஒரு பட்டன் போதும்!

இன்றைய டிஜிட்டல் உலகில் அனைவரது கைகளிலும் தவழ்ந்துக்கொண்டிருக்கிறது செல்போன், மடிக்கணினி, நோட்பேட், டேப்லெட் மற்றும் இன்ன பிற சாதனங்கள். இவற்றைப் பயன்படுத்தும் கால அளவும் அதிகரித்துக்கொண்டே போகிறது. இத்தகையச் சாதனங்களைப் பயன்படுத்தும்போது அவற்றை இரவு விளக்கு மோடில் (NIGHT MODE) போட்டு பயன்படுத்துவது நமது கண்களுக்கு மிகுந்த நன்மை அளிக்கும்.


கேட்ஜெட்டுகளில் இருக்கும் நீல விளக்கு நமது கண்களுக்கு உண்டாக்கும் பாதிப்புகள்.

நீல விளக்கு என்றால் என்ன? நாம் பயன்படுத்தும் லேப்டாப் கம்ப்யூட்டர், செல்போன்கள் மற்றும் செயற்கை விளக்குகளில் இருந்து நீல நிற வெளிச்சம் வெளியேறுகிறது. சூரியனில் இருந்தும்கூட நீல நிற வெளிச்சம் வெளியேறுகிறது. ஆனால், அது நமது ஆரோக்கியத்திற்கு நல்லது. ஆனால், கேட்ஜெட்டுகள் உமிழும் நீல நிற வெளிச்சம் நம் கண்களுக்கு நல்லது அல்ல.

ஏனென்றால் அவை நமது தூக்கத்தைப் பாதிக்கின்றன. தூக்கத்தை உற்பத்தி செய்யக்கூடிய மெலடோனின் என்கிற ஹார்மோனைப் பாதித்து தூக்கம் வராமல் தடுக்கின்றன. மேலும், இந்த நீல ஒளி பலவிதமான அசௌகரியங்களை கண்களுக்கு ஏற்படுத்துகிறது. கண்களின் பார்வைத் திறனையும் பாதிக்கிறது.

இதுபோன்ற சாதனங்களில் இரவு விளக்கு மோடைப் பயன்படுத்துவது நல்லது.

நீல ஒளிக்குப் பதிலாக இவை மஞ்சள் நிற ஒளியை வெளியிடுகின்றன. இவை கண்களுக்கு அவ்வளவாக பாதிப்பை ஏற்படுத்துவது இல்லை.




1. இந்த மஞ்சள் நிற ஒளி கண்களை சோர்வடைவதில் இருந்து காக்கிறது.

2. நமது ஸ்கிரீன் ஒரு இதமான சூழலை உருவாக்குகிறது. அது கண்களையும் காக்கிறது.

3. இந்த மஞ்சள் நிற விளக்கு வெளிச்சம் மெலடோனின் உற்பத்தியை அதிகரித்து விரைவிலேயே தூக்கம் வரச் செய்துவிடும்.

4. மஞ்சள் நிற ஒளியில் வாசிக்கும்போது கண்களுக்கு எந்த விதமான பாதிப்பையும் ஏற்படுத்துவது இல்லை. அது சந்தோஷமான மன நிறைவைத் தருகிறது. நல்ல வாசிப்பு அனுபவம் தருகிறது.

5. சிலருக்கு நீல நிற ஒளி மைக்ரேன் தலைவலியை உண்டாக்கி மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். அவர்களுக்கு மஞ்சள் நிற ஒளி இந்தத் தலைவலி பிரச்னைகளில் இருந்து நிவாரணம் தருகிறது.

6. இந்த மஞ்சள் நிற ஒளி அல்லது நைட் மோடை பகல் நேரத்திலும் பயன்படுத்தலாம்.

* கணினி மற்றும் செல்போன்களை குறிப்பிட்ட அளவு பிரைட்னஸ் வைத்து பார்ப்பது நல்லது.

* அதே நேரம் கண்களில் இருந்து சற்று குறிப்பிட்ட இடைவெளியில் வைத்து இவற்றை பார்ப்பது கண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்.

* கண்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு 20 20- 20 விதியை பயன்படுத்துவது அவசியம். ஒவ்வொரு 20 நிமிடத்திற்கு ஒரு முறையும் 20 நொடிகளுக்கு 20 அடி தூரத்தில் உள்ள பொருட்களை பார்க்க வேண்டும். இது கண்களை அழுத்தத்திலிருந்து காக்கிறது.

* நிறைய பேர் இரவு விளக்கை அணைத்துவிட்டு படுக்கையில் படுத்துக்கொண்டு போர்வைக்குள் செல்போனை வைத்துப் பார்க்கிறார்கள். இது கண்களை மிகவும் பாதிக்கும். பார்வைத் திறன் குறைபாட்டை அதிகப்படுத்தும்.

பகல் நேரமோ இரவு நேரமோ செல்போன், கம்ப்யூட்டர் திரையை நீண்ட நேரம் பார்க்காமல் அவ்வப்போது ஓய்வு கொடுத்து 20 20- 20 விதியை பயன்படுத்த வேண்டும்.

அவற்றை நம் கண்களுக்கு மிக அருகில் வைத்து பார்க்காமல் ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் வைத்து மடிக்கணினி அல்லது கம்ப்யூட்டரை பயன்படுத்துவது நல்லது. இரவில் பயன்படுத்தும்போது அறையின் வெளிச்சமும் மிகவும் முக்கியம். அதிக அளவு விளக்கின் வெளிச்சம் கண்களை கூசச் செய்யும். அளவான வெளிச்சம் போதுமானது என்று ஆய்வுகள் கூறுகின்றன.

# விலை




“இந்தாப்பா... உனக்கு ரொம்பப் பிடிச்ச பாதாம் அல்வா. சுடச் சுட இருக்கு, சாப்பிடு!” என்று தட்டை நீட்டினாள் சுமதி.

அவள் மகன் சந்தோஷ் செல்போனைப் பார்த்தபடியே, “இப்போ வேண்டாமா, அப்புறம் சாப்பிடுறேன். டிஸ்டர்ப் பண்ணாதே!” என்று எரிச்சலாகச் சொன்னான். சுமதி மெல்ல அந்தத் தட்டை மேஜையில் வைத்துவிட்டுச் சென்றாள்.

சந்தோஷ் ஒரு பெரிய கார்ப்பரேட் நிறுவனத்தில் வேலை செய்கிறான். எப்போதும் வேலை, லேப்டாப், மீட்டிங் என ஓடிக்கொண்டே இருப்பவன். அவன் தந்தை இறந்து ஐந்து வருடங்கள் ஆகிறது. சுமதியின் உலகம் இப்போது சந்தோஷ் மட்டும்தான்.

அன்று இரவு சந்தோஷ் தற்செயலாகத் தன் அறையைச் சுத்தம் செய்யும்போது, அலமாரியின் அடியில் ஒரு பழைய சிறிய நோட்டுப் புத்தகம் இருப்பதைக் கண்டான். அது அவன் தந்தை உயிருடன் இருந்தபோது எழுதிய 'வரவு-செலவு' கணக்கு புத்தகம்.

ஆர்வமாகப் புரட்டியவனுக்கு ஒரு பக்கம் அதிர்ச்சியைத் தந்தது. அந்தப் பக்கத்தின் தலைப்பு: "சந்தோஷின் சிரிப்பு - விலை"

உள்ளே இப்படி எழுதப்பட்டிருந்தது:

ஜூன் 12: "இன்று சந்தோஷுக்குப் பிடித்த சைக்கிள் வாங்கினேன். விலை: 3000 ரூபாய். பதில்: அவன் முகத்தில் தெரிந்த அந்த ஒரு நிமிஷச் சிரிப்பு - விலை மதிப்பற்றது."

ஆகஸ்ட் 20: "சந்தோஷுக்குக் காய்ச்சல். இரவு முழுக்க அவன் அம்மா தூங்கவில்லை. செலவு: மருந்து மாத்திரை 500 ரூபாய். பலன்: அவன் நிம்மதியாகத் தூங்கிய அந்த நிமிடம் - கோடி ரூபாய்."

கடைசிப் பக்கத்தில் அவனது தாய் சுமதியின் கையெழுத்தில் ஒரு குறிப்பு இருந்தது:

"இன்று சந்தோஷுக்குப் பிடித்த பாதாம் அல்வா செய்யப் பால் வாங்கினேன். விலை: 60 ரூபாய். அவன் எப்போதும் போல 'அப்புறம் சாப்பிடுறேன்' என்று சொன்னான். பரவாயில்லை... அவன் என் அருகில் ஆரோக்கியமாக இருக்கிறான் என்பதே எனக்குப் போதும். அவன் பேசும் அந்த நான்கு வார்த்தைகளுக்காக எத்தனை காலம் வேண்டுமானாலும் நான் காத்திருப்பேன்."

சந்தோஷின் கைகள் நடுங்கின. மேஜையில் ஆறிப்போயிருந்த அந்த அல்வாவைத் தட்டில் எடுத்துப் பார்த்தான். அது வெறும் அல்வா அல்ல; தன் அம்மா அவனுக்காகச் செலவிட்ட காலமும், காட்டிய மௌனமான அன்பும் அதில் உறைந்திருந்தது.

மெல்லத் தாயின் அறைக்குச் சென்றான். அங்கே சுமதி கட்டிலில் சுருண்டு படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளது நரைத்த முடிகளும், சுருங்கிய கைகளும் அவனுக்காக அவள் தேய்ந்த கதையைச் சொல்லின.

சந்தோஷ் அந்த ஆறிப்போன அல்வாவை ஒரு ஸ்பூன் எடுத்து வாயில் வைத்தான். அதன் இனிப்பை விட, அவன் கண்களில் இருந்து வழிந்து கன்னத்தில் பட்ட கண்ணீரின் உப்பு அவனுக்கு அதிகமாகத் தெரிந்தது.

அவள் கைகளைப் பற்றிக்கொண்டு மெல்லச் சொன்னான், "சாரிம்மா... இனிமே உன்னை நான் காக்க வைக்க மாட்டேன்."

உறவுகளின் மதிப்பு அவர்கள் நம்மிடம் பேசும்போது தெரிவதில்லை; அவர்கள் நமக்காகக் காத்திருக்கும் மௌனத்தில் இருக்கிறது!

லால்குடி
**வெ.நாராயணன்**
மாம்பாக்கம்,
சென்னை

# "உறவோ புதுமை"

முதல் கடிதம் வந்த நாள் அகிலா சிரித்தாள்.

“எவனோ தவறாப் போட்டிருக்கான்” என்று நினைத்தபடியே கவரைத் திருப்பிப் பார்த்தாள். அதில் அவளுடைய வீட்டு முகவரி சரியாக இருந்தது ஆனால் பெயர் வேறு.

இரண்டாவது கடிதம்... அதைப் பிரித்த போது அகிலாவின் சிரிப்பு கொஞ்சமாய் மாறியது.

“உன் சிரிப்பைப் பார்த்தாலே நாள் முழுக்க எனக்கு வெளிச்சம்...” என்று எழுதப்பட்டிருந்தது. அந்த வார்த்தைகள் தனக்கானது அல்ல, என்பதை அவள் அறிவாள். ஆனாலும் அதைப் படிக்கும் போது அது தன்னிடம் பேசுவது போல பரவசமாய் இருந்தது.

மூன்றாவது கடிதம்... எப்போது வருமென்று அகிலாவே காத்திருந்தாள். “இன்று நீ நீல நிற சல்வார் போட்டிருந்தாய்...” என்று எழுதப்பட்டிருந்தது.




அவள் அதிர்ந்தாள். அடுத்த வீட்டு பெண்தான் அன்று நீல நிற சல்வார் அணிந்திருந்தாள். அகிலா புரிந்து கொண்டாள். இந்தக் காதல் கடிதங்களெல்லாம் அடுத்த வீட்டுப் பெண்ணுக்கானது என்பதை. ஆனால், புரிந்திருந்தும் அந்த கடிதங்கள் வரும் ஒவ்வொரு நாளும் அவள் உள்ளத்தில் ஏதோ மலர்ந்தது.

யாரோ ஒருவரின்... யாரோ ஒருத்தரைப் பற்றிய வர்ணனைகள் தவறான முகவரியில் அகிலாவின் இதயத்தை தேடி வந்து கொண்டேயிருந்தன.

ஒரு நாள்... அகிலா அடுத்த வீட்டை பார்த்தாள். அங்கிருந்து வெளிவந்த பெண் சிரித்தாள். பேசினாள். அவளுக்காக யாரோ எழுதும் அந்த காதல் மடல்கள் பற்றி அவளுக்கு சுத்தமாகவே தெரியவே இல்லை.

அகிலா மனதில் ஒரு போராட்டம். "இந்தக் கடிதத்தை கொடுக்கலாமா...?” இல்லை...... இதெல்லாம் எனக்கே வந்ததாய் நினைக்கலாமா...?”

அடுத்த கடிதம்... 'நாளை மாலை... நான் உன்னை சந்திக்க வருகிறேன்.”என்று எழுதப்பட்டிருந்தது. அகிலா முழு இரவும் தூங்கவில்லை.

மறுநாள் மாலை... கையில் அந்தக் கடிதத்துடன் வெளியில் நின்றாள்.

தூரத்தில் ஒரு ஆண் வந்தான். அவளது இதயம் வேகமாக துடித்தது. அவன் அருகில் வந்தான். ஒரு நொடி அவன் கண்கள் அவளை பார்த்தது.

“அகிலா தானே...?” கேட்டான். அதிர்ந்தாள். "இதென்ன என் பெயர்ச் சொல்லுகிறான்?"

“குழப்பமடைய வேண்டாம்... நான் தெரிந்தேதான்... அந்த கடிதங்களை உன் வீட்டு அனுப்பினேன்...

“முதல் நாள் நீ அந்த கடிதத்தை திறந்து வாசிச்சதை பார்த்தேன்... அப்பவே புரிஞ்சிட்டேன்.. அந்த வார்த்தைகள் யாருக்கு சேரணும்னு...”

அகிலாவின் கண்கள் ஈரமாயின. “அதனால்தான்... நான் தவறான முகவரியை சரியாக்கினேன்...” என்றான். அவள் புரிந்துகொண்டாள், சில காதல்கள் தவறாக வராது. அவை... சரியான இதயத்தைத் தேடி தவறான வழியிலாவது வந்து சேரும், என்று.



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

# விவேகானந்தர் கதைகள்
# ராக்ஃபெல்லருக்கு வழங்கிய அறிவுரை

**A S GOVINDA RAJAN**


சுவாமி விவேகானந்தர், அமெரிக்காவில் சிகாகோ மாநகரத்தில் தங்கியிருந்தார். அங்கு அவரை ராக்ஃபெல்லர் என்பவர் சந்தித்தார். ராக்ஃபெல்லர், பிற்காலத்தில் உலகில் புகழ் பெற்ற பெரிய பணக்காரர்களில் ஒருவராக விளங்கினார். விவேகானந்தரைச் சந்தித்தபோது, ராக்ஃபெல்லர் அவ்வளவாகப் பிரபலம் ஆகவில்லை. ராக்ஃபெல்லரின் நண்பர்கள் பலர், விவேகானந்தரைப் பற்றி அவ்வப்போது ராக்ஃபெல்லரிடம் கூறியிருந்தார்கள். எனவே விவேகானந்தரைப் பற்றி ராக்ஃபெல்லர் நிறையவே கேள்விப்பட்டிருந்தார் என்றாலும் ஏனோ அவர், விவேகானந்தரைச் சந்திப்பதற்குத் தயங்கினார்.

விவேகானந்தர் அமெரிக்காவில் பல இடங்களுக்குச் சென்று, சொற்பொழிவுகள் செய்துகொண்டிருந்தார். அவர் ஒருமுறை ராக்ஃபெல்லரின் நண்பர் ஒருவர் வீட்டில் தங்கியிருந்தார். அப்போது ஒருநாள் திடீரென்று, விவேகானந்தரைச் சந்திக்க வேண்டும்! என்ற தீவிர எண்ணம் ராக்ஃபெல்லருக்கு ஏற்பட்டது.

அந்த வேகத்தில் அவர் விவேகானந்தர் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்றார். அங்கு அவருக்காக வீட்டின் கதவை வேலைக்காரன் திறந்தான். அந்த வேலைக்காரனைப் பிடித்துத் தள்ளிவிட்டு, ராக்ஃபெல்லர் முன் அனுமதிகூடப் பெறாமல் விவேகானந்தர் இருந்த அறைக்குள் நுழைந்தார். விவேகானந்தர் அப்போது அமர்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தார்.



அவ்வளவு வேகமாக ராக்ஃபெல்லர் சென்றும் விவேகானந்தர் தன் முகத்தைத் தூக்கி, வந்தது யார்? என்று பார்க்கவில்லை. இவ்விதம் சிறிது நேரம் கழிந்தது. தலை கவிழ்ந்திருந்த நிலையில் விவேகானந்தர் தலை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் திடீரென்று ராக்ஃபெல்லர் மட்டுமே அறிந்திருந்த அவருடைய கடந்த கால நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார். இறுதியில் அவர், உங்களிடம் இருக்கும் பணம் உண்மையில் உங்களுடையது இல்லை. உலகிற்கு நன்மை செய்வதற்காக இறைவன் உங்களிடம் அந்தப் பணத்தைக் கொடுத்து வைத்திருக்கிறார். அதனால் உலகிற்கு நன்மை செய்வதற்கு உரிய ஒரு வாய்ப்பை இறைவன் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார், அவ்வளவுதான்! எனவே நீங்கள் உங்களிடம் இருக்கும் பணத்தை உலக நன்மைக்காகச் செலவு செய்யுங்கள் என்று கூறினார். இவ்விதம் விவேகானந்தர் கூறியது ராக்ஃபெல்லருக்குப் பிடிக்கவில்லை. நான் என்ன செய்ய வேண்டும் என்பதை இன்னொருவர் எனக்குச் சொல்வதா? என்று அவருக்குத் தோன்றியது. எனவே அவர், நன்றி, வணக்கம், சென்று வருகிறேன் என்றுகூட எதுவும் சொல்லாமல், வேகமாக அந்த அறையைவிட்டு வெளியேறினார்.



ஆனால் விவேகானந்தரின் ஆன்மிக சக்தி ராக்ஃபெல்லரிடமும் வேலை செய்தது. ஒரு வாரம் கழிந்திருக்கும். ராக்ஃபெல்லர், பொதுத்தொண்டு நிறுவனம் ஒன்றுக்குப் பெரிய ஒரு தொகையை நன்கொடை அளிக்க வேண்டும் என்று முடிவு செய்தார். எனவே அவர் அதற்கான திட்டங்களை விரிவாக ஒரு காகிதத்தில் எழுதி, அதை எடுத்துக்கொண்டு விவேகானந்தரைச் சந்திப்பதற்குச் சென்றார். முன்பு போலவே அதே வேகத்தில் அவர் மீண்டும் முன் அனுமதியின்றி, விவேகானந்தர் இருந்த அறைக்குள் நுழைந்தார்.

அன்றைய தினமும் விவேகானந்தர் ஏதோ படித்துக் கொண்டிருந்தார். ராக்ஃபெல்லர், தாம் கொண்டு சென்றிருந்த காகிதத்தை விவேகானந்தர் முன்பு வேகமாக வீசி இதோ, இதைப் படித்துப் பாருங்கள்! இப்போது உங்களுக்குத் திருப்தி தானே! நீங்கள் இப்போது எனக்கு நன்றி சொல்ல வேண்டும்! என்று கூறினார். விவேகானந்தர் அசையவும் இல்லை, ராக்ஃபெல்லரைத் தலை நிமிர்ந்து பார்க்கவும் இல்லை. அவர் அமைதியாக ராக்ஃபெல்லர் காகிதத்தில் எழுதியிருந்த அனைத்தையும் படித்தார்.

படித்து முடித்ததும் அவர், நான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டியதில்லை. நீங்கள் தாம் எனக்கு நன்றி சொல்ல வேண்டும் என்றார். அதுதான் ராக்ஃபெல்லர் தமது வாழ்க்கையில் அளித்த முதல் பெரிய நன்கொடை ஆகும். ராக்ஃபெல்லர் தன்னிடமிருந்த செல்வத்தை மக்களுக்குப் பயன்படும் வகையில், நல்ல விதத்தில் செலவு செய்வதற்கு விவேகானந்தர் வழிகாட்டினார். எனவே அவர்தாம் விவேகானந்தருக்கு, நன்றி சொல்ல வேண்டிய நிலையில் இருந்தார்.

தொடரும்...

# இன்று ஒரு சிந்தனை

## நட்பு பற்றியது



நண்பர்கள் பற்றி ஒரு
பழமொழி உண்டு உன்
நண்பனைக் காட்டு
உன்னைச் சொல்கிறேன்
என்று

இதனாலேயே நான்
தேடி தேடி எவரும்
உயிர்த்தோழியாய் என்
வாழ்நாட்கள் ஆரம்பம்
முதல் இன்றுவரை
வரவே இல்லை போலும்

கல்யாணம் ஆன
பின்பு இவரிடத்தில்
நான் கற்றுக்கொண்டது
பகைமை வேண்டாம்
நட்புகளைப் பற்றி
ரொம்ப ஆராயாதே
என்பது இது சரியாகப்
பட்டதால் இப்பவும்
யாரிடமும் பகை
கிடையாதே தவிர உற்ற
தோழி என யாரும் இல்லை

என் மகனிடமிருந்து கற்றது
எல்லாருமே நல்லவர்கள்
தான் ஏன் அவரைப்
போல மாறிடுவேன் என்று
பயப்படுகிறாய் உன்னைப்
போல் அவரை மாற்றேன்
என்பதை
ஆஹா இதுவும் நன்றாக
உள்ளதே எனத் தோன்றியது

எனவே வள்ளுவர் நட்பு பற்றி
கூறிய பண்புகள் கண்டு
வியந்து போனவள் வாழ்க்கை
அனுபவத்தில் வேறுபடுகிறதே
என்றும் தோன்றியது
நட்பு போல அருமையான
செயல் எதுவுமில்லை
அதனைப் பாதுகாக்கவும்
எதுவுமில்லை
நல்ல தன்மையோடு கொண்ட
நட்பு வளர்பிறை போல் வளரும்
பேதையின் நட்பு தேய்பிறை
போலத் தேயும்

படிக்க படிக்க இனிமை தரும்
நூலைப் போன்றது பண்பு
உடையவர்களின் நட்பு
பழகபழக மேன்மேலும் இன்பம்
தருவதாகும்

சிரித்து மகிழ்வதற்காக மட்டும்
அன்று நட்பு அவர் மிகுதியாக
தவறு செய்யும்போது அவரைக்
கண்டித்தும் திருத்துவதாகும்
நல்ல நட்பு

பேசி பழகுதல் நட்பிற்குத்
தேவையில்லை ஒத்த
உணர்வுகளே நட்பு என்னும்
உரிமையைத் தந்துவிடும்

முகத்தில் மகிழ்வை
வரவழைத்து உள்ளம்
கலக்காமல் செய்வது அல்ல
நட்பு நட்பு உள்ள மகிழ்வோடு
நட்புக் கொள்ளுதலே நல்ல
நட்பு
அழிவிலிருந்து நட்பைக்
காப்பாற்ற முற்பட்டுத்
தன்னையும் மீறிய அழிவின்
போதும் தானும் அவரோடு
இருத்தலே நல்ல நட்பாகும்

மன வேறுபாடு இல்லாமல்
முடிந்த இடமெல்லாம்
இணைந்து நின்று
காத்துப்பேணும் நிலையே
நட்பு அதுவே நிலையாக தங்கி
இருக்கும் இடமாகும்

ஒரு நட்பின் அளவை அது
சிறப்பாக இருப்பினும் எடுத்துக்
கூறினால் அந்த நட்பு தன்
சிறப்பை இழந்துவிடும்

### எத்தனை சிறப்பு இதற்கு

நட்பு என்பது குழந்தைப்பருவம்
முதல் ஆரம்பிக்கிறது
என் நண்பன் தோழி என்று
சொல்வதில் மிகப் பெருமை
நிறைய நேரங்களை
அவர்களுடன் கழிக்க விரும்பும்
பருவம்
ஏன் இரவு வருகிறது இப்போது
பிரிய வேண்டுமே என்ற
ஏக்கத்தைக் கொடுப்பது
நட்பு கொண்டபின் யார்
திட்டினாலும் காதில்
வாங்குவதில்லை
ஆனால் எத்தனை பேருக்கு
இந்த பால்ய நட்பு தொடர்ந்து
வந்திருக்குமோ தெரியாது

என்னைப் பொருத்தவரை
தொடர் நட்பு என்பது இல்லை
எத்தனையோ நட்புகள் வந்து
போயினர்
உயிர்த்தோழி நண்பன்
என்பவர் யாரும் இலர்
என் வளர்ப்பு முறை
காரணமாக இருக்கலாம்
முகநூலுக்கு வந்த பிறகு
நிறைய முகமறியா நட்புகள்
பலர்
இங்கும் யாருடனும் குளோஸ்
இல்லை ஆனால் மதிப்புடன்
கூடிய அன்பு நிறைய உண்டு
இங்கு இருபாலர்களும் நட்பு
கொண்டனர்
இங்கும் கூடாநட்புகளும்
உண்டு இருக்கலாம் ஆனால்
அவர்களைப் பற்றிக்
கவலைப்படுவானேன்

நட்புகளில் பழகும்போது
தான் தெரிகிறது ஈகோவின்
பலதரப்பட்ட முகம்
எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல்
பழகுகிறோம்
என்ற இந்த
ஒத்தவரி
நிஜமோ
உண்மையோ
அல்ல



**பானுமதி நாச்சியார்** சிவகிரி

# தினம் ஒரு தலைவர்கள்: துரைச்சாமி வரலாறு

துரைச்சாமி சிவகங்கைச் சீமையில் ஆங்கிலக் கிழக்கந்தியக் கம்பெனியர்க்கு எதிராக 1785 முதல் 1801 முடியப் போராடி தம் இன்னுயிர் ஈந்த சின்ன மருதுவின் மகன்.

### வாழ்க்கைச் சுருக்கம் :

சின்ன மருது மகன் துரைச்சாமியின் இயற்பெயர் முத்து வடுக நாத துரை என்றும் பின்னர் அப்பெயர் துரைச்சாமி என மருவியது என்றும் சிவகங்கை அம்மானை எனும் நூல் மூலம் அறியமுடிகிறது. துரைச்சாமி உட்பட 11 விடுதலைப் போராளிகளைப் பிடித்துக்கொடுத்தால் 1000 கூலிச்சக்கரங்கள் ( 18ம் நூற்றாண்டு நாணயம்) பரிசாக வழங்கப்படும் என்று ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனித் தளபதி கர்னல் அக்னியூ 1801, அக்டோபர் 1 இல் சிவகங்கை குடிமக்களுக்கு ஒரு பொது அறிவிப்பை பிரகடனப்பத்தினார். மருது சகோதரர்கள் 1801, அக்டோபர் 24 இல் தூக்கிலிடப்பட்ட பின்னர் 15 வயதே ஆன துரைச்சாமி உட்பட 73 விடுதலைப் போராளிகளை மலேயாவின் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் தீவிற்கு (இன்றைய பினாங்கு) 1802, பெப்ரவரி 11 இல் தளபதி வெல்ஸ் நாடுகடத்தி அனுப்பிவைத்தார்

### பினாங்கில் துரைச்சாமி :

1818 ஆம் ஆண்டு தளபதி வெல்ஸ் (COLONEL WELSH) பினாங்குக்குச் சென்றபோது உடல் நலம் குன்றிய தோற்றத்துடன் காணப்பட்ட துரைச்சாமியைக் காண நேரிட்டது. துரைச்சாமியின் இத்தோற்றம் வெல்ஸ் தம் இதயத்தில் கத்தி பாய்ந்தது போன்று இருந்தது என குறிப்பிடுகின்றார்.

### துரைச்சாமியின் இறுதி நாட்கள் :

கிழக்கிந்திய கம்பெனியின் உயர் அதிகாரி ஜெனரல் ஜேம்ஸ் வெல்ஷ், 1818ல் பினாங் வந்து இறங்கினார். ஓய்வெடுப்பதற்காக பினாங்கில் தங்கியிருந்த வெல்ஷைப் பார்க்க ஒரு பார்வையாளன் காத்திருந்தான். அவன் ஒரு கிழவன். தோல் சுருங்கி, தலை நரைத்து, உடல் மெலிந்து, கைகள் நடுங்க நின்று கொண்டிருந்த அந்தக் கிழவனை உற்றுப் பார்த்தான் ஜெனரல் வெல்ஷ்.

"யார்?'

கிழவனால் பதில் சொல்ல முடியாமல் உதடுகள் நடுங்கின. தன்னை வெல்ஷ் அடையாளம் கண்டு பிடித்து விடுவான் என்ற நம்பிக்கையோடு, ஆதரவற்ற கண்களால் ஜெனரல் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் கிழவன்.

அவன் கன்னங்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

"யார் நீ?' இம்முறை கோபத்தில் வெடித்தது வெல்ஷின் குரல். பயத்தில், ஆடிப்



போனான் கிழவன். கைகளை மடித்து, உடம்போடு ஒட்டிக் கொண்டு, கூனிக் குறுகிப் போய், உதடுகளும், கண்களும் துடிக்க, ஒரே ஒரு சொல் வெளிப்பட்டது கிழவனிடமிருந்து...

"துரைசாமி!'

அந்தப் பெயர் வெல்ஷின் முகத்தில் அறைந்தது. இவனா? இவனா? அந்த துரைசாமியா இவன்?

பதினைந்து வயது பையனாக, 1802ல் வெளி உலகக் கொடுமையின் சாயல் கூடப் படியாத குழந்தை முகத்தோடு, தூத்துக்குடியில் கப்பலேற்றப்பட்டு, தீவாந்தர தண்டனைக்காக நாடு கடத்தப்பட்ட அந்தத் துரைசாமியா?

தடித்த ஆற்காடு நாணயத்தைத் தன் இரண்டு விரல்களால் வளைத்து எறிந்த பெரிய மருதுவின் பரம்பரையில் உதித்த துரைசாமியா?

எவ்வளவு தொலைவில் எதிரி இருந்தாலும், குறி தப்பாமல் ஈட்டி எறியும் வீரன்... கர்னல் பதவியில் இருந்த போது வெல்ஷûக்கு வளறித்தடி சுழற்றும் வித்தையைக் கற்றுக் கொடுத்த மாவீரன் சின்ன மருதுவின் மகன் துரைசாமியா?

துரைசாமியைப் பார்த்து இரக்கப்பட்டான் ஜெனரல் ஜேம்ஸ் வெல்ஷ்; ஆனால், கம்பெனி விதிகளுக்கு எதிராக அவனால் துரைசாமிக்கு எந்த உதவியும் செய்ய முடியவில்லை. அவன் வெள்ளை அதிகாரி. ஒரு காலத்தில் அவன் மருதுபாண்டியரின் நண்பன். பிறகு அவர்களை வேட்டை நாயாகத் துரத்திப் பிடித்து, தூக்கில் போட்டவனும் அவன் தான்.

கம்பெனி உத்தரவின் படி துரைசாமியைத் தூத்துக்குடி வரை கொண்டு சென்று, கப்பலேற்றி, "பிரின்ஸ் ஆப் வேல்ஸ்' என்ற தீவுக்கு நாடு கடத்தியவனும் அவன் தான்.

பதினாறு ஆண்டுகளில், தீவாந்தர தண்டனையும், கொத்தடிமை வாழ்க்கையும் ஆங்கிலக் கொடுமைகளும் ஒரு இளைஞனை கிழவனாக்கி விட்ட கொடுமை வெல்ஷை உலுக்கியது. ஆனாலும், அவன் என்ன செய்வான். பாவம்!

இந்த மண்ணில் போராடி வீழ்ந்து, சருகாகி, உரமாகி மக்கிப்போன பல குடும்பங்களை, சிதிலமாகிப் போன அவர்களது பரம்பரைகளை ஒரு நொடி ஈரத்தோடு எண்ணிப் பார்க்க நமக்கு நேரமில்லையே!

பினாங்கில் வெல்ஷும், துரைசாமியும் சந்தித்த அந்த நிகழ்ச்சிதான் மருதுபாண்டியர் வாரிசு பற்றி ஆதார பூர்வமாகக் கிடைத்த கடைசிச் செய்தி!

இன்னும் எத்தனை, எத்தனை துரைசாமிகளோ!

1891, மே 18 ஆம் நாள் போராளி துரைச்சாமியின் மகன் மருது சேர்வைகாரன் என்பான் மதுரைக் கலக்டரிடம் ஓய்வூதியம் கேட்டு விண்ணப்பித்த மனுவில் துரைச்சாமியின் இறுதி நாட்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். துரைச்சாமி பினாங்கிலிருந்து சென்னைக்கு கொண்டுவரப்பட்டார். அவர் ஆங்கில அரசிடம் பாதுகாப்புக் கோரி மதுரையில் தங்கியிருக்க அனுமதி கேட்டிருந்தார். ஆனால் திடிரென துரைச்சாமி நோய்வாய்ப்பட்டு சிவகங்கைக்கு கொண்டுவரப்பட்டு அங்கு காலமானார் என்று அவரது மகன் குறிப்பிடுகின்றார்...

# திருப்பதியில் நடிகை திரிஷா சாமி தரிசனம்



திருப்பதியில் நடிகை திரிஷா சாமி தரிசனம் கோவிலில் சுப்ரபாத சேவையின்போது அவர் கோவிலில் சாமி தரிசனம் நேற்று பிறந்தநாள்.. திருப்பதியில் நடிகை திரிஷா சாமி தரிசனம்

நடிகை திரிஷா நேற்று அதிகாலை திருப்தி ஏழுமலையான் கோவிலில் சாமி தரிசனம் செய்தார்.

1983இல் பிறந்த திரிஷா இன்று (மே 4) தனது 42வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இதனை முன்னிட்டு அவர் திருப்பதி சென்று சாமி தரிசனம் செய்துள்ளார்.

நேற்று காலை கோவிலில் சுப்ரபாத சேவையின்போது அவர் சாமி தரிசனம் செய்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. சூர்யாவுடன் அவர் இணைந்து நடித்த கருப்பு படம் வரும் மே 14 அன்று வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.



பாலிவுட் சினிமாவில் வளர்ந்து வரும் இளம் நடிகைகளில் ஒருவர் சாரா அலிகான். இவர் பிரபல பாலிவுட் நடிகர் அமீர் கானின் மகள் ஆவார். இவர் நடிப்பில் இதுவரை Zara Hatke Zara Bachke, அட்ராங்கி ரே, Metro In Dino ஆகிய சூப்பர்ஹிட் திரைப்படங்கள் வெளியாகியுள்ளன. அடுத்ததாக இவர் நடிப்பில் Pati Patni Aur Woh Do பெரிதும் எதிர்பார்ப்புடன் வெளிவரவுள்ளது.

இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆக்டிவாக இருக்கக்கூடிய நடிகை சாரா அலிகான் தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை அதில் பதிவு செய்வதை வழக்கமாக கொண்டுள்ளார்.

இந்த நிலையில், தற்போது அசத்தலான லுக்கில் கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டாவில் பதிவிட்டுள்ளார்.

# ஏக் தின் விமர்சனம்




தனது அலுவலகத்தில் பணிபுரியும் சாய் பல்லவியை மனதார காதலித்து வந்தாலும், அதை வெளிப்படுத்த தைரியம் இல்லாமல் வாழ்ந்து வருகிறார் நாயகன் ஜுனைத் கான். சாதாரணமான வாழ்க்கையில் யாராலும் கவனிக்கப்படாத ஒருவராக இருக்கும் அவர், ஒரு நாள் தனது ஆசை நிறைவேற வேண்டும் என்று விரும்புகிறார். அதன்படி, சாய் பல்லவியுடன் ஒரு நாள் முழுவதும் செலவிடும் வாய்ப்பு அவருக்கு கிடைக்கிறது.

அந்த நாளை ஜுனைத் கான் எப்படி தன்னுடைய நாளாக மாற்றினார்? ஒரு நாள் ஜுனைத் கான் வாழ்க்கையை எப்படி மாற்றுகிறது? என்பதே படத்தின் கதை.

நாயகனாக நடித்துள்ள ஜுனைத் கான் அமைதியான மற்றும் தன்னம்பிக்கை குறைந்த இளைஞனின் கதாபாத்திரத்திற்கு பொருத்தமாக நடித்துள்ளார். பெரிய அளவில் மாஸ் காட்சிகள் எதுவும் இல்லாமல், எளிமையான நடிப்பால் கதையை தாங்கிச் செல்கிறார்.

நாயகியாக நடித்துள்ள சாய் பல்லவி, தனது இயல்பான நடிப்பால் படத்திற்கு முக்கிய பலமாக இருக்கிறார். உணர்ச்சி காட்சிகளிலும், மென்மையான காதல் தருணங்களிலும் வழக்கம்போல நம்ப வைக்கிறார். இது அவரின் இந்தி அறிமுகப்படமாகவும் அமைந்துள்ளது.

இயக்குனர் சுனில் பாண்டே, ஒரு மென்மையான காதல் கதையை உணர்வுப்பூர்வமாக சொல்ல முயற்சி செய்துள்ளார். காதல், ஏக்கம், இழப்பு, வாழ்க்கையின் மதிப்பு போன்ற உணர்வுகளை அழுத்தமாக பதிவு செய்கிறார். சில இடங்களில் கதை மெதுவாக நகர்ந்தாலும், அதுவே படத்தின் மனநிலைக்கு ஏற்றதாக அமைகிறது.

மனோஜ் லோபோவின் ஒளிப்பதிவு பெரிய பலம். குறிப்பாக ஜப்பானின் பனிமூட்டமான காட்சிகள் அழகாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இசையமைப்பாளர் ராம் சம்பத் இசை, படத்தின் உணர்ச்சியை உயர்த்த உதவுகிறது.

ஆனால், கதை சில இடங்களில் முன்கூட்டியே கணிக்கக்கூடியதாக மாறுகிறது. விறுவிறுப்பான திருப்பங்கள் எதிர்பார்ப்பவர்களுக்கு இது மெதுவான அனுபவமாக இருக்கலாம்.

நடிகை அமலா பால் தமிழ் சினிமாவில் ஒருகாலத்தில் முன்னணி ஹீரோயினாக வலம் வந்தவர். அவர் இரண்டாம் திருமணம் செய்துகொண்டு செட்டில் ஆன பிறகு படங்களில் நடிப்பதை குறைத்துக்கொண்டார். தற்போது கணவர் மற்றும் மகன் உடன் இருக்கும் போட்டோ மற்றும் வீடியோக்களை தான் இன்ஸ்டாவில் அதிகம் வெளியிட்டு வருகிறார் அமலா பால்.

இந்நிலையில் அவர் சேலையில் அழகாக நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட நிலையில், எடுத்திருக்கும் அழகிய போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.



# 3 நாட்களில் இத்தனை கோடிகளா?



இயக்குநர் விக்னேஷ் ராஜா மற்றும் நடிகர் தனுஷ் கூட்டணியில் உருவாகி இருக்கும் திரைப்படம் "கர". வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் தயாரித்துள்ள இந்தப் படத்தில் தனுஷுடன் ஜெயராம், ரவிக்குமார், கருணாஸ், மமிதா பைஜு ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ள இந்தப் படத்தை வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் சார்பில் ஐசரி கே. கணேஷ் தயாரித்துள்ளார். பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் இந்தப் படம் கடந்த 30-ஆம் தேதி உலகளவில் வெளியானது. வித்தியாசமான கதைக்களத்தில் உருவான கர திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. திரைப்படம் வெளியான முதல் நாள் பாக்ஸ் ஆபிஸ் கலெக்‌ஷனாக ரூ.6.20 கோடி வசூலானது. இந்தப் படம் முதல் இரு நாட்கள் பாக்ஸ் ஆபிஸ் கலெகுஷன் ரூ. 15.20 கோடியாக அதிகரித்தது. இந்த நிலையில், கர திரைப்படத்தின் முதல் மூன்று நாட்கள் வசூல் விவரம் வெளியாகி உள்ளது. அதன்படி இந்தப் படம் வெளியான முதல் மூன்று நாட்களில் ரூ. 28.87 கோடி வசூலித்துள்ளது. இந்தப் படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்து வருவதை அடுத்து, படத்தின் வசூல் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மம்மூட்டி – மோகன்லால் இணைந்து நடித்த 'பேட்ரியாட்' – 2 நாட்களில் ரூ.50 கோடி வசூல்!



மகேஷ் நாராயணன் இயக்கத்தில் மம்மூட்டி, மோகன்லால் இணைந்து நடத்த படம் பேட்ரியாட்.

பகத் பாசில், குஞ்சாக்கோ போபன், நயன்தாரா, ரேவதி, தர்ஷனா ராஜேந்திரன் மற்றும் ராஜீவ் மேனன் என நட்சத்திர பட்டாளமே இதில் நடித்துள்ளது. சைபர் திரில்லராக உருவாகியுள்ள இப்படம் கடந்த மே 1 அன்று வெளியானது. வெளியான இரண்டு நாட்களிலேயே உலக அளவில் இப்படம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்தியாவில் முதல் நாளில் ரூ. 9.8 கோடியும் இரண்டாம் நாளில் ரூ. 6.15 கோடியும் வசூலித்தது. இரண்டு நாட்களில் இந்தியாவில் இப்படம் ரூ. 16.15 கோடி வசூலித்தது. இரண்டாம் நாள் முடிவில் வெளிநாட்டு வசூல் ரூ. 31.50 கோடியைத் தாண்டியுள்ளது.

இந்திய மற்றும் வெளிநாட்டு வசூல் சேர்த்து, இரண்டு நாட்களில் இப்படம் உலக அளவில் ரூ. 50.23 கோடி வசூலித்து சாதனை படைத்துள்ளது.



WANTED
சமையல்
வீட்டுவேலை
குழந்தை பராமரிப்பு
நோயாளி கவனிக்க உணவு
இடம் (Accomodation/Place)
சென்னை
தொடர்புக்கு: 9380476241 / 9790766391




ADVERTISE WITH US
CONTACT US
9438610756




WANTED:
FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889




Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com




டீலர்கள் தேவை
மைலேஜ் பூஸ்டர்
20% ~ 30%
மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை
சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041




Seek Strive Succeed
Annai Violet
Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
Key Features
BANK LOAN
UG & PG COURSES
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388





keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology – Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com




நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர்
to
செங்கல்பட்டு ரோடு
1 to 2
ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773




துபாயை தலைமையிடமாகக் கொண்டு
தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள
உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட்
(Would Be Global Pvt Ltd)
ஆன்-லைன் வர்த்தக E-Commerce
நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக
பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555

WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756




WANTED:
செக்யூரிட்டி
வேலைக்கு
ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW




SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com




SUN SHINE PROPERTY
(Property & Developers)
லேயவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை
மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft
முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617




EMI 50%
50% OFFER
PLOT FOR SALE
SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலவளம்பேட்டை
SRI DEVELOPERS
LOCATION: ADAMBAKKAM, GUINDY.
OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.
CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259




PLOTS FOR SALE
SRI DEVELOPERS
மனைகள் விற்பனைக்கு
கிண்டி
மதுராந்தகம், கருங்குழி, ஒரத்தம், படப்பை
EMI Available
BANK LOAN Available
CONTACT: 8220711499, 8870158259




PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர்,
கடம்பத்தூர் அருகில்
வீட்டு மனைகள் விற்பனைக்கு
BANK LOAN AVAILABLE
Contact: 9841495210




அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com




WANTED
• LAB HELPER
• OFFICE BOY
• GARDENER
CHEMBARAMBAKKAM
CALL US
7550093245 / 7358696451




WANTED
OFFICE BOY
GUINDY
CALL US
7550093245 / 7358696451




WANTED
ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US
7550093245 / 7358696451




WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106




## முதுமையில் எது இன்பம்?

மாலை நேர சூரியனாய்
மந்தமாக ஒளிரும்
முதுமையில்
மெல்ல மாறிய வாழ்க்கை...

அவசரங்கள் விலகிச் செல்ல,
நிதானம் வந்து ஆட்கொள்ள
அதுவே இன்பம்.

மெதுவான காலடிகளில்
வேகமான நினைவுகள்...

குழந்தைச் சிரிப்பாக,
இளமைக் கனவாக
ஓடிக்கொண்டே இருக்க
அதுவே இன்பம்.

உடல் சோர்ந்தாலும்,
உள்ளத்தில் உவகையோடு
அன்பைப் பகிர்ந்திடும்
அதுவே இன்பம்.

சொத்துகளல்ல இன்பம்,
சொல்லாடும் முகங்களே
என்று உணர்ந்தால்
கண்ணீரும் இனிமையாகும்.

முதுமையில் வேறு
என்ன இன்பம்?

மேற்சொன்ன...
எதிலுமே இன்பமில்லை
எதுவுமே நிரந்தரமில்லை,



என்று
பகுத்தறிவதே
முதுமையின்
இன்பம்....

**நா.பத்மாவதி**
கொரட்டூர்



## நீந்தும் மீன்கள்

ஒளிர் வெள்ளி வானில்
ஆழ் நீல நிறத்தில் மீன்கள்
அங்கும் இங்குமாய்
துள்ளும் மீன்கள்!

சில சமயம் செல்வான
நிறத்திலும் சில சமயம்
தங்க நிறத்திலும்
இன்னும் சில சமயம்
வெண்மையாகவும் கூட!

சில சமயம் வேகமாக!
சில சமயம் மெதுவாக!

மீன்கள் எப்போதும் தான்
துள்ளுகின்றன!

நீரில் உயிர்ப்போடும்!
வலையில்
விடுதலைக்ககாவும்!
தரையில் உயிருக்காகவும்,!

ஆசைக்கு நிறம் ஒன்றில்லை!
திசையும் ஒரு
பொருட்டில்லை!
வேகமும் ஒரு தடையில்லை!
துள்ளி நீந்துவதில் களிப்பு!



என் கனவில்
ஆபத்தில்லாமல்
துள்ளுவதே
ஆனந்தம்!

**சசிகலா விஸ்வநாதன்**



வழக்கம் போல் நானும் என்
தோழியும் அதிகாலையில்
எங்கள் வீட்டுக்கு அருகே
இருக்கும் கடற்கறையில்
கொஞ்சம் தூரம் நடந்து
விட்டு வருவதுண்டு!!!
நாங்கள் போகும் நேரத்தில்
ஒரு வயதான தம்பதியரும்
தினமும் வருவார்கள்
நடப்பதற்க்காக.

அவர்கள் என்னைப்
பார்த்தால் மிகவும்
அக்கறையாக நலம்
விசாரிப்பார்கள்!
அவர்கள் கண்களில்
அவ்வளவு சந்தோசம்
தெரியும்!! அன்றாடம் இது
வழக்கமாகிப் போனது!

என்றும் இல்லாமல்
இன்று என் தோழி என்னிடம்
கேட்டள்!! உன்னிடம் நான்
ரொம்ப நாளாக
கேட்க நினைத்தது தான்!!

அதெப்படி நானும் தான்
உன்னோடு தினமும்
வருகிறேன்.. அவர்கள்
என்னிடம் எதுவுமே
பேசுவதில்லை!!!

உன்னிடம் மட்டும் இவ்வளவு
அக்கறையாக நலம்
விசாரிக்கிறார்கள்!!
நீ அவர்களுக்கு
தெரிந்தவளும் அல்ல..
தினமும் இங்கே
பார்ப்பவர்கள் தான்!!

உன்னிடம் மட்டும் அப்படி
என்ன மேஜிக் இருக்கிறது!!!
சொல்லடி? என்று சிறு
கோபத்துடன் என்னை
முறைத்துக் கொண்டாள்!!

நான் அவளின் கைகளைப்
பற்றி! ஆமாம் என்னிடம் ஒரு
மேஜிக் உள்ளது.. உனக்கும்
அந்த மேஜிக் தெரியும் தான்!!
ஆனாலும் நீ
பயன்படுத்துவதில்லை..
மறந்து விடுகிறாய்..
நான் அதை மறக்காமல்
என்னுடன் எப்பொழுதும்
வைத்திருக்கிறேன்!!
நீ மட்டுமல்ல இங்கே பலரும்
அதைப் பயன்படுத்த மறந்தே
விடுகின்றனர்.. தவற
விடுகின்றனர்!! பல பேருக்கு
பெரிய விசயமாகக் கூட
இருக்கிறது!!என நான்
கூறவும்! அதென்னடி அப்படி
ஒரு மேஜிக்..
சொல்லு சொல்லு என
நச்சரித்தாள்!!!
அது வேறொன்றுமில்லை
ஒரு சின்ன மேஜிக் தான்
என்னுடன் என் முகத்தில்
எப்பொழுதும் தவழ விடும்
அந்தப் "புன்னகை" தான்
என்று சிரித்தவாறு
அவளை அழைத்துச்
சென்றேன்... அங்கே
அலுப்பில்லாமல்
புன்னகையுடன்
கால் நனைத்தும் செல்லும்
அந்த அலைகளை நோக்கி...

**NISHAA**

## காக்கை சைவம்...

அசைவத்தை உண்டாலும்
காக்கை சந்தேகமே
இல்லாமல் சுத்த
சைவம் தான்... காரணம்
சொல்லவா? காணக்
கிடைக்கும் எதனையும்
யாருக்கும் தெரியாமல்
தந்திர முனைப்பில்
சுயநல வெறியில்
தன்னந் தனியே உண்ணும்
அடிமட்டப் பழக்கம்
ஆதியில் இருந்தே அதற்குக்
கிடையாதே!

**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்

## வாசிக்க சில துளிப்பாக்கள்

அடைமழை பெய்து
முடிந்ததும், வீட்டிற்குள்ளே
குடியேறுகிறது! ஏரி நீர்...

பெருவானத்தின் நிலவு,
தண்ணீரில் மிதந்தபடி
செல்கிறது!
குழந்தையின் காகித கப்பல்..

மூட்டை தூக்கிச் செல்லும்
கிழவன், தள்ளாடி தள்ளாடி
நடக்கிறார்! சாலையை
கடக்கும் குடிகாரன்..

உன் நினைவுகளின்
ஞாபகங்கள், ஆங்காங்கே
தேங்கிக் கிடக்கிறது!
அதிகாலையில் பெய்த
மழை..

கிணற்றுக்குள் நிரம்பிய நீர்,
கொஞ்சம் கூட வெளியே
தெரியவில்லை!
அரசியல்வாதியின் ஊழல்...

விதி விலக்கின்றி,
மக்களுக்கு இலவசமாக
வழங்கப்படுகிறது!
தேர்தல் பொய்
பிரச்சாரங்கள்..

தாத்தாவின் கம்பீர நடை,
டக் டக்கென்ற சத்தத்துடனே
தொடர்கிறது!
கையில் ஊன்றுகோல்

மதப் பிரச்சாரங்கள்,
உலகமெங்கும் பரவி
வருகிறது!
கொரோனா விசக்கிருமி...

சாலையின் வாகன நெரிசல்,
அதிகரித்துக் கொண்டே
போகிறது! கடைசிக் கட்ட
வாக்கு எண்ணிக்கை..

உயர் ரத்த அழுத்தம்,
கொஞ்சம் கூட
குறையவில்லை!
நாட்டில் விலைவாசி..

அசல் கவிதை,
பாராட்டப்பட்டு அதிகமாக
பகிரப்படுகிறது!
நகலெடுத்தவனின் பெயர்
முகப் புத்தகத்தில்..

விவசாயிகளின் போராட்டம்,
முடிவில்லாமல் தொடர்ந்து
கொண்டேயிருக்கிறது!
சிந்துபாத்தின் கன்னித்தீவு...

**Nishaa**



இன்று அவர்கள் பேசட்டும்.
எவ்வளவு பொய்
வேண்டுமென்றாலும்
அவர்கள் சொல்லிக்
கொள்ளட்டும்...
அவர்கள் தங்களை
பாதிக்கப்பட்டவர்களாக
காட்டட்டும்...
அவர்கள் கதையை
திரித்துக்கூறட்டும்...
அவர்களுக்கு வேண்டியது
போல தேர்வு செய்யட்டும்....
உன்னை தவறாகவே
புரிந்துகொள்ள
நினைப்பவர்களிடம் நீ
எதையும் நிரூபிக்க வேண்டி
அவசியமே இல்லை...
ஒருநாள் அவர்கள் கடினமான
முறையில் பாடம் கற்பார்கள்..
அவர்கள் உருவாக்கிய
குழப்பத்தை விட அமைதி
அதிக சத்தமாக இருக்கும்
போது, அவர்கள் தங்களைத்
தாங்களே எதிர்கொள்ள பயம்
கொள்வார்கள்... நீ உன் மன
அமைதியை காப்பாற்று.
உன் வளர்ச்சியைத் தேர்வு
செய்... உன் நேர்மையில்
எப்பொழுதும் நிலைத்து நில்..
அதுவே உன் பலம்...
அதுவே உன் வெற்றி..

--------------------

எதார்த்தமான
ஓர் புன்னகையும்,
ஆத்மார்த்தமான ஆசுவாசமும்,
போதுமானதாக இருக்கிறது...
அன்பென்பதை உயிர்ப்புடன்
தக்க வைத்துக்
கொள்வதற்கு...

--------------------

அழகாக ஆழமாக
ஆரம்பிக்கும் அத்தனை
உறவுகளும் அழ வைத்து
விட்டுப் போவது நிஜம்..

ஏதோ ஓர் இடத்தில் தொடங்கி
எதிர்பார்க்காத இடத்தில்
முற்றுப் புள்ளியிட்டு
முடித்து வைத்துப் போகிறது
இந்த வாழ்க்கை..

--------------------

இந்த வாழ்வே
ஒரு விசித்திரம் தான்..
கிடைக்காததை
எதிர்பார்ப்பதும்..
நடக்காததில் நம்பிக்கை
வைப்பதும்.. பார்க்காததை
ஏக்கம் கொள்வதும்...
சிறு வயதில் தொடங்கி
முதுமை வரை முடிகிறது...

--------------------

அடுத்தவருக்கு
பரிமாறுவதற்க்கு முன்
நீங்கள் ஒருதரம்,
சுவைத்துப் பார்த்து விட்டு
பரிமாறுங்கள்..

உணர்வுகளையும்!
வலிகளையும்!
வார்த்தைகளையும்.!!!

--------------------

உங்களைப் போன்ற நேசமிக்க
உறவுகள் யாருமில்லை என்று
நம்பிக்கை வைக்கும் போது
தான் மெல்ல உங்கள்
முகத் திரைகள்
விலக ஆரம்பிக்கின்றது..

அதில் நீங்கள் மறைத்திருந்த
கோர முகத்தின்
அடையாளமாக
உங்களின் சுயநலங்கள்
சிரித்துக் கொண்டிருந்தது...

அந்தச் சிரிப்புகளுக்குள்ளே
தெரிந்த ஏளனங்களும்!!
வார்த்தைகளுக்குள்ளே
தெரிந்த பரிகாசங்களும்!!
அக்கறைகளுக்குள்ளே
தெரிந்த உதாசீனங்களும்!!
மகிழ்ச்சிகளை ஏற்றுக்
கொள்ள முடியாத
வன்மங்களும்!!
துயரங்களில்
மகிழ்ச்சியடையும்
வக்கிரங்களும்...
அத்தனையையும் தெரிந்தது..

அத் திரைகளை மூடுவதற்க்கு
மீண்டும் அதே அரிதாரம்
பூசிய நேச முகத்தை
அடையாளமாக்குகிறீர்கள்...

இத்தனையும் தெரிந்த பின்பும்
அமைதியான ஒரு
புன்னகையை மட்டும்
உங்களுக்கு கடைசியாக
தந்து விட்டுச் செல்கிறேன்.
ஒரு நாள் அந்த புன்னகையில்
வலிகளின் உச்சத்தை
உணர்வீர்கள்..


--------------------

நாம் நேசிக்கும் ஒருவரின்
சின்ன சின்னப்
புரிதல்களில் தான் நமக்கான
அத்தனை ஆறுதல்களும்
அடங்கியிருக்கின்றது!!

**Nishaa**

# நூல் விமர்சனம்

**நூல் மதிப்புரை**
**நூல்: "இளமை தொலைந்த போது."**
**ஆசிரியர்: "சோழா புகழேந்தி."**
**தொடர்பு எண்: 7094914328.**
**வகைமை :புதுக்கவிதை.**
**வெளியீடு : விழிகள் பதிப்பகம்.**
**விலை: 260 பக்கம்: 160.**



நூல் விவரக் குறிப்புகள்
நூல்: இளமை தொலைந்தபோது...
நூலாசிரியர்: சோழா புகழேந்தி பேசி: 7094914328
வகைமை: புதுக் கவிதைகள்
பக்கங்கள்: 160
பதிப்பாண்டு: முதற்பதிப்பு 2025
மெய்ப்புத் திருத்தம்: விழிகள் தி. நடராசன் பேசி: 6381600499
மின்னச்சும் வடிவமைப்பும்: கோ. தனசேகர், செய்யாறு
முகப்பு அட்டை ஓவியமும் உள் ஓவியங்களும்: ஓவியர் மாரி ஆனந்த்
அச்சும் வெளியீடும்: விழிகள் பதிப்பகம் சென்னை-600041
பேசி: 9444265152 / 7397283447 / 044-24570594
விலை: ரூ.260
சோழா புகழேந்தி
விழிகள் பதிப்பக வெள்ளி விழாவை நோக்கி...
வெள்ளி விழா ஆண்டு 2025 (14)




ஒரு கால் நூற்றாண்டு களுக்கும் மேலாகக், கவிதை உலகில் இயங்கிக் கொண்டிருக் கும் திரு "சோழா புகழேந்தி" அவர்களுக்கு, "இளமை தொலைந்த போது " தான்,அவரால் ஒரு மைல் கல்லை எட்டிப் பிடிக்க முடிந்திருக் கிறது. இன்னும் அவர் கடந்து செல்லவேண்டிய,பலமைல் கற்கள் எதிரே காத்துக் கிடக்கின்றன.

"இளமை தொலைந்த போது" என்னும் இவரது இந்த முதல் கவிதை நூலில்,74 தலைப்பு களில், அவர் எழுதிய கவிதைகள், கோர்க்கப்பட்ட ஒரு கதம்ப மாலையாக இன்று நம் கைகளில் தவழ்ந்து கொண்டிருக் கின்றது

இலக்கிய உலகிலும் சரி பொதுநிலை யிலும் சரி, முன்னணியில் நிற்கும்,கவிஞர் திரு கோ.வசந்த குமாரன், திரு ஜெ.மோகன், கவிஞர் திரு காதல் மதி, திரு.கா.சண்முகம், மற்றும், சிட்னியிலி ருந்து திரு.ஜி ஆனந்த் ஆகியோர் வாழ்த்துரை களை வழங்கியிருக்கிறார்கள். தி.நடராஜன் அவர்களும், தி . வேணுகோபால் அவர்களும் வழங்கியுள்ள பதிப்புரையில் "பல்வேறுபாடு பொருள்களில்களில் எழுதிய கவிதைகள், ஏன் இவ்வளவு காலம் கிட்டங்கியில் கிடந்தன என்பதே எம் கேள்வி என்று வினா எழுப்பியிருக்கின்றார்கள். தொலையாத இளமைக் கவிதைகள் இன்னும் பலதொகுதிகள் வரவேண்டும் என்பதே எங்கள் ஆவல் என்று எழுதியிருக்கிறார்கள். எமது ஆவலும் அஃதே! நம் எதிர் பார்ப்பைப் பொறுத்த மட்டில், "என் உரை"யை மிகச் சிக்கனமாக,சுருக்கி இருப்பது, ஏமாற்றமளிப் பதாகவே இருக்கிறது.

கவிதை உலகில் தனக்கென ஒரு தனிவழியை உருவாக்கிக் கொண்ட கவிஞர், திரு,சோழா புகழேந்தி,அவர்கள், அன்றாட வாழ்வில் நாம் காணத் தவறிய நிகழ்வுகளைக்கூட , தன்னுடைய உற்று நோக்கும் பார்வையால், கவிதையாக கொடுத்திருப் பது பாராட்டிற்குரியதே. "இப்படியும் சில ஆட்டோக்கள்", "பேருந்து பேசுகிறது" "பேருந்து நடத்துநர்" போன்ற கவிதைகளை இதற்கு எடுத்துக்காட் டாகச் சொல்லலாம்.

"போரில்லா உலகம் போவோம் " என்ற முதற் கவிதையே, இந்த நூலில் தலைவாசலில் நின்ற வாறே, சமகாலப் போர் பதற்றத்தைப் பற்றிக் கூறி, நம்மை நிமிர்ந்து எழுச் செய்கிறது. "என்ன நடக்குது அங்கே நெஞ்சு துடிக்குது இங்கே மண்ணில் பிறந்தது பாவமா மழலைகளுக்கேஇதுசாபமா?" என்னும் ஆரம்ப வரிகளில் நம் இதயமே ஆடிப்போய்த் தான் நிற்கிறது...!

"தமிழினம் இன்று" என்னும் தலைப்பிலான கவிதையில், தமிழினம் தறிகெட்டுப் போய், "சொந்த நாட்டிலேயே அகதியாகி சோகமாகிப்போன" கொதிப்பை அறச்சீற்றத் துடன்,எடுத்துக் கூறிச் எச்சரிக்கிறது. கிராமியம் அழிந்து போய், தமிழர்தம் பாரம்பரியத்தை இழந்து, பட்டமரமாய் திற்கும் அவலத்தை, "எல்லாம் இப்போ என்ன ஆச்சு எங்கே கிராமம் | ஓடிப்போச்சு" என்று கேட்கும்போது, பதில் கூற முடியாதவாறு நாமும்கலங்கிப் போய்தான் நிற்கிறோம். காதலை எழுதாதக் கவிஞனுமல்ல. அதே போலக் காதலைப் பாடாதவனும் கவிஞனுமல்ல என்பதற் கிணங்க ஆங்காங்கே ஒருசில காதல் கவிதைகளும் மலர்ந்து மணம்பரப்பிக்கொண்டு தான் இருக்கின்றன.

காதலென்னும் நதி கல்யாணக் கடலில் தான் சங்கமம் ஆகவேண்டும் என்ற பண்பு சார் ஒழுக் கத்தை வலியுறுத்தும், "கல்யாணக் கனவு"(பக்: 46) என்னும் படைப்பு கவித்துவமான அருமையான தொரு படைப்பு. தென்றலின் கைகளைப் பிடித்துக் கொண்டு முன்றலில் தடைபயிலும் சுகமான அனுபவத்தை நாம் இந்தக் கவிதையில் உணர முடிகிறது. ஒரு முறை படித்துப் பாருங்கள். மறுபடியும் அந்த கவிதை உங்களைப் படிக்கத் தூண்டும் .

வெறும் வாய்ச் சொல் அலங்கார மாயையில் காதலியை வர்ணிப்பதோடு மட்டும் நின்று விடாமல், திருமணத்திற்காக காதலன் ஏங்குவதாக முடித்திருப்பது, தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளை தூக்கிப் பிடிக்கிறது. "கண்ணாளனே" எனும் கவிதையும் கிராமிய மணத்தோடு, திருமணத்திற்காக ஏங்கும் காதலியின் மனத் தாபத்தை வலியுறுத்து கிறது. "உண்மைக் காதல்" பற்றிப் போற்றும் கவிதைகளும், கலிகாலக் காதலைப் பற்றி தூற்றும் கவிதைகளும் பாராட்டும் படி இருக்கின்றன.

சமூக சீர்கேடுகள், சனநாயகப் படு கொலைகள், தேர்தல் தில்லுமுல்லு கள், போதைப் பொருள்களின் தாராளமயங்கள், என்று எண்ணற்ற தலைப்புகளில், கவிதைக் கணை கள் ஊடுருவிப் பாய்கின்றன. உணர் வுகளோடு பயணிக்கின் றன.

வள்ளுவன் முதற்கொண்டு, சிலுவை சுமந்த இயேசுகிறிஸ்துவள்ளலார் வழியாக, நாடகத் தந்தை சங்கரதாச சுவாமிகள், சிந்தனை சிற்பி சிங்காரவேலர், கர்ம வீரர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, கலைஞர், கவிஞர் வாலி, ஈறாகத், தனது கவிமாலை களை காலத்தால் அழியாத காவிய மேதைகளுக் குச் சூடிஅழகு பார்த்திருக்கிறார்,சோழா புகழத்தி அவர்கள், இந்தக் கவிதைத் தொகுப்பின் மூலம், ஒரு நாற்பதாண்டுகாலத்தின் 'கைவண்ணப் படைப்புகளை எல்லாம் ஒன்று சேர்த்து, நமக்கொரு இலக்கிய விருந்தாகப் படைத்திருக்கிறார் சோழா புகழேந்தி அவர்கள்.

விழிகள் பதிப்பகத்தாரின் தேர்ந்த கைவண்ணத் தில்இந்தக்கவிதை தொகுப்பு 'ஆட்டோகிராப்' அமைப்பில், வடிவமைக்கப் பட்டுள்ளது மிகச்சிறப்பாக உள்ளது.

கவிதை உலகில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்ட சோழா புகழேந்தி அவர்கள், இலக்கிய உலகில் அழுத்தமாகக்காலூன்றி நிற்கிறார் என்று துணிந்து கூறலாம்.

**ஆய்வுரை :குடந்தை பரிபூரணன்.**
**(6384538289)**



கெட்டு போக
விட்டு விலகினாய்
மடையனாக்க
மறந்தும் சென்று விட்டாய்
அணு,அணுவாய் கொல்ல
அந்த நினைவுகளை ஏனடி
மனசாட்சியே இல்லாமல்
மிச்சம் வைத்திருக்கிறாய்!

அவள் கொடுத்த
தொந்தரவும்–தொல்லையும்
ரொம்பவும் பிடித்து விட்டது

இப்போது அவளில்லாத
அமைதி, தனிமை
என்னவோ போல்
என்னையும் இழந்து
வெறுமை நரகத்தில்
சாகிறேன்!

நீ என்ன
மந்திரக்காரியா?
எதுவும் செய்யாமலே
உன் மீது பித்து பிடித்து
திரிகிறனே!

வேண்டாமென்று தானே
சொன்னாய்
என்னையுமறியாமல் ஏனடி
கண்ணீர் வந்தது.

முதன் முதலாய்–நான்
நிம்மதி தொலைத்த
கதை தெரியுமா?
அது உன்னுடைய
நிராகரிப்பு தான்!

வலிகள் தந்திருந்தாலும்
வெறுக்க முடியவில்லை
இன்று மட்டுமல்ல
என்றுமே நினைவில் தான்
இருக்கிறாள்.
பல தோஷம் வந்தாலும்
ஜலதோசத்திற்கு
நிவாரணியாய் இருக்கும்
விக்ஸ் போன்றவளை
எக்ஸ் என அழைக்க வைத்து
விட்டது பாழாய் போன விதி!

வறுமையில் வந்த காதல்
அவளுக்கு
பொறுமையில்லாததால்
கை நழுவி போனது.
ஏமாற்றங்கள் தான்–
என்
வாழ்விற்கான மாற்றங்கள்!



**லி.நௌஷாத் கான்**

# நமது வருமானம் குறைவாக இருக்கலாம்... நமது உடல் ஆரோக்கியத்திற்கு, மிக சிறந்த உணவை நம்மால் உண்ணமுடியும்.

உதாரணமாக...

1. ரெடிமேடாக விற்கும் நெல்லிக்காய் வத்தல். (தினமும் ஒன்று)
2. விஷம் கலந்துள்ள சர்க்கரைக்கு பதிலாக வெல்லம் / நாட்டு சர்க்கரை.
3. பிரிட்ஜில் வைக்காத பொருள்கள்.
4. ஒரு கேரட்டுடனும் , (அல்லது) சிறிது தேங்காயுடனும் ஒரு பேரீச்சம் பழத்தை சிறுக சிறுக கடித்து ஒன்றாக சுவைப்பது. (இது கண்ணுக்கும், இரத்தம் அதிகமாவதற்கும், அறிவிற்கும், ஞாபக சக்திக்கும் நல்லது.)
5. அதிக கெமிக்கல்கள் உள்ள பாக்கெட் பாலை தவிர்ப்பது நல்லது.
6. தண்ணீராகவே இருந்தாலும் நாட்டு பாலை வாங்க முயற்சிக்கலாமே.
7. முடிந்தவரை பழுப்பு நிறத்தில் உள்ள கல் உப்பை மட்டுமே பயன்படுத்தலாமே.
8. சாதத்தை வடித்து சாப்பிடலாமே.
9. வடித்த கஞ்சியை பழைய சாதம் தயாரிக்க பயன்படுத்தலாமே.
10. இரண்டு லிட்டர் தண்ணீர் குடிக்கும் பாத்திரத்தை, குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு வருக்கும் தனித்தனியாக வைத்து பயன் படுத்தலாமே.
11. ஒரு நாளின் எல்லா நேரத்திலும், கீழே கண்டபடி சுவாசித்து பழகலாம். வேகமாக தொப்புள் வழியே காற்று உள்ளே வந்து, மெதுவாக உச்சந்தலை வழியே வெளியே செல்வதாக மனதில் நினைத்தபடியே சுவாசிக்கலாம்.
12. காலையில் முதல் வேலையாக அதிக தண்ணீரை குடித்து மலத்தை கழித்துவிடலாமே. (அ) வெதுவெதுப்பான தண்ணீரை பயன் படுத்தலாமே. (அ) உப்பும் , எலுமிச்சை சாறும் கலந்து குடிக்கலாமே. ஒரே மாதத்தில் குடல் நார்மலாக செயல் படும் நிலைக்கு வந்து விடுமே.
13. வடக்கு பக்கம் தலைவைத்து படுப்பதை தவிர்க்கலாமே.
14. மாலை வேளைகளில் உடைத்த-கடலை, முளைகட்டிய பயறுகளில் ஏதாவது ஒன்று, வேர்க்கடலை கொய்யா பழம் போன்ற விலை மலிவான பொருட்களை பயன் படுத்தி பழகலாமே.
15. தினமும் சூரியன் நம்மீது 10 to 20 நிமிடம் படும்படி இருக்கலாமே. பல பல லட்ச ரூபாய் மருத்துவ செலவை குறைக்கலாமே.
16. நமது மகிழ்ச்சி என்பது வெளியில் எந்த பொருளிலும் இல்லை. நாம் நினைக்கும் நேர் மறை எண்ணத்தில் மட்டுமே இருப்பதை நம்பலாமே.
17. எண்ணெய் குளியல், குடல் சுத்தம் போன்றவற்றை கடைபிடிக்கலாமே.
18. மிக சிறந்த உணவையும் சாப்பிடாமல், மனக் கட்டுப் பாடலுடன் படையலைப் போட்டு, அதை பார்த்து ரசித்த படி இருக்கும் போது, அதன் சத்துகளை உடல் கிறகிப்பதை உணர்ந்த பிறகு, நிதானமாக சிறிது சாப்பிட்டதுமே திருப்தி உண்டாவதை உணரலாமே.
19. அடிக்கடி உண்ணா விரதம் இருந்து, உடல் காற்றின் உதவியுடனும் செயல் படுவதை ரசனையுடன் உணரலாமே.
20. செக்கு எண்ணெய்யின் விலை அதிகமாக இருந்தாலும் அதையே பயன்படுத்தலாமே. சுட்ட எண்ணையை மீண்டும் பயன் படுத்துவதை தவிர்க்கலாமே.
21. மைதா பொருட்களை தவிர்க்கலாமே.
22. வெது வெதுப்பான நீரை முதலில் தலையில் ஊற்றியும் , சாதாரண நீரை முதலில் காலில் இருந்து ஊற்றியும் குளிக்கலாமே. குளிக்கும் போது வாயை மூடி இருக்கலாமே. பலர் அப்போது வாயால் சுவாசித்து உடல் நலத்தை கெடுத்து கொள்வதை கவனிக்கலாமே.
23. தூக்கம் உடனே வராத மனநிலையில் இருப்பவர்கள், கடைசி சொட்டு காற்றையும் வெளியே விட்டு விட்டு, மூச்சை இழுக்காமல் இருக்கவும். அதிகப்படியான காற்றை வேகமாக முடிந்த வரை இழுத்து, சிறிது நேரத்தில் மெதுவாக வெளியே விடலாமே. இவை ஒரு சுற்று சுவாசம். இப்படி இருபது சுற்றுவரை எண்ணுவதற்கு முன்பே நாம் தூங்கி விடுகிறோம்.
24. மிக மிக எளிதான உடற்பயிற்சி: தோப்புக்கரணத்தை முடிந்த வரை போடலாமே. படிப்படியாக அதிகப் படுத்திக் கொள்ளலாமே. அப்போது மூச்சை விட்டபடியே உட்கார வேண்டும். கைகள் பெருக்கல் குறியை போல காதுகளை பிடித்து இருக்க வேண்டும்.
25. வீட்டில் நேர்மறை சக்தி அதிகமாவதற்கு வசம்பு, படிகாரம், எலுமிச்சை, போன்ற பொருள்கள் உதவுகிறது. விருப்பம் உள்ளவர்கள் படுக்கை அறைகளில் மறைவாகவும் வைத்து பயனைப் பெறலாமே.
26. உடலில் நேர்-மறை சக்தி அதிகமாவதற்கு நல்ல எண்ணம் உள்ளவர்களின் அருகில் இருக்கலாமே. அல்லது, கோவில் சுற்றலாமே. பிரமிடு அமைப்பின் மையத்தில் வைக்க பட்ட கருங்கல்லில் இருந்து வெளிப்படும் காந்த சக்தியை அருகில் சென்று பெறலாமே. உச்சரிக்க கடினமான வார்த்தைகளை நாம் தவறு இல்லாமல் படிக்கலாமே. நாம் மனம் ஒன்றி படித்தால் மட்டுமே தவறே இல்லாமல் படிக்க முடியும். இதுவே மந்திரம். உச்சரிக்கவே கடினமான (மந்திர) சப்தம் வேறு ஒருவரிடம் இருந்து வெளிப்பட்டாலும் அந்த சப்தம் நமது வாயில் இருந்தே வெளிப்படுவதை போலவே நாம் மனதால் நினைக்க முடியும். ஒருவித காந்த சக்தி நம்முள் வந்து சேர்வதை நம்மால் உணர முடியும்.
27. நாம் நம்பிக்கை வைத்து வணங்கும் அளவுக்கே , நமது காந்த அலைவரிசையானது எங்கும் எப்போதுமே செயல் போட்டபடியே உள்ள பிரபஞ்ச காந்த அலைவரிசையுடன் (ஓரளவுக்கு) ஒத்துப் போகும். எந்த கடவுளை எந்த பெயரில் வணங்கினாலும், நமக்கு இந்த பிரபஞ்சத்தின் காந்த சக்தி கிடைக்கிறது . நல்ல பலன் கிடைக்கிறது.
28. இந்த பிரபஞ்சத்தில் உள்ள உயிர் இல்லாதவைகளும், உயிர் உள்ளவைகளும் நாம் ஒவ்வொருவரும், கடவுளின் ஒவ்வொரு துளிகளே.
29. மாதம் ஒரு முறையாவது சமையல் அறையில் எல்லா பொருட்களையும் நிரப்பினால் தான் சமையல் சரியாக இருக்கும்.

இதுபோல... உடலுக்கு தேவையான எல்லா சத்துக்களையும் உடலில் சேர்க்கவே பண்டிகை காலங்களில் பல தரப்பட்ட உணவு பழக்கவழக்கங்கள் கடைபிடிக்க படுகிறது. சமூகத்தில் சத்துகுறைவால் வியாதி வருவது தடுக்கப்படுகிறது. சமூக தர்ம பழக்கங்களின் மூலமாக எளிய மனிதர்களுக்கும் நல்லது நடக்கிறது.

எலுமிச்சை+இஞ்சி+பூண்டு மருந்து இதய அடைப்பை நீக்குகிறது.

கருஞ்சீரகம்+ஓமம்+வெந்தயம் மருந்து மனிதர்களுக்கு வரக்கூடிய 4448 வியாதிகளையும் தடுத்து கட்டுப்படுத்துகிறது.

உடலில் அதிக ஆக்ஸிஜனை சேர்ப்பதன் மூலம் கேன்சரை கட்டுப்படுத்த முடிகிறது.

மேலே குறிப்பிட்டவைகளை கடைபிடித்து வாழ நம் எல்லோராலும் எளிதாக முடியும்.

இந்த உலகிலேயே மிகவும் உயர்ந்த பதவியையும், அளவிடவே முடியாத பணத்தையும் வைத்து கொண்டு இருந்தாலும் பயன் இல்லை.

தினமும் பரபரப்பாகவே வாழ்க்கையை வாழ்ந்து முடிப்பவர்களே அதிகம்.

எல்லா பழத்திலும் தோலும் கொட்டையும் இருப்பதை நினைத்து கவலைபடுபவர்களே அதிகம்.

இதுபோலவே... அனைவரிடமும் குறைகளை மட்டுமே கவனித்து குறைகளையே பேசி வாழ்பவர்களே அதிகம்.

நாம் நேர்மறை எண்ணத்துடன் வாழும் போது நமது மனம், நமது சுவாசத்தை ஆழமாக நிர்வகித்து, அதிக நிம்மதியையும், அதிக திருப்தியையும், அதிக ஆயுளையும் தருகிறது..




# ரத்தக்கொழுப்பு அதிகரித்தால்...?

மருத்துவ ரீதியாக தைராய்டு ஹார்மோன் குறைபாடு 'ஹைப்போ தைராய்டிசம்' எனப்படும். மனிதனின் கழுத்தில் உள்ள பட்டாம் பூச்சி வடிவ தைராய்டு சுரப்பியில் தைராய்டு ஹார்மோன் உற்பத்தி ஆகிறது. உடல் தனக்கு கிடைக்கும் ஆற்றலை பயன்படுத்தி கொள்வதற்கும், வளர்சிதை மாற்றத்திற்கும் இது உதவுகிறது. தைராய்டு சுரப்பி குறைபாடு (ஹைப்போ தைராய்டிசம்) இந்தியாவில் 10 பேரில் ஒருவருக்கு இருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இது ஆண்களை விட பெண்களிடையே அதிகம் காணப்படுகிறது.

முட்டைக்கோஸ், காலிபிளவர், புரோக்கோலி மற்றும் முள்ளங்கி. இதில் உள்ள காயிட்ரோஜன் தைராய்டு சுரப்பி உற்பத்தியை குறைக்கிறது. சோயாபீன்ஸ், சோயா பால், டோபு. இவற்றில் உள்ள காயிட்ரோஜன் மற்றும் பைட்டோ ஈஸ்ட்ரோஜன் தைராய்டு செயல்பாட்டை தடுக்கிறது. பதப்படுத்தப்பட்ட இறைச்சிகள் அல்லது உணவுகள், எண்ணெயில் பொரித்த உணவுகள், துரித உணவுகள், பாட்டில் குளிர்பானங்கள், காபி (இது தைராய்டு மாத்திரைகள் உட்கொண்ட பின்னர், அவை வயிற்றில் இருந்து ரத்தத்தில் உறிஞ்சப்படுவதை தடுத்து அதன் செயல்பாட்டை குறைக்கிறது), மது பானங்கள், செயற்கை இனிப்பூட்டிகள்.



உணவில் அயோடின் கலந்த உப்பு பயன்படுத்த வேண்டும். மீன், இறால், பால் பொருட்கள், முட்டை, செலீனியம் நிறைந்த உணவுகள் (கடல் உணவுகள், கோழி, காளான், பூண்டு), ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்த உணவுகள் (சால்மன், மத்தி, கானாங்கெளுத்தி போன்ற மீன்கள், ஆளி விதைகள், அக்ரூட்), முழு தானியங்கள் (பழுப்பு அரிசி, ஓட்ஸ் மற்றும் முழு கோதுமை), மெலிந்த புரதங்கள், காய்கறிகள் மற்றும் பெக்டின்கள் நிறைந்த பெர்ரி, ஆப்பிள், பேரிக்காய், பிளம்ஸ், சாத்துக்குடி, ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பழங்கள்.

சர்க்கரை நோயாளிகளுக்கு செய்யப்படும் எச்.பி.ஏ1சி (HbA1c) ரத்த பரிசோதனையில் ஒரு பொய்யான உயர்வை ஹைப்போ தைராய்டிசம் ஏற்படுத்தக் கூடும். மேலும் இது சர்க்கரை நோயாளிகளுக்கு நரம்பியல் மற்றும் சிறுநீரக பாதிப்பு ஏற்படும் வாய்ப்பை அதிகரிப்பதாக ஆராய்ச்சிகளில் கண்டறியப்பட்டுள்ளது.

# அரிசி மாவில் சுவையான ஸ்வீட் செய்வது எப்படி?

அரிசி மாவு ஸ்நாக்ஸ்: ஹலோ ஃப்ரண்ட்ஸ்..! இன்றைய பொதுநலம் பதிவில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடக்கூடிய அரிசி மாவில் சுவையான ஸ்வீட் வீட்டிலே எப்படி செய்யலாம்னு பார்க்கலாம் வாங்க..!

வையான பொருட்கள்:
அரிசி மாவு 1 கப்
பால் 1 கப்
சர்க்கரை 1/2 கப்
தேங்காய் துருவல் 1/2 கப்
ஏலக்காய் தூள் சிறிதளவு

அரிசி மாவில் ஸ்வீட் செய்வது எப்படி செய்முறை விளக்கம் 1:

முதலில் அரிசி மாவு 1 கப் எடுத்துக்கொள்ளவும். அடுத்து இந்த ரெசிபி ரெடி பண்ண கடாயில் 1 கப் பால் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

பால் சுவை பிடிக்காதவர்கள் தண்ணீர் கூட சேர்த்துக்கொள்ளலாம்.

இந்த பால் மிதமான அளவிற்கு சூடு வந்தால் போதும். அதன்பிறகு பாலுடன் சர்க்கரை 1/2 கப் சேர்த்து மிதமான சூட்டில் வைத்து நன்றாக கிளற வேண்டும்.

அரிசி மாவில் ஸ்வீட் செய்வது எப்படி செய்முறை விளக்கம் 2:

Rice Flour Sweet: அடுத்து தேங்காய் துருவல் 1/2 கப், பாலுடன் சேர்த்து நன்றாக கிளறிக்கொள்ள வேண்டும்.

அடுத்து வாசனைக்காக சிறிதளவு ஏலக்காய் தூள் சேர்த்துக்கொள்ளுங்கள்.



ஏலக்காய் தூள் சேர்த்தபிறகு இதனையும் நன்றாக கிளற வேண்டும்.

அரிசி மாவில் ஸ்வீட் செய்வது எப்படி செய்முறை விளக்கம் 3:

அரிசி மாவு ரெசிபி: அடுத்து அந்த பாலில் எடுத்துவைத்துள்ள அரிசி மாவை இதனுடன் சேர்க்க வேண்டும். மிதமான சூட்டில் வைத்தே இதை நன்றாக கிளறிவிட வேண்டும்.

அடுத்து நன்றாக கிளறிய பிறகு அடுப்பை நிறுத்தி கொள்ளலாம். 1 மணி நேரம் இதை மூடிவைக்க வேண்டும். நன்றாக ஆறியபின் தனியாக ஒரு பவுலில் மாற்றிக்கொள்ளவும்.

அடுத்து இந்த மாவை சப்பாத்தி மாவின் பதம் போல் நன்றாக பிசைந்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

அரிசி மாவில் ஸ்வீட் செய்வது எப்படி செய்முறை விளக்கம் 4:

அரிசி மாவு ரெசிபி: அடுத்து சப்பாத்தி மாவின் பதம் போல் வந்த பிறகு உருண்டையாக உருட்டி அதை தட்டி கொள்ளவும்.

மாவை உருண்டை வடிவில் தட்டிய பிறகு பாத்திரத்தின் மூடி அல்லது குக்கி கட்டரால் கட் செய்துகொள்ளவும்.

எல்லா மாவையும் இதே போல் செய்து தனியாக ஒரு தட்டில் எடுத்துவைத்து கொள்ளவும்.

அரிசி மாவில் ஸ்வீட் செய்வது எப்படி செய்முறை விளக்கம் 5:

அரிசி மாவு ஸ்நாக்ஸ்: அடுத்து இந்த அரிசி மாவில் நட்ஸ் வகைகளையும் சிறிதாக நறுக்கி சேர்த்து செய்தால் இன்னும் சுவை கிடைக்கும்.

இப்போது தனியாக தட்டில் எடுத்து வைத்ததை வேக வைக்க வேண்டும்.

# நல்ல வாழ்க்கை துணைக்கான அர்த்தம் என்ன தெரியுமா..?



உண்மையான வாழ்க்கை துணை தன்னை போலவே தனது துணையையும் மதிக்கும் பண்பு கொண்டவராக இருப்பார். குறிப்பாக அவர் எடுக்கும் முடிவுகளுக்கு மரியாதை தரும் விதமாக அவருக்கு உறுதுணையாக இருப்பார். மேலும், அவர் செய்கின்ற எல்லா செயல்களுக்கும் மதிப்பளித்து, அன்புடன் நடத்துவார். இது போன்ற குணம் உள்ள துணை உங்களை எந்த சூழலிலும் விட்டு கொடுக்காமலும் இருப்பார்கள்.

**சமூக வலைத்தளங்கள்**

ஒரு சிறந்த வாழ்க்கை துணை என்பவர் எந்நேரமும் முகநூல், வாட்ஸ்ஆப் போன்ற சமூக ஊடங்கங்களில் நேரம் செலவழிக்க மாட்டார். அதற்கு மாறாக தனது காதல் துணையுடன் நேரத்தை செலவிடுவார். மேலும், அவருக்கென்று நேரம் செலவிடும் போது பல கருத்துக்களை பரிமாற செய்வார். மேலும் தனது துணை சொல்லும் வார்த்தைகளை கூர்ந்து கவனிக்கும் தன்மை கொண்டவராக இருப்பார்.

**உண்மையான துணையாக**

உண்மையான வாழ்க்கை துணை இன்னொருவரை எந்த சூழலில் தவிக்க விட்டு செல்ல மாட்டார். எல்லா இக்கட்டான சூழலிலும் அவர் தனது துணையுடன் உறுதுணையாக இருந்து, வேண்டிய உதவிகளை செய்வார். அதே போன்று தனது துணையின் உணர்வுகளை புரிந்து கொள்ளும் மனப்பான்மை கொண்டவராகவும் அவர் இருப்பார்.

**அந்தரங்கம்**


தனது துணையுடன் ஏற்படும் சண்டை, உறவு சிக்கல்கள் போன்றவற்றை மற்றவர்களிடம் சொல்லி குறை ஏற்படுத்தி கொண்டே இருக்கும் நபராக அவர் இருக்க மாட்டார். எவ்வளவு பிரச்சனைகள் வந்தாலும் அதை தன் இருவருக்குள் மட்டுமே வைத்து கொள்ளும் பழக்கம் உள்ளவராக இருப்பார். மேலும் மற்றவர்களிடம் அவரது துணையை விட்டு கொடுக்காமல் இருப்பார்.

**வெளிப்படையாக இருப்பார்**

ஒரு திருமண உறவில் அவசியம் இருக்க வேண்டிய ஒன்று வெளிப்படை தன்மை. எந்தவொரு சூழலிலும் தன்னை குறித்த விஷயங்களை மறைக்காமல் வெளிப்படையாக இருக்க கூடிய வாழ்க்கை துணைகள் எப்போதும் சிறந்தவர்கள். இந்த வெளிப்படை தன்மை தான் ஒருவர் மீது ஒருவருக்கு இருக்கும் நம்பிக்கையை அதிகப்படுத்தும் காரணியாக இருக்கும்.

**முன்னுரிமை**

தனது அருகில் எவ்வளவு பேர் இருந்தாலும், தனது துணைக்கு தான் முதலில் முன்னுரிமை கொடுக்கும் பண்பு கொண்டவராக இருப்பவர்கள் சிறந்த வாழ்க்கை துணை. அதே போன்று எந்நேரமும் வேலையே கதி என்று இருக்காமல் தனது வாழ்க்கை துணைக்கு நேரம் ஒதுக்குவார். மேலும் தனது துணையின் வளர்ச்சி குறித்தும் யோசிக்க கூடிய மனநிலையை கொண்டவராக இவர் விளங்குவார்.

























**ATTENTION**

**ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு**

10th., ITI Electrical B- Licence, Dip EEE

தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.

திருமுடிவாக்கம் அருகாமையில் அமைந்துள்ள சாரதா கம்பெனிக்கு

**ஆட்கள் தேவை**

**ஆண்கள் மட்டும்**

வயது: 18 முதல் 35 வரை

**கல்வி தகுதி**
**10 முதல் any Degree**

தங்கும் இடம் உணவு வசதி உண்டு

ESI , PF , Attendance Allowance போன்ற அனைத்து வசதிகளும் உண்டு

சம்பளம் :
**18,000 முதல் 22,000 /-**

தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336

மெயில் : hrsarathagroup@gmail.com






























ATTENTION

ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு

10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.







# WANTED

ISO

THANIGAI

## REAL ESTATE MARKETING

## PART TIME & FULL TIME

☑ Flexible work ☑ No Age Limit / No Investment

☑ No Experience/No Qualification ☑ No Risk / No Target

Simple work - just refer customers only

Office Location : Near Perambur Railway Station

K. Ramakrishnareddy 90879 55111


































## Special Invitation

to retired seniors **housewwives businessmen bankers** CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your **second Innings** with a career **business opportunity**

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided


For successful business.

Contact Mr. Irudaya Raj
Ph.9486634780





# பல்சுவை களஞ்சியம்




## கற்ப மூலிகை கருந்துளசி பயன்கள்...



சாதாரண துளசி செடி போலவே கருந் துளசி இருக்கும். ஆனால் இலைகள், தண்டு மற்றும் பூ, காய் கருமையாக இருக்கும் இதை கிருஷ்ண துளசி என்றும் கூறுவர்.

இந்தக் கருந் துளசியினால் ஏற்படும் பயன்களை பார்ப்போம்.

மிளகுடன் 10 துளசி இலைகளை பறித்து மென்று விழுங்கினால் தொண்டையில் உள்ள சளி முற்றிலுமாக நீங்கும்

காலையில் எழுந்தவுடன் பல்லைக் கொப்பளித்துவிட்டு 5 இலைகளை உட்கொண்டால் மலச்சிக்கல் மற்றும் வயிற்று உபாதைகள் நீங்கும்

வாய் துர்நாற்றத்தைப் போக்க கருந் துளசி இலைகளை பறித்து வாயில் மென்றால் பற்களில் உள்ள கிருமிகள் அழிந்துவிடும். வாயும் துளசி மணம் கமழும்.

இரவில் செம்பு உலோகப்பாத்திரத்தில் 10 துளசி இலைகளை நசுக்கிப் போட்டு அதில் அரை டம்ளர் தண்ணீர் கலந்து விடவும். பின் காலையில் வெறும் வயிற்றில் பல்லைக் கொப்பளித்துவிட்டு அந்த தண்ணீரினைப் பருக வேண்டும். உடலில் உள்ள அனைத்து தாதுப்பிரச்னைகளும் தீர்ந்துவிடும். தேகம் மிளிரும். கண்புரை ஏற்பட்டாலும் சரிசெய்துவிடும்

தினமும் கருந்துளசியை தவறாமல் எடுத்து வந்தால் 48 நாட்களில் சளி மற்றும் கபநோய்களிடம் இருந்து உடலை பாது காத்துக்கொள்ளலாம்.

கருந்துளசியை சளித்தொல்லைக்கு ஒரு சிறந்த மருந்துச் செடியாக குறிப்பிடலாம். ‘ஆசிமம் டெனியபுளோரம் டைப்பிகா’ என்ற தாவரவியல் பெயர் கொண்ட இந்த செடிகளின் இலைகள் நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துகின்றன. சிறிது கருந்துளசி இலைகளை எடுத்து பசும்பாலில் போட்டு காய்ச்சி குடிக்க நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

கருந்துளசியை நீரில் போட்டு நன்கு கொதிக்க வைத்து ஆவி பிடித்தால், சைனஸ் தொல்லைகளால் ஏற்பட்ட சளி நீங்கும்.

அடிக்கடி சளி பிடிக்காமல் இருக்க 5 அல்லது 10 கருந்துளசி இலைகளை ஒரு லிட்டர் நீரில் ஊற வைத்து, அந்த நீரை அருந்தி பின்னர் இலைகளை மென்று சாப்பிட வேண்டும்.

தினமும் அதிகாலையில் வெறும் வயிற்றில் 5, 4 இலைகளை சாப்பிட்டு வந்தால் கிருமித் தொற்றினால் ஏற்படும் சளித்தொல்லைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்....

# மீம்ஸ்







## தமிழ்நாட்டில் எந்த ஊரில் என்ன வாங்கலாம்...!




திருநெல்வேலி - அல்வா
ஸ்ரீவில்லிபுத்தூர் - பால்கோவா
கோவில்பட்டி - கடலைமிட்டாய்
பண்ருட்டி - பலாப்பழம்
மார்த்தாண்டம் - தேன்
பவானி - ஜமுக்காளம்
உசிலம்பட்டி - ரொட்டி
நாச்சியார் கோவில் - விளக்கு, வெண்கலப் பொருட்கள்
பொள்ளாச்சி - தேங்காய்
வேதாரண்யம் - உப்பு
சேலம் - எவர்சில்வர், மாம்பழம், அலுமினியம், சேமியா
சாத்தூர் - காராசேவு, மிளகாய்
மதுரை - மல்லிகை, மரிக்கொழுந்து
திருப்பூர் - பனியன், ஜட்டி
உறையூர் - சுருட்டு,கைத்தறி புடவை
கும்பகோணம் - வெற்றிலை, சீவல்
தர்மபுரி - புளி, தர்பூசணி
ராஜபாளையம் - நாய்
தூத்துக்குடி - உப்பு
ஈரோடு - மஞ்சள், துணி
தஞ்சாவூர் - கதம்பம், தட்டு, தலையாட்டி பொம்மை
நீலகிரி - தைலம்
ஊட்டி - உருளைக்கிழங்கு, தேயிலை, வர்க்கி
கல்லிடைக்குறிச்சி - அப்பளம்
காரைக்குடி - ஓலைக்கூடை
செட்டிநாடு - பலகாரம்
திருபுவனம் - பட்டு
குடியாத்தம் - நுங்கு
கொள்ளிடம் - பிரம்பு பொருட்கள்
ஆலங்குடி - நிலக்கடலை
கரூர் - கொசுவலை
திருப்பாச்சி - அரிவாள்
காஞ்சிபுரம் - பட்டு, இட்லி
திண்டுக்கல் - பூட்டு, மலைப்பழம்
பத்தமடை - பாய்
பழனி - பஞ்சாமிர்தம், விபூதி
மணப்பாறை - முறுக்கு, மாடு
உடன்குடி - கருப்பட்டி
கவுந்தாம்பட்டி - வெல்லம்
ஊத்துக்குளி - வெண்ணெய்
கொடைக்கானல் - பேரிக்காய்
குற்றாலம் - நெல்லிக்காய்
அரியலூர் - கொத்தமல்லி
சிவகாசி - வெடி, தீப்பெட்டி, வாழ்த்து அட்டை
கன்னியாகுமரி - முத்து, பாசி, சங்குப் பொருட்கள்
திருச்செந்தூர் - கருப்பட்டி
குளித்தலை - வாழைப்பழம்
ஆம்பூர் - பிரியாணி, தோல் உற்பத்தி பொருள்கள்..
ஒட்டன்சத்திரம் - முருங்கைக்காய்,தக்காளி
ஓசூர் - ரோஜா
நாமக்கல் - முட்டை
பல்லடம் - கோழி
குன்னூர் - கேரட்
விருதுநகர் - பரோட்டா
திருச்சி - லால்கடை பூந்தி
வாணியம்பாடி - பிரியாணி , தோல் உற்பத்தி பொருள்கள்..



## விடுகதை

| | |
|---|---|
| கொடுக்கையில் நிறைய வைரமணி. அது என்ன? | மாதுளம் பழம் |
| ஒரு ஜான் குட்டை இலை ஒரு முழவால். அது என்ன? | நாக்கு |
| ஒரு கட்டு துறையில் 32 வெள்ளை பசுக்கள். அது என்ன? | பற்கள் |
| அண்ணனுக்கு எட்டாது தம்பிக்கு எட்டும். அது என்ன? | உதடு |
| இரண்டு கிணற்றுக்கு ஒரு பாலம். அது என்ன? | மூக்கு |



# ஜோக்ஸ்

என் பொண்டாட்டிய என்ன தான் செய்றது?

ஏன் என்ன பண்றாங்க?

நான் எது செஞ்சாலும் என் பொண்டாட்டி குறுக்கே நிக்கிறா.

கார் ஓட்டி பாரேன்.


————————

சார், என்னோட பொண்ணைக் காலையில் இருந்து காணல! புகார் கொடுக்கணும்..

அதோ போறாரே.. அவர்தான் உங்க சம்பந்தியா இருக்கணும்.. முதல்ல அவர்கிட்ட போய் பேசுங்க...

என்ன சார் நீங்க.. பொண்ணக் காணலைன்னு சொல்றேன்.. நீங்க என்னடான்னா அவர் கிட்ட பேசச் சொல்றீங்க?

அவரோட பையனக் காணோம்னு இப்போத்தான் புகார் கொடுத்துட்டு போறாரு.. அதான்.



————————

உன்னை யாரவது லூசுன்னு சொன்னா கவலை படாதே! வருத்த படாதே! ஃபீல் பண்ணாதே!

உங்களுக்கு எப்படி தெரியும்ன்னு கேள்!

————————

ஒடுர எலியின் வாலை புடிச்சா நீ கிங்கு ....

ஆனா....

ஒடுர புலியின் வாலை புடிச்சா உனக்கு சங்கு!!

————————

அந்த டாக்டருக்கு சொந்தக்காரங்கன்னு சொல்லிக்க யாருமே கிடையாது !

ஏன் ?

எல்லாருக்கும் அவருதான் ஆபரேஷன் பண்ணினாரு !

————————

என்னங்க... செருப்பு காலை கடிக்குது!

அப்ப மாலைல போட்டுக்கங்க!

————————

சார்... ஆறு வருஷத்துல நீங்க போட்ட பணம் இரட்டிப்பாகும்னு சொன்னீங்களே... என்ன ஆச்சு?

நிதி நிறுவனம் : இரட்டிப்பாகும்னு தானே சொன்னோம்.. திருப்பித் தர்றதா சொல்லலையே!



# சமையல் அறை ஸ்பெஷல்





# சமையல் டிப்ஸ்

- தயிர் பச்சடியில் பாலாடையை போட்டால் எளிதில் புளித்து விடாமல் இருக்கும்.
- டீயில் சிறிதளவு சுக்குத்தூள், மிளகுத்தூள், ஏலக்காய் தூள் கலந்தால் அதிக ருசி கிடைக்கும். அஜீரணக் கோளாறும் சீராகும்.
- முட்டையை தண்ணீரில் போட்டு வைத்தால் ஒரு வாரம் வரை கெடாமல் இருக்கும்.
- வெந்தயக் கீரையை சமைக்கும்போது சிறிது சர்க்கரையை சேர்த்தால் அதில் உள்ள கசப்பு சுவை நீங்கிவிடும்.
- சமையலுக்கு பட்டாணி பயன்படுத்தும்போது அதில் சிறிதளவு சர்க்கரை சேர்த்தால் நல்ல மணமாக இருக்கும்.
- நறுக்கிய வெங்காயத்துடன் சிறிது வெண்ணெய் சேர்த்து வைத்தால் நீண்ட நேரம் பிரெஷ்ஷாக இருக்கும்.
- எண்ணெயில் சிறிது மிளகைப் போட்டு வைத்தால் நீண்ட நாட்கள் வரை எண்ணெய் கெடாது.
- பூரிக்கு மாவு பிசையும்போது சர்க்கரை சேர்த்து பிசைந்தால் பொரித்த பூரி அதிக நேரம் நமத்துப் போகாமல் இருக்கும்.
- கோதுமை மாவு தோசைக்கு காலையிலேயே மாவை கரைத்து வைத்தால் மாலையில் சுடும் போது ஒட்டாமல் வரும்.
- சாம்பாருக்கு பருப்பு வேக வைக்கும் போது அதனுடன் தக்காளி, பச்சை மிளகாய், வெங்காயம், பூண்டு, பெருங்காயம், வெந்தயம், சிறிது எண்ணெய் விட்டு வேக வைத்தால் சாம்பார் நல்ல வாசனையோடு மட்டுமின்றி நீண்ட நேரம் கெடாமலும் இருக்கும்.
- சுண்டல், வெள்ளை சுண்டல், ராஜ்மா, காராமணி போன்ற பருப்பு வகைகளை கிரேவியாக சமைக்கும் பொழுது, வெந்த பருப்பில் இருந்து சிறிதளவு எடுத்து அரைத்து கரைத்து விட்டால் கிரேவி கெட்டியாக இருப்பதுடன் ருசியும் கூடும்.
- காய்ந்த ரொட்டியை துண்டுகளாக நறுக்கி நன்றாக காய வைத்து எடுத்து வைத்தால் அவற்றை புலாவ், பிரியாணி ஆகியவற்றில் வறுத்துப் போட சுவையாக இருக்கும்.
- கத்திரிக்காய் காம்புகளை கழுவிக்கொண்டு ரசம் அல்லது சாம்பார் கொதிக்கும்போது போட்டால் சுவையாக இருக்கும்.
- முருங்கைக்கீரை உருவிய காம்புகளை சுத்தம் செய்து ரசத்தில் போட்டு குடித்தால் மூட்டுகளுக்கு நல்ல பலம் கிடைக்கும்.
- கத்திரிக்காயை நறுக்கி மோர் கலந்த நீரில் போட்டு வைத்தால் கறுத்துப் போகாமல் இருக்கும்.
- வாழைப்பூ, வாழைக்காய் போன்ற காய்கறிகளை நறுக்கும் பொழுது ஏற்படும் கறையைப் போக்க, கைகளை வாழைப்பழத் தோலின் உட்பகுதியில் தேய்த்து விட்டு சோப்பு போட்டு கழுவினால் கை பளிச்சென்று ஆகிவிடும்.
- கசக்கும் காய்களை அரிசி கழுவிய நீரில் சில நிமிடம் போட்டு சமைத்தால் கசப்பு குறையும்.
- சில முள்ளங்கிகள் அதிக வாடை வீசும். அவற்றை அரை மணி நேரம் முன்பாக தண்ணீரில் ஊறவைத்து பிறகு சமைத்தால் வாசனை வராது.
- குளிர் காலத்தில் லேசான சுடு பாலில் உறை ஊற்றி வைத்தால் சீக்கிரம் கெட்டித்தயிர் கிடைக்கும்.
- பன்னீரை, வினிகர் தெளித்த பாலீத்தின் பையில் போட்டு வைத்தால் நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கும்.
- சேமியா உப்புமா செய்யும் போது பாதி அளவு நீரும், பாதி தேங்காய் பாலும் கலந்து செய்தால் உப்புமா ருசிக்கும்.
- வெண்ணெய் காய்ச்சிய வாணலியில் உருளைக்கிழங்கு அல்லது அவரைக்காயை வதக்கி வறுவல் செய்தால் சுவையும், மணமும் கூடுதலாக இருக்கும்.
- பச்சடி, சூப் செய்ய சிவப்பு நிற வெங்காயத்தை பயன்படுத்துவது நல்லது. இது ருசியைக் கூட்டும்.



# மண்ணின் பொக்கிஷம் "பருப்பு கீரை"





நாம் தினந்தோறும் அன்றாட வேலைகளை செய்ய நம்மை சுறுசுறுப்பாகவும், புத்துணர்வோடும் வைப்பதற்கு நம் உடலில் உள்ள சத்துகளின் நிலை முக்கிய பங்கு வகிக்கிறது.

அந்த வகையில், நம் உடலில் சத்து குறைபாடு ஏற்படுவதை தடுக்க நாம் உண்ணும் உணவில் தினமும் காய்கறிகளுடன் கீரை சேர்த்துக் கொள்வது மிகவும் அவசியம்.

ஆம்.. அப்படி கீரைகளில் அதிக சத்து உள்ள பருப்பு கீரை பற்றி தான் இன்று பார்க்கப் போகிறோம்..!

கிராமங்களில் சாதாரணமாக வீட்டைச்சுற்றி பருப்பு கீரை வளர்ந்து கிடப்பதை பார்க்கலாம். இதற்கு கங்கா வள்ளி என்ற பெயரும் உண்டு. ஏராளமான சத்துக்கள் இந்த கீரையில் உள்ளன.

இதய ஆரோக்கியத்தை பாதுகாக்கும் ஒமேகா-3 சத்தானது பருப்பு கீரையில் ஏராளம். குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு ஒமேகா-3 தேவை. இது, ஆட்டிசம் போன்ற வளர்ச்சி குறைபாடுகளை தடுக்க உதவுகிறது. இது உடலில் இருக்கும் கெட்ட கொழுப்பை குறைப்பதுடன், இதயத்தை சுற்றி படியும் கொழுப்பையும் தடுக்கிறது.

வைட்டமின்-ஏ சத்தும் இருப்பதால் தோல் எப்போதும் பொலிவுடன் இருக்கவும், சருமம் தொடர்பான பிரச்சினைகளை குணப்படுத்தவும், கண் பார்வை தெளிவாக இருக்கவும் இந்த கீரை உதவுகிறது.

வைட்டமின்-சி, இரும்புச்சத்து, மக்னீசியம், பொட்டாசியம் போன்ற முக்கிய சத்துக்கள் நிறைந்துள்ளன. இந்த கீரையில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால் மலச்சிக்கல் தீரும். உடல் எடையை குறைக்கும் மற்றும் குடல் நோய்களை தடுக்கும் ஆற்றல் உள்ளது.

ஆஸ்டியோபோரோசிஸ், சொரியாசிஸ் போன்ற நோய்களுக்கு பருப்பு கீரை அருமருந்தாக உள்ளது, என்று நாட்டு மருத்துவ நூல்கள் கூறுகின்றன. எலும்புகள் மற்றும் தசைகளுக்கு வலிமை தரும் கால்சியமும் இந்த கீரையில் ஏராளம்.

உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள், நீண்ட நேரம் பசி உணர்வு இல்லாமல் தவிர்க்க இந்த கீரை உதவுகிறது. தமிழ்நாட்டில் சாதாரணமாக எங்கும் முளைத்து கிடக்கும் இந்த கீரை இந்த மண்ணின் பொக்கிஷம் என்றே உணவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்..!

## தேங்காய்ப்பால் பொங்கல்



**தேவையான பொருள்கள்:**

பாசிப் பருப்பு - 1/4 கிண்ணம்
தண்ணீர் - 5 கிண்ணம்
பச்சரிசி - 1 கிண்ணம்
வெல்லம் - 1 கிண்ணம்
நெய் - 2 மேஜை கரண்டி
முந்திரிப் பருப்பு - 15
ஏலக்காய் - 5,
தேங்காய்ப்பால் - 1 கிண்ணம்

**செய்முறை:**
வெறும் வாணலியில் பாசிப்பருப்பினை லேசாக சிவக்கும் வண்ணம் வறுத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் 5 கிண்ணம் தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைத்து கொதிக்க ஆரம்பித்தவுடன் பாசிப் பருப்பினை போட்டு வெந்தவுடன் அரிசியைக் நன்றாகக் களைந்து போட்டு, இரண்டும் நன்கு குழைந்தபின், வெல்லத்தைப் போடவும். வெல்லம் கரைந்து நன்கு சேரும் வரை கிளறி, நெய்யை ஊற்றி, வறுத்த முந்திரியைப் போட்டு, ஏலக்காய்ப் பொடியைப் போட்டு, தேங்காய்ப்பால் விட்டு கிளறி இறக்கவும்.

# ஐஸ்கிரீம் வகைகள்!



## பால் ஐஸ்கிரீம்

**தேவையான பொருள்கள்:**
பால் - 1 லிட்டர்
ஓரம் நீக்கிய பிரட் துண்டுகள் - 2
சோள மாவு - 1 மேசைக்கரண்டி
பாதாம், முந்திரி - தலா 10
சர்க்கரை - 4 மேசைக்கரண்டி

**செய்முறை:** ஒரு லிட்டர் பாலில், முக்கால் பாகத்தை அடுப்பில் வைத்துச் சுண்டக் காய்ச்சவும். ஓரம் நீக்கிய பிரட் துண்டுகள், சோள மாவு இரண்டையும் மிக்சியில் போட்டு அரைக்கவும். மீதமுள்ள பாலில் அரைத்த கலவையைப் போட்டு, பாதாம், முந்திரித் துண்டுகள் மற்றும் சர்க்கரை போடவும். இந்தக் கலவையைச் சுண்டிய பாலில் போட்டு நன்கு கிளறி, அல்வா பதத்தில் எடுத்து, ஆறியதும் குல்ஃபி அச்சுகளில் போட்டு ஃப்ரீசரில் வைக்கவும்.

## கேரட் ஐஸ்கிரீம்

**தேவையான பொருள்கள்:**

கேரட் - 4
பாதாம், முந்திரி - தலா 10
சர்க்கரை - 1 கிண்ணம்
பால் - 1/2 லிட்டர்
வெனிலா எசென்ஸ் - தேவைக்கேற்ப

**செய்முறை:** நான்கு கேரட்டுகளைத் தோல் சீவி, ஆவியில் வேகவிடவும். ஆறியவுடன் பாதாம், முந்திரி தலா 10, சர்க்கரையைச் சேர்த்து விழுதாக அரைக்கவும். அரை லிட்டர் பாலை கால் லிட்டராகக் காய்ச்சி, அரைத்த விழுதைச் சேர்த்து லேசாகக் கொதிக்கவிடவும். ஆறியவுடன் இரண்டு சொட்டு வெனிலா எசென்ஸ் சேர்த்துக் கலக்கி ஃப்ரீசரில் 6 மணிநேரம் வைத்து எடுத்தால் போதும்.

## மேங்கோ ஐஸ்கிரீம்

**தேவையான பொருள்கள்:**
மாம்பழம் - 5
பால் - 1/2 லிட்டர்
சர்க்கரை - 1 கிண்ணம்
சோள மாவு - 1/4 கிண்ணம்


**செய்முறை:** வாணலியை அடுப்பில் வைத்து பாலை ஊற்றி நன்றாகக் காய்ச்சவும். பிறகு சோள மாவை தனியாக ஆறிய பாலில் கலந்து கரைத்து அதனுடன் சேர்த்துக் கொதிக்க வைத்து, சர்க்கரை சேர்த்து கெட்டியாக மாறும் வரை கிளறி, வேறு ஒரு பாத்திரத்தில் மாற்றவும். நறுக்கிய மாம்பழத்தை மிக்ஸியில் போட்டு பேஸ்ட் பதத்துக்கு அரைத்து, ஏற்கெனவே தயார் செய்து வைத்துள்ள பால் கலவையைச் சேர்த்து ஒன்றாக அரைக்கவும். இதை ஒரு பௌலில் மாற்றி பிரிட்ஜில் 3 மணி நேரம் வைத்து, எடுத்து மீண்டும் மிக்ஸியில் அரைத்து பாத்திரத்துக்கு மாற்றி, 8 மணி நேரம் பிரிட்ஜில் வைத்து பிறகு பரிமாறவும்.

## சாக்லேட் ஐஸ்கிரீம்

**தேவையான பொருள்கள்:**
பால் - 1/2 லிட்டர்
கோகோ பவுடர் - 6 மேசைக்கரண்டி
சாக்லெட் எசென்ஸ் - 2 மேசைக்கரண்டி
சர்க்கரை - 50 கிராம்
ஜெலட்டின் பவுடர் - 1/2 தேக்கரண்டி

**செய்முறை:** பாலைச் சூடாக்கி, அதில் கோகோ பவுடர், சாக்லெட் எசென்ஸ் சேர்த்துக் கலக்கி கொதிக்க விடவும். பிறகு சர்க்கரையும், ஜெலட்டின் பவுடரையும் சேர்த்துக் கொதிக்க விடவும். நன்கு கெட்டியான பதம் வந்ததும், இறக்கி ஆற வைத்து ஃப்ரீசரில் வைத்துக் கெட்டியானதும் சாப்பிடவும்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No




8122664699

## ராகவர் தேர்



திருஎவ்வுள் விடையாற்றி உத்ஸவம் ராகவர் தேர் மண்டபம் எழுந்தருளல்.


## சோகத்தூர் யோக நரசிம்மர் பிரம்மோற்சவ விழா..!



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த சோகத்தூர் ஸ்ரீ நரசிம்ம பெருமாள் கோவில் முதலாம் ஆண்டு பிரம்மோற்சவ விழாவில் உற்சவ மூர்த்தி மேளதாளத்துடன் வீதியுலா வந்தனர். ஏராளமான பாகவதர்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

பா. சீனிவாசன், வந்தவாசி.

## மின்னல் தாக்கி தென்னை மரத்தில் தீ



**பாலக்காடு, மே 05:**

கேரளாவில் பாலக்காடு மாவட்டம் கொல்லங்கோடு, எலவஞ்சேரி, நெம்மாரா, நெல்லியாம்பதி மற்றும் ஆலத்தூர் ஆகிய சுற்று வட்டாரப்பகுதிகளில் நேற்று முன்தினம் இடி, மின்னல் மற்றும் சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. இதனால் அப்பகுதி விவசாயிகள், பொது மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். இந்நிலையில் நெல்லியாம்பதி செல்லும் மலைப்பாதையில் சூறாவளி காற்றுடன் மழைப்பெய்ததால் சாலையோரத்தில் இருந்த மரங்களின் கிளைகள் முறிந்து வேரோடும் சாய்ந்தன. இதனால், நெம்மாரா-நெல்லியாம்பதி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்நிலையில், எலவஞ்சேரி கிராமத்தில் தென்னந்தோப்பில் இடி, மின்னல் தாக்கியதில் ஒரு தென்னை மரத்தில் தீப்பற்றி எரிந்தது. இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# திருமலையில் கொளுத்தும் வெயில் பக்தர்களின் வசதிக்காக நிழற்பந்தல்: நடமாடும் குடிநீர் வசதி ஏற்பாடு



**திருமலை, மே 05:**

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் கோடை வெயிலில் இருந்து பக்தர்களை பாதுகாக்க பல்வேறு இடங்களில் நிழற்பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் நடமாடும் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு வரும் பக்தர்களை கோடைக்கால நெருக்கடியில் இருந்து பாதுகாக்க திருமலை தேவஸ்தானத்தின் பொறியியல் துறையின் மேற்பார்வையில் சுமார் ரூ.2 கோடி செலவில் பல்வேறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாட்ட கங்கம்மா கோயில் சந்திப்பு முதல் கோகர்பம் அணை வழியாக வெளிவட்டச் சாலை வரை நிழல் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. வைகுண்டம் வரிசை வளாகம்-2, அருங்காட்சியக வளாகம் மற்றும் நாராயணகிரி பூங்கா ஆகிய இடங்களிலும் நிழல் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. வரிசையில் காத்திருக்கும் பக்தர்களுக்காக குளிர்ச்சியான வண்ண பெயிண்ட் பணிகள் மற்றும் கூடுதல் தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக கோயில், லட்டு விற்பனையகங்கள் மற்றும் அதிக பக்தர்கள் கூடும் பகுதிகளை சுற்றியுள்ள இடங்களில் நிழற்பந்தல்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே சமயம், நான்கு மாட வீதிகளில் செயற்கை எனாமல் கூலிங் பெயிண்ட் அடிக்கப்பட்டுள்ளது. வெளிவட்டச்சாலை வரை அமைக்கப்பட்டுள்ள வரிசைகளில் தற்காலிகக் கழிப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அதேபோல், திருமலையின் நெரிசலான பகுதிகளில் ஸ்ரீவாரி சேவகர்கள், திருமலை திருப்பதி தேவஸ்தான சுகாதாரத்துறையின் உதவியுடன், நடமாடும் தண்ணீர் குழாய் பயன்படுத்தி அவ்வப்போது பக்தர்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி ஸ்ரீவாரி சேவகர்கள் நேரடியாக பக்தர்களிடம் சென்று குடிநீர் வழங்கி வருகின்றனர். ஒரு குழுவுக்கு 15 பேர் என மொத்தம் 45 ஸ்ரீவாரி சேவகர்கள் தினமும் 3குழுக்களாகப் பிரிந்து பக்தர்களுக்கு குடிநீர் வழங்கி வருகின்றனர்.

திருமலையில் பக்தர்களுக்காக மொத்தம் 16 மருத்துவ மையங்கள் உள்ளன. இந்த இடங்களில் பக்தர்களுக்கு உடனடி மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன. கூட்ட நெரிசலை கருத்தில் கொண்டு, வெளிவட்டச் சாலையில் உள்ள வரிசைகளுக்கு பின்னால் ஒரு நடமாடும் முதலுதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல், நாராயணகிரியிலும் ஒரு முதலுதவி மையம் அமைக்கப்படுகிறது. கோடைக்கால கூட்ட நெரிசலை சமாளிக்கும் வகையில் லட்டுகள் பக்தர்களுக்கு அதிக அளவில் வழங்கப்பட்டு வருகிறது. சாதாரண நாட்களில் 3.50 லட்சம் லட்டுகள் வழங்கப்படும் நிலையில், தற்போது கூடுதலாக 3.50 லட்சம் லட்டுகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

# 'உலகில் மிகப்பெரிய விதை': திகைக்க வைக்கும் திருவோடு மரம்



**நாகர்கோவில், மே 05:**

நாகர்கோவில் வடசேரி தழுவிய மகாதேவர் கோயில் வளாகத்தில் உள்ள திருவோடு மரம் காய்த்துள்ள நிலையில், அதை பக்தர்கள் ஆவலுடன் பார்த்து செல்கின்றனர். திருவோடு என்பது அட்சய பாத்திரம், கபாலம் போன்ற பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. திருவோடு மரத்தின் முற்றிய காயை இரண்டாக வெட்டி காய வைத்தால் கிடைக்கும் இந்த திருவோட்டின் சிறப்பு நம்மை ஆச்சரியப்பட வைக்கும். திருவோடு என்பது சன்னியாசிகள் வைத்து கொள்வது. பொதுவாக இந்த மரங்களை வீட்டில் வளர்ப்பதில்லை. திருவோட்டையும் வீட்டில் வைத்து கொள்வதில்லை. கோயில்களில் சிவபெருமான் பிக்ஷாடனர் வடிவத்தில், கையில் இந்த திருவோடு ஏந்தி இருப்பதை காணலாம். இது சிவனடியார்களின் புனித பொருளாக உள்ளது. உலகிலேயே மிகப்பெரிய விதை இந்த திருவோடு காய்தான்.


திருவோடு மரத்தின் பூர்வீகம் தெற்கு மெக்ஸிகோ மற்றும் அமெரிக்கா ஆகும். இந்த மரத்தின் விதைதான் திருவோடு செய்ய பயன்படுகிறது.

இந்த மரத்தின் பூக்கள் நறுமணம் மிக்கவை. இதனை தேடி வவ்வால்கள் அதிகம் வருகின்றன. இவைதான் மகரந்த சேர்க்கைக்கு உதவுகின்றன. திருவோட்டுக்காய் பெரிய தேங்காய் சைசில் இருக்கும். முற்றிய காய் உதிர்ந்து விழும். அதனை இரண்டாக பிளந்து நன்கு காய வைத்து, திருவோடாக பயன்படுத்தப்படுகிறது.

திருவோடு மரம் 30 அடி உயரம் வரை வளரும். இதன் பட்டை மென்மையாகவும், இலைகள் அகலமாகவும் காணப்படும். திருவோட்டின் காய், பூசணிக்காய் போல் பெரிய அளவில் காணப்படும். இது மரத்தில் 7 மாதங்கள் வரையில் இருந்தால்தான் நன்கு முதிர்ந்து, ஓடு பகுதி நல்ல தடிமனாக வரும். இதனை கொண்டு அலங்கார பொருட்கள், அழகுப்பெட்டிகள், ஆபரணங்கள் செய்யவும் பயன்படுத்தப்படுகிறது. வெளிநாடுகளில் இதில் அழகான படங்கள் வரைந்து தட்டு, கப்புகள், இசைக்கருவிகள் செய்யவும் பயன்படுத்துகின்றனர். பிரேசிலில் உணவை பரிமாறும் பாத்திரங்களாக பயன்படுத்துகின்றனர். இந்த ஓட்டில் உணவு வைத்தால் விரைவில் கெடாது. உடலுக்கு வலுவையும் கொடுக்கும். அதனால்தான் நம் நாட்டில் துறவிகள் இதனை பயன்படுத்துகின்றனர் போலும்.

இந்த காய்கள் மருத்துவ குணங்கள் நிறைந்தவை. இதன் உலர்ந்த பழங்கள் மற்றும் ஓட்டின் உட்புறம் உள்ள ஏராளமான வேதிப்பொருட்கள் வயிற்று உபாதைகளுக்கும், நுரையீரல் மற்றும் சிறுநீர் தொற்றை போக்கவும் பயன்படுகின்றன. உடலை குளிர்ச்சி அடைய செய்யவும், வயிறு மற்றும் குடல் புண்களை போக்கவும் பயன்படும் சிறந்த மூலிகை காய் இது. திருவோடு மரம் சைவ மடங்களிலும், சில கோயில்களில் தல விருட்சமாகவும் உள்ளது. இந்த மரத்தை, நம்மூரில் சாகுபடி செய்யலாம். நம்மூர் மலை மண்ணுக்கு அருமையாக வளர்கிறது. இது 30 அடி உயரம் வரை வளரும் தன்மை கொண்டது. மூலிகை மருத்துவ பயிர்களில், சிறந்த மர சாகுபடி என திவோடு மரத்தை கூறலாம்.

## பஞ்சலிங்க அருவியில் தண்ணீர் வரத்து குறைந்ததால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்




**உடுமலை, மே 05:**

உடுமலை அருகே உள்ள திருமூர்த்திமலையில் அமணலிங்கேஸ்வரர் கோயில், பஞ்சலிங்க அருவி, திருமூர்த்தி அணை உள்ளிட்டவை உள்ளன. இவற்றை பார்க்க தினசரி ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

இதுதவிர, அமணலிங்கேஸ்வரர் கோயிலில் வழிபட பக்தர்கள் அதிகளவில் வருகின்றனர். அமாவாசை, பவுர்ணமி உள்ளிட்ட விசேஷ நாட்களில் கூட்டம் அதிகமாக இருக்கும்.

இந்நிலையில், பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விட்டதில் இருந்த திருமூர்த்திமலைக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகமாக உள்ளது. ஞாயிற்றுக் கிழமையான நேற்று திருமூர்த்திமலைக்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்தனர். ஆனால் அருவியில் குறைந்தளவே தண்ணீர் விழுந்ததால் ஏமாற்றமடைந்தனர். ஆனாலும் பாறைகளில் வடியும் நீரில் சுற்றுலா பயணிகள் உற்சாகமாக குளித்து சென்றனர்.

## துரோகிகளும் எதிரிகளும் வீழ்த்தப்பட்டுள்ளனர் : புரட்சித்தாய் சின்னம்மா வி. கே. சசிகலா !



**சென்னை, மே 05:**

2026 சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து புரட்சித்தாய் சின்னம்மா வி. கே. சசிகலா அவர்கள் வெளியிட்ட அறிக்கை: நடைபெற்று முடிந்த தமிழ்நாடு சட்டமன்ற பேரவைப் பொதுத் தேர்தலில் அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட கழக வேட்பாளர்களுக்கு வாக்குகளை அளித்த தமிழக வாக்காள பெருமக்களுக்கு முதலில் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தேர்தலில் எனது பிரதான கோரிக்கையை மக்கள் அங்கீகரித்து உள்ளார்கள், எதிரிகளும், துரோகிகளும் வீழ்த்தப்பட்டுள்ளார்கள். திமுக மன்னராட்சியை முடிவுக்கு கொண்டு வந்த தமிழக மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகவரலாற்றில் போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் த/விஜய்க்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித்தலைவர் மற்றும் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் தமிழக மக்களின் உரிமைகளுக்காகவும், நலனுக்காகவும் எனது குரல் தொடர்ந்துஒலித்துக்கொண்டே இருக்கும்.

எனது எஞ்சியிருக்கும் காலம் முழுவதும் தமிழக மக்களுக்காகவே உழைப்பேன் என்றும், தமிழக மக்களுக்கு என்றென்றும் துணை நிற்பேன் என்றும்இந்நேரத்தில் உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் மிகக்குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்த கே.பி. முனுசாமி

தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 194 தொகுதிகளுக்கு முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. எடப்பாடி தொகுதியில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இதுதான் அதிக வாக்குகள் வித்தியாத்திலான வெற்றியாகும்.

இந்த நிலையில் வேப்பன ஹல்லி திமுக வேட்பாளர் 138 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். திமுக வேட்பாளர் பி.எஸ். சீனிவாசன் 74691 வாக்குகள் பெற்றுள்ளார். அதிமுக-வைச் சேர்ந்த கே.பி. முனுசாமி 74553 வாக்குகள் பெற்று தோல்வியை சந்தித்துள்ளது. த.வெ.க. வேட்பாளர் 63907 வாக்குகள் பெற்றுள்ளார்.

## நடிகை ஜான்வி கபூர் மது அருந்துவாரா..? சமூக வலைதள செய்திகளுக்கு கண்டனம்



**மும்பை, மே 05:**

நடிகை ஜான்வி கபூர் தனக்கு மதுப்பழக்கம் இருப்பதாக பரவிய தவறான செய்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். பாலிவுட் நடிகை ஜான்வி கபூர் சமீபத்தில் பங்கேற்ற நிகழ்ச்சியில் தனது தனிப்பட்ட வாழ்க்கை குறித்து வெளிப்படையாக பேசினார். அப்போது தனது வாழ்வில் நடந்த ஒரு மோசமான சம்பவத்திற்கு பிறகு, அதிலிருந்து மீள அடிக்கடி மது அருந்தியதாக தெரிவித்தார். இது குறித்து அவர் பேசுகையில், 'நான் மதுவுக்கு அடிமையானவள் என்றோ அல்லது மதுவை தவறாக பயன்படுத்தியவள் என்றோ சொல்ல மாட்டேன். ஆனால் அந்த காலகட்டத்தில் அடிக்கடி மது அருந்தினேன். எனக்கு போதையாக வேண்டும் என்ற எண்ணம் மட்டும் அப்போது இருந்தது' என்று கூறியிருந்தார்.

இந்த பழைய பேட்டியை அடிப்படையாக வைத்து, ஜான்வி கபூர் மதுப்பழக்கத்திற்கு அடிமையாகி அதற்காக சிகிச்சை பெற்றார் என்ற ரீதியில் சமூக வலைதளங்களில் செய்திகள் பரவின. இந்நிலையில், ஜான்வி கபூர் தனது 'ஆப் தி ராக்ஸ்' என்ற விழிப்புணர்வு அமைப்பு மூலம் அதிகாரப்பூர்வ விளக்கம் அளித்துள்ளார். கிளிக்பைட் செய்திகளுக்காக தனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் தவறான தகவல்கள் பரப்பப்படுவதாக அவர் சாடினார்.

மதுப்பழக்கம் தொடர்பான விழிப்புணர்வு பணிகளில் தான் ஒரு ஆதரவாளராக மட்டுமே செயல்படுவதாகவும், தனக்கு மது அருந்தும் பழக்கமோ அல்லது போதைக்கு அடிமையாகும் தன்மையோ கிடையாது என்றும் அவர் தெளிவுபடுத்தினார். இது போன்ற தவறான செய்திகள் உண்மையாகவே பாதிப்பில் இருப்பவர்களின் உணர்வுகளை அவமதிக்கும் செயல் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ரவுசு மணி

பேசிப் பேசியே ஏமாற்றி விடுவார்கள் என்று சொல்வதெல்லாம் பொய்..... அவர்கள் பேச்சில் ஏமாந்து போவது நாம் தான்.



V.முத்து ராமகிருஷ்ணன்

## 2026 தேர்தல்: தமிழ்நாட்டில் நான்கு கட்சித் தலைவர்கள் தோல்வி!

**சென்னை, மே 05:**

தமிழ்நாட்டில் 234 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான தேர்தல் கடந்த மாதம் 23ஆம் தேதி நடைபெற்றது. திமுக தலைமையிலான கூட்டணி, அதிமுக தலைமையிலான கூட்டணி, தவெக, நாதக என நான்குமுனை போட்டி நிலவியது. இதில் திமுக கூட்டணியே பெரும்பான்மை தொகுதிகளை கைப்பற்றி ஆட்சி அமைக்கும் என கருத்துக்கணிப்புகள் கூறின.

எதிர்க்கட்சியாக அதிமுக வரும் என தெரிவித்தன. ஆனால் ஆக்ஸிஸ் மை இந்தியாவைத் தவிர மற்ற அனைத்து கருத்துக்கணிப்புகளும் தவிடுப்பொடியாகியுள்ளன.

நடிகர் விஜய்யின் தவெக 107 தொகுதிகளில் முன்னிலைப் பெற்றுள்ளது. திமுக கூட்டணி 74 தொகுதிகளில் முன்னிலைப் பெற்றுள்ளது. அதிமுக கூட்டணி 53 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. இந்நிலையில் இத்தேர்தலில் போட்டியிட்ட நான்கு கட்சித் தலைவர்கள் தோல்வியை தழுவியுள்ளனர்.

திமுக தலைவரும், முதலமைச்சருமான ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் தவெக வேட்பாளர் வி.எஸ்.பாபுவிடம் தோல்வியை தழுவியுள்ளார். காங்கிரஸ் மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகையும் தோல்வியை தழுவியுள்ளார். ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் போட்டியிட்ட அவர், தவெக வேட்பாளர் தென்னரசுவிடம் தோல்வியை தழுவியுள்ளார். சாத்தூரில் போட்டியிட்ட பாஜக மாநிலத்தலைவர் நயினார் நாகேந்திரனும் தோல்வியை தழுவியுள்ளார். அங்கு திமுக வேட்பாளர் கடற்கரை ராஜ் வெற்றிப் பெற்றுள்ளார். இவர்களை தாண்டி முதலமைச்சர் வேட்பாளரான நாதக தலைவர் சீமான் டெபாசிட் கூடப் பெறாமல் தோல்வியைத் தழுவியுள்ளார்.

## தென்காசி மாவட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய திமுக: த.வெ.க.வுக்கு ஒரு தொகுதி கூட கிடைக்கவில்லை







தமிழக சட்டசபை தேர்தலில் கன்னியாகுமரியைத் தொடர்ந்து தென்காசி மாவட்டத்தில் தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஒரு இடம் கூட கிடைக்கவில்லை.

1. சங்கரன்கோவில் தொகுதியில் அதிமுக வேட்பாளர் திலிபன் ஜெய்சங்கர் வெற்றி பெற்றுள்ளார். தவெக 2-வது இடம் பிடித்துள்ளது.

2. வாசுதேவநல்லூர் தொகுதியில் 3-வது இடத்தை பிடித்துள்ளது. திமுக வெற்றி பெற்றுள்ளது.

3. கடையநல்லூர் தொகுதியில் தவெக 3-வது இடத்தை பிடித்துள்ளது. திமுக வெற்றி பெற்றுள்ளது.

4. தென்காசி தொகுதியில் திமுக வேட்பாளர் கலை கதிரவன் வெற்றி பெற்றுள்ளார். தவெக 3-வது இடத்தை பிடித்துள்ளது.

5. ஆலங்குளம் தொகுதியில் திமுக வேட்பாளர் மனோஜ் பாண்டியன் வெற்றி பெற்றுள்ளார். தவெக 3-வது இடத்தை பிடித்துள்ளது.

# சுற்றுலா: ஊட்டி மலை ரயில் பயணம்- மறக்க முடியாத அனுபவம்!



ஊட்டி ரயில் பயணம் என்பது வரலாற்று சிறப்புமிக்கது. இந்த ரயிலானது மேட்டுப்பாளையத்தில் இருந்து இயக்கப்படுகிறது. இதில் பயணம் செய்வது மறக்க முடியாத அனுபவமாக இருக்கும். 1899 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் துவக்கப்பட்டது. இதில் பயணம் செய்யும்போது இரண்டு புறமும் அழகான இயற்கை காட்சிகள் வளைந்து நெளிந்து செல்லும் பாதைகள் பள்ளத்தாக்குகள் ஏரிகள் இயற்கை எழில் கொஞ்சும் மரங்கள் பறவைகளின ஓசைகள் என மனதை கொள்ளை கொள்ளும்.

இந்த ரயிலில் பயணம் செய்ய 25 ரூபாய் முதல் 250 ரூபாய் வரை கட்டணம் வசூலிக்கிறார்கள். நூற்றாண்டுகளுக்கும் மேலாக உள்ள சிறப்புமிக்க ரயிலாகும். இந்த ரயிலில் பயணம் செய்வதன் மூலம் ஊட்டியின் முழு அழகையும் ரசிக்கலாம். இது முழுக்க முழுக்க மீட்டர் கேஜ் ரயில்பாதை ஆகும். மலைகளின் ராணி என அழைக்கப்படும் ஊட்டி இயற்கையான புல்வெளிகள் இனிமையான சூழல் குளிர்ந்த வானிலை மூலம் உங்களை வரவேற்கும். இதனிடையே அவலாஞ்சி, தொட்டபெட்டா சிகரம், மான் பூங்கா மங்குரா, ஊட்டி தாவரவியல், பூங்கா ஊட்டி ஏறி, கலகட்டி நீர்வீழ்ச்சி முதுமலை தேசிய பூங்கா, ரோஸ் கார்டன் மற்றும் பல வியூ பாய்ண்டுகள் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இதனை கோடை தலைநகரமாக வைத்திருந்தார்கள். இந்த ரயில் ஊட்டியின் ஆன்மா போன்றது. வளைந்து நெளிந்து செல்லும் பாதைகள் சுரங்கங்கள் பாலங்கள் என பரவசமூட்டுகின்றன. 1908 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் இந்த மீட்டர் கேஜ் பாதையை உருவாக்கினார்கள். யுனெஸ்கோ மூலம் அங்கீகரிக்கப்பட்டது.

மேற்கு தொடர்ச்சி மலையில் அடர்ந்த வனப்பகுதிகள் பசுமை யான தேயிலை தோட்டங்கள் ஆழமான பள்ளத்தாக்குகள் நீர்வீழ்ச்சிகள் மலைமுகடுகளை காணலாம். குறுகலான மலைப்பா தைகளிலும் செங்குத்தான ஏற்ற இறக்கங்களிலும் செல்வது புதிய அனுபவமாக இருக்கும். ரயிலில் செல்லும்போது மெதுவாக செல்வதால் இயற்கை அழகை ரசிப்பதுடன் கேமரா மூலம் போட்டோ எடுத்துக் கொள்ளலாம். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இந்த ரயிலில் செல்ல விரும்புவார்கள்.

பொம்மை ரயில் போன்று செல்வதால் மனதிற்கு புத்துணர்ச்சியும் தெம்பும் கிடைக்கிறது. இந்த ரயிலில் நிறைய திரைப்படங்கள் படமாக்கப்பட்டுள்ளது. இயற்கை அழகை ரசித்தபடி செல்வது சுகமான அனுபவமாகும். மேட்டுப்பாளையம் மற்றும் ஊட்டி சாலை ரயில் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இதனிடையே கல்லாவி அடர்லி ஹால்ரோஸ், வெலிங்டன் அரவங்காடு கெட்டி குன்னூர் லவ் டேல் போன்ற அனைத்து இடங்களையும் பார்வையிடலாம். கோடை விடுமுறை பண்டிகை காலங்களில் கூட்டம் அதிகமாக இருக்கும். தடக் தடக் என்று செல்வது சுகமான அனுபவமாக உள்ளது. 1854 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் இதனை கட்டமைக்க தொடங்கினார். 2005 ஆம் ஆண்டு யுனெஸ்கோ இதனை பாரம்பரிய சின்னமாக அறிவித்தது. மேட்டுப்பாளையம் டு ஊட்டி வரை 46 கிலோமீட்டர் தூரம் உள்ளது. ஊட்டி கடல் மட்டத்திலிருந்து 2200 மீட்டர் உயரத்தில் உள்ளது. வெளிமாநிலத்தவர்களும் வெளிநாட்டவர்களும் இதில் அதிகம் பயணம் செய்கின்றனர்.

இந்த ரயில் ஒரு மணிக்கு 10 கிலோமீட்டர் வேகத்தில்தான் செல்லும். 46 கிலோ மீட்டர் சென்றடைய சுமார் 4 மணி நேரம் எடுத்துக்கொள்கிறது. 208 கொண்டை வளைவுகளை கொண்டது. பார்ப்பதற்கும் பயணம் செய்வதற்கும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

உண்மையிலேயே இந்த ரயிலில் பயணம் செய்வது ஒரு புதிய அனுபவமாக இருக்கும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### எஸ்பிஐ வங்கியில் வேலை வேண்டுமா?

பொதுத்துறை வங்கிகளில் முதன்மை வங்கியான ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவில்(பாரத ஸ்டேட் வங்கி) நிரப்பப்பட உள்ள சிறப்பு அலுவலர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியானவர்களிடம் இருந்தும் வரும் மே 4 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வேலைவாய்ப்பு அறிவிப்பு எண்.: CRPD/SCO/2026-27/04

பணி: Lead Business Analyst காலியிடங்கள்: 8

தகுதி: கணினி அறிவியல், ஐடி, எலக்ட்ரானிக்ஸ், எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ், டேட்டா சயின்ஸ், ஏஐ மற்றும் எம்சி, அனலிடிக்ஸ் போன்ற ஏதாவதொரு பிரிவில் பிஇ அல்லது பி.டெக் முடித்து 8 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு: 31.3.2026 தேதியின்படி 30 லிருந்து 40 க்குள் இருக்க வேண்டும்.

பணி: Group Chief Economic Advisor காலியிடம்: 1

தகுதி: பொருளாதாரத்தில் முதுநிலைப் பட்டம் பெற்று 8 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு: 31.3.2026 தேதியின்படி 55 முதல் 62-க்குள் இருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: நேர்முகத்தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பக் கட்டணம்: ரூ. 750. கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும். எஸ்சி, எஸ்டி, மாற்றுத்திறனாளி பிரிவினர்களுக்கு கட்டணம் செலுத்துவதில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் முறை: https://sbi.bank.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். எதிர்கால பயன்பாட்டிற்காக ஆன்லைனில் விண்ணப்பித்தவுடன் அதனை பிரிண்ட் அவுட் எடுத்து வைத்துக்கொள்ளவும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 4.5.2026

## உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்’ விதிகள் வகுக்க அரசுக்கு உத்தரவு

**சென்னை, மே 5:**

தமிழக அரசு அறிவித்துள்ள புதிய ‘உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திற்கான’ வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் விதிகளை வெளியிடக் கோரிய வழக்கில், அடுத்த 8 வாரங்களுக்குள் விளக்கமளிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

2026 ஜனவரி முதல் அரசு ஊழியர்களுக்கு ‘உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்’ அமல்படுத்தப்படும் என்று தமிழக அரசு ஏற்கெனவே அறிவித்திருந்தது. எனினும் இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான முறையான விதிகள் இன்னும் வகுக்கப்படவில்லை என்ற நிலை நீடித்து வருகிறது.

இந்நிலையில், தமிழ்நாடு பழைய ஓய்வூதியத் திட்ட மீட்பு இயக்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் நந்தகோபால் உள்ளிட்டோர் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர். பழைய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு பணியில் சேர்ந்து, 2026-க்கு முன்னதாகவே ஓய்வு பெற்ற தங்களுக்கு புதிய திட்டத்தின் கீழ் சிறப்பு கருணை ஓய்வூதியம் பெறத் தகுதி இருப்பதாகவும், எனவே திட்டத்தின் செயல் பாட்டு விதிகளை உடனடியாக அறிவிக்க வேண்டும் என்றும் மனுதாரர்கள் கோரிக்கை வைத்திருந்தனர். இதனை விசாரித்த நீதிபதி பி.டி.ஆஷா, அடுத்த 8 வாரங்களுக்குள் விரிவான பதிலை தாக்கல் செய்யு மாறு அரசுக்கு உத்தரவிட்டார். வழக்கின் அடுத்தக் கட்ட விசாரணை தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

## 22.80 லட்சம் பேர் எழுதிய நீட் தேர்வு நிறைவு



**சென்னை, மே 5:**

மருத் துவப் படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வு நாடு முழுவதும் ஞாயிறன்று (மே 3) நடைபெற்றது. ஒவ்வொரு ஆண்டும் எம்பிபிஎஸ், பல் மருத்துவம், சித்தா, ஆயுர் வேதம் உள்ளிட்ட மருத்து வப் படிப்புகளில் சேர்வ தற்கு நீட் தேர்வு நடத்தப் பட்டு வருகிறது. அதன்படி நீட் நுழைவுத் தேர்வு நாடு முழுவதும் ஞாயிறன்று நடைபெற்றது. நாடு முழு வதும் 22.80 லட்சம் பேர் தேர்வு எழுதிய நிலையில், தமிழ்நாட்டில் 1.4 லட்சம் மாணவர்கள் நீட் தேர்வு எழுதினர். தமிழகத்தில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை உட்பட 30 நகரங்கள் என மொத்தம் 552 நகரங் களில் சுமார் 5,500 மை யங்களில் விண்ணப்பித் தவர்கள் தேர்வு எழுதினர். நீட் தேர்வு முடிந்து வெளியே வந்த மாண வர்கள், இந்தாண்டு நீட் தேர்வு எளிமையாக இருந்ததாகவும், குறிப்பாக வேதியியல், இயற்பி யல் கடினமாக இருந்த தாகவும், விலங்கியல் எளி மையாக இருந்ததாகவும் கருத்து தெரிவித்தனர்.

## கண்டெய்னர் லாரி மீது ஆம்னி பஸ் மோதி விபத்து-15-க்கும் மேற்பட்ட பயணிகள் காயம்

**சென்னை, மே 5:**

பெரம்பலூரில் இருந்து மும்பை நோக்கி ஒரு கண்டெய்னர் லாரி புறப்பட்டு வந்து கொண்டு இருந்தது. இந்த லாரி சேலம் மாவட்டம் ஆத்தூர் அடுத்த காந்திபுரம் பகுதியில் நள்ளிரவில் வந்து கொண்டு இருந்தது. அப்போது திடீரென கண்டெய்னர் லாரி பழுதாகியுள்ளது. இதையடுத்து கண்டெய்னர் லாரி டிரைவர் லாரியை சரிசெய்ய சேலம்-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் கண்டெய்னர் லாரியை ஓட்டி சென்றார்.


அப்போது கரூரில் இருந்து சென்னை நோக்கி ஒரு ஆம்னி பஸ் சென்று கொண்டு இருந்தது. பஸ்சில் 36 பயணிகள் இருந்தனர். அப்போது ஆம்னி பஸ் எதிர்பாராதவிதமாக கண்டெய்னர் லாரி மீது மோதி விபத்தானது.

இந்த விபத்தில் ஆம்னி பஸ்சில் பயணம் செய்த 15-க்கும் மேற்பட்ட பயணிகள் காயம் அடைந்தனர். இரவு நேரம் என்பதால் அனைவரும் அயர்ந்து தூங்கி கொண்டு இருந்தனர். அந்த நேரத்தில் இந்த விபத்து நடந்ததால் பஸ்சில் இருந்த பயணிகள் அனைவரும் அலறி சத்தம் போட்டனர்.

இந்த விபத்து பற்றி தெரியவந்ததும் ஆத்தூர் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். பின்னர் விபத்தில் காயம் அடைந்த ஆம்னி பஸ் பயணிகள் 15-க்கும் மேற்பட்டோரை மீட்டு சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் கண்டெய்னர் லாரியில் வந்த அரியானாவை சேர்ந்த 3 பேரும் காயம் அடைந்தனர். அவர்களையும் மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து 4 பெண்கள் உள்பட 6 பேர் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த விபத்து குறித்து ஆத்தூர் ஊரக போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## ஊட்டியில் குவிந்த சுற்றுலா பயணிகள்



**ஊட்டி, மே 5:**

மே தினம் மற்றும் தொடர் விடுமுறை காரணமாக ஊட்டியில் ஏராளமானோர் குவிந்தனர். ஞாயிற்றுக்கிழமையான நேற்று அரசு தாவரவியல் பூங்கா, படகு இல்லம் மற்றும் ரோஜா பூங் காவில் மக்கள் கூட்டம் அலை மோதியது.

இதனால் பூங்காக்களில் நுழைவு சீட்டு வாங்க சுற் றுலா பயணிகள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும், ஊட்டி யில் அனைத்து ஹோட்டல் கள் மற்றும் தங்கும் விடுதிகள் நிரம்பி வழிகின்றன.

அறைகளின் கட்டணம் பல மடங்கு உயர்த்தப்பட்ட போதிலும், அனைத்து விடுதி களும் முன்பதிவு செய்யப்பட் டு, இடம் கிடைக்காத நிலை ஏற்பட்டு உள்ளது.

சமவெளிப் பகுதிகளில் இருந்து சுற்றுலா பயணிகளின் வாகனங்கள் அதிகம் வருவ தால், போக்குவரத்து பாதிப்பு ஏற்படாமல் இருக்கும் வகை யில் ஊட்டி நகரில் போக்கு வரத்தில் மாற்றம் செய்யப்பட் டிருந்தது.

கேரளம், கர்நாடகா உள் ளிட்ட வெளி மாநில சுற்றுலா வாகனங்கள், நீதிமன்ற உத் தரவுப்படி மசினகுடி - கல் லட்டி வழியாக ஊட்டி செல் வதற்கு, மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளதால், சுற் றுலா வாகனங்கள் கூடலூர் வழியாகச் செல்கின்றன.

இதனால், கூடலூர் நகரில் போக்குவரத்து நெரிசல் அதி கரித்துள்ளது. உள்ளூர் வாக னங்களை இயக்க நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி இருப்ப தால் ஓட்டுநர்கள், பயணிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

## தர்மபுரியில் மாடு மேய்க்க சென்ற விவசாயி யானை தாக்கி பலி



**தர்மபுரி, மே 5:**

தர்மபுரி மாவட்டம் ஏரியூர் அருகே உள்ள நாகமரை ஊராட்சி ஏமனூரை சேர்ந்த காத்தப்பன் (வயது 60), விவசாயி. இவர் மாடுகள் வளர்த்து வந்தார். இவர் நேற்று முன்தினம் ஏமனூர் வனப்பகுதியில் மாடு மேய்க்க சென்றார். இரவு நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை.

இதனால் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அவரை வனப்பகுதிக்கு சென்று தேடியும் காணவில்லை. ஆனால் மாடுகள் மட்டும் வீட்டுக்கு வந்தன.

இந்த நிலையில் நேற்று காத்தப்பனின் குடும்பத்தினர் வனப்பகுதிக்கு சென்று அவரை தேடினர். அப்போது வனப்பகுதியில் காத்தப்பன் யானை தாக்கியதில் உடலில் பலத்த ரத்தக்காயங்களுடன் பிணமாக கிடந்தது தெரியவந்தது.

இதுகுறித்து ஏரியூர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று காத்தப்பனின் உடலை கைப்பற்றி பென்னாகரம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சென்னை ரயில்வே கோட்டத்தில் டிக்கெட் இன்றி பயணம்: 12 லட்சம் வழக்குகள் பதிவு



**சென்னை, மே 5:**

கடந்த நிதியாண்டில், சென்னை ரயில்வே கோட்டத் துக்கு உட்பட்ட ரயில் நிலை யங்கள், ரயில்களில் டிக்கெட் இல்லாமல் பயணம், முறையற்ற பயணம் உள்ளிட்ட பிரிவுகளில் 12.24 லட்சம் வழக்குகள் பதிந் து, ரூ.65.16 கோடி வசூலிக்கப் பட்டுள்ளதாக ரயில்வே அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரி கள் கூறியதாவது: சென்னை ரயில்வே கோட்டத்தில் கடந்த நிதியாண்டில் (2025-26), ரயில் நிலையங்கள் மற்றும் ரயில் களில் சோதனை மேற்கொள் ளப்பட்டது.

டிக்கெட் இல்லாமல் பயணம், முறையற்ற பயணம் மேற்கொண்டது தொடர்பாக, 12.24 லட்சம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ரூ.65.16 கோடி அபராதம் வசூலிக் கப்பட்டுள்ளது. பயணிகள் ரயில் நிலைய வளாகத்துக் குள் நுழைவதற்கு முன்னரே முறையான டிக்கெட்களைப் பெற்று, அபராதம் மற்றும் சட்ட நடவடிக்கைகளைத் தவிர்க்க அறிவுறுத்தப்படு கின்றனர். பயணிகள் தங் கள் பயணத்தைத் தொடங்கு வதற்கு முன் டிக்கெட்களை சரிபார்த்துக் கொள்ள அறி வுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.


# சென்னை ரயில்வே கோட்டம் சரக்கு போக்குவரத்து மூலமாக ரூ.1,289 கோடி வருவாய் ஈட்டி சாதனை

**சென்னை, மே 5:**

சென்னை ரயில்வே கோட்டம் கடந்த நிதியாண்டில் (2025-26) சரக்குப் போக்குவரத்து மூலமாக ரூ.1,289 கோடி வருவாய் ஈட்டி சாதனை படைத்துள்ளது.

தெற்கு ரயில்வேயில் 6 கோட்டங்களின் ஒன்றான சென்னை கோட்டம் கடந்த நிதியாண்டில் (2025-26) சரக்குப் போக்குவரத்து செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க சாதனையைப் படைத்துள்ளது.

கடந்த நிதியாண்டில் மொத்தம் ரூ.1,289.78 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. இதுதவிர பல புதிய சரக்குப் போக்குவரத்து சேவைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது.



இந்த நிதியாண்டில் சென்னை ஜவஹர் டாக் துறை முகத்திலிருந்து பொன்மலை (கோல்டன் ராக் - பாய்லர் பிளான்ட்) பகுதிக்கு முதன்முறையாக இரும்புக் குழாய்கள் கொண்டு செல்லப்பட்டன.

இது சென்னை கோட்டத்தின் சரக்குப் போக்குவரத்து பட்டியலில் ஒரு முக்கியச் சேர்க்கையாக அமைந்துள்ளது. சுற்றுச் சூழலுக்கு உகந்த சரக்கு போக்குவரத்தை ஊக்குவிக்கும் நோக்கில், மின்சார ஆட்டோக்களின் சரக்குப் போக்குவரத்தை சென்னை கோட்டம் தொடங்கியது.

'மான்ட்ரா எலக்ட்ரிக்' ஆட்டோக்கள் தடாவில் இருந்து ரங்காபானிக்கும், 'மஹிந்திரா எலக்ட்ரிக்' ஆட்டோக்கள் ஜோலார்பேட்டையில் இருந்து வடகிழக்கு எல்லை ரயில்வேயின் (NFR) கீழ் உள்ள சால்சாப்ரா மற்றும் ஜிரானியா நிலையங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டன.

சரக்குப் போக்குவரத்து உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் விதமாக, பொன்னேரி அருகே உள்ள அனுப்பம்பட்டு கிராமத்தில் சென்னை கோட்டத்தின் இரண்டாவது 'கதி சக்தி மல்டி மாடல் சரக்கு முனையம்' பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த முனையத்திலிருந்து, 45 பி.எல்.சி.ஏ. வேகன்கள் கொண்ட முதல் சரக்கு ரயில் பொன்னேரியிலிருந்து தென்கிழக்கு ரயில்வேயின் சக்ரதர்பூர் கோட்டத்தில் உள்ள மகாவீர் ஃபெரோ அலாய்ஸ் நிறுவனத்தின் தனியார் சரக்கு முனையத்துக்கு 1,389 கி.மீ தூரத்தைக் கடந்து சென்றது.

இவை அனைத்தும் சரக்கு போக்குவரத்துத் திறனை மேம்படுத்தும் நோக்கில் செய்யப்பட்டுள்ளன. இத்தகவல் சென்னை ரயில்வே கோட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### மும்பையில் ரூ.7 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல்: 2 பேர் கைது

**மும்பை, மே 5:**

கென்ய நாட்டின் தலைநகர் நைரோபியில் இருந்து வந்த விமானம் ஒன்று நேற்று மும்பை விமான நிலையத்தில் தரையிறங்கியது. இதையடுத்து, அந்த விமானத்தில் வந்திறங்கிய தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரை சேர்ந்த ஜெஸ்ரீல் லுவோடா என்ற பயணியை அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அதில் அவர் உடைமைகளில் மறைத்து வைத்து கடத்தி வந்த 1,426 கிராம் கொகைன் என்ற போதைப்பொருளை அதிகாரிகள் கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருளின் சர்வதேச மதிப்பு சுமார் ரூ.7 கோடி ஆகும். இதையடுத்து ஜெஸ்ரீல் லுவோடாவை அதிகாரிகள் கைது செய்தனர். மேலும் இது தொடர்பாக தென் மும்பையின் நாக்பாடா பகுதியை சேர்ந்த பட்டேலையும் அதிகாரிகள் அதிரடியாக கைது செய்தனர்.

### பேத்தியை பாலியல் வன்கொடுமை செய்து கொன்ற தாத்தா?: திரிபுராவில் கொடூரம்

**அகர்தலா, மே 5:**

திரிபுரா மாநிலம் சிபாஹிஜாலா மாவட்டத்தில் உள்ள சோனாமுரா பகுதியில், 10-ம் வகுப்பு மாணவி மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் மாநிலம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சந்தன்முரா கிராமத்தைச் சேர்ந்த 16 வயது சிறுமி, கடந்த வெள்ளிக்கிழமை அவரது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டார். சிறுமியின் தந்தை பெங்களூருவில் பணியாற்றி வருகிறார். சிறுமியின் தாய் உயிரிழந்த நிலையில், தந்தை மறுமணம் செய்துகொண்டதால், அந்தச் சிறுமி தனது தாத்தா (70) மற்றும் பாட்டியுடன் தங்கிப் படித்து வந்துள்ளார்.

இதற்கிடையில், உயிரிழந்த சிறுமியின் தந்தை, தாத்தா மீது புகார் அளித்துள்ளார். அவர் சிறுமியை வன்கொடுமை செய்து கொன்றதாக புகாரில் தெரிவித்துள்ளார். புகாரின் அடிப்படையில், தாத்தாவை கைது செய்து போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

சிறுமியின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. அதன் அறிக்கை திங்கட்கிழமை (இன்று) வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிரேதப் பரிசோதனை முடிவுகள் வந்த பிறகே, மரணத்திற்கான முழுமையான காரணம் குறித்த கூடுதல் தகவல்கள் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.

### மராட்டிய மாநிலம்: 3 வயது குழந்தைக்கு பாலியல் வன்கொடுமை - வாலிபர் கைது

**மும்பை, மே 5:**

மராட்டிய மாநிலம் நாசிக் மாவட்டத்தில், 3 வயது குழந்தை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக, 19 வயது இளைஞர் சமீர் மகாலே என்பவரை போலீசார் கைது செய்துள்ளனர்.

சம்பவத்தன்று குழந்தையின் தந்தை திருமண நிகழ்ச்சிக்கு சென்றிருந்த நிலையில், வீட்டில் குழந்தையின் தாயும், சகோதரனும் இருந்துள்ளனர். குழந்தையின் தாய் தண்ணீர் பிடிப்பதற்காக சிறிது நேரம் வெளியே சென்றிருந்தார். அந்த சமயத்தில் வீட்டிற்குள் நுழைந்த சமீர், குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.

அப்போது குழந்தையின் சகோதரன் சத்தம் போட்டு தனது தாயை அழைத்த நிலையில், சமீர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார். பாதிக்கப்பட்ட குழந்தையின் தாய், தந்தை இருவரும் விவசாய கூலிகளாக வேலை செய்து வருகின்றனர். அவர்கள் இந்த சம்பவம் குறித்து போலீசாரிடம் புகார் அளித்த நிலையில், போலீசார் தீவிர விசாரணை நடத்தி சமீர் மகாலேவை அதிரடியாக கைது செய்தனர். அவர் மீது போக்சோ பிரிவின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

## விளையாட்டு செய்திகள்

### தாமஸ் கோப்பை பாட்மிண்டன் தொடர்: அரை இறுதியில் இந்திய அணி தோல்வி

**ஹார்சென்ஸ், மே 5:**

டென்மார்க்கின் ஹார்சென்ஸ் நகரில் தாமஸ் கோப்பை பாட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் அரை இறுதி சுற்றில் இந்திய ஆடவர் அணி நேற்று முன்தினம் இரவு பிரான்ஸ் அணியுடன் மோதியது.

இதில் இந்திய அணி 0-3 என்ற கணக்கில் தோல்வி அடைந்து வெண்கலப் பதக்கம் பெற்று தொடரை நிறைவு செய்தது. இந்திய அணியில் காயம் காரணமாக லக் ஷயா சென் களமிறங்கவில்லை. அவருக்கு பதிலாக ஹெச்.எஸ் .பிரனாய் விளையாடினார். முதலில் நடைபெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி 11-21, 9-21 என்ற செட் கணக்கில் உலகத் தரவரிசையில் 4-வது இடத்தில் உள்ள கிறிஸ்டோ போபோவிடம் தோல்வி அடைந்தார்.

4-வது முறையாக இதைத் தொடர்ந்து நடைபெற்ற அடுத்த ஆட்டத்தில் கிடாம்பி ஸ்ரீகாந்த் 16- 21, 18- 21 என்ற செட் கணக்கில் 10-ம் நிலை வீரரான அலெக்ஸ் லானியரிடம் வீழ்ந்தார். இதன் பின்னர் 3-வது ஆட்டத்தில் இந்தியாவின் ஹெச் .எஸ்.பிரனாய், தோமா ஜூனியர் போபோவுடன் மோதினார். இதில் ஹெச்.எஸ்.பிரனாய் 19- 21, 16-21 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்தார்.

2022-ம் ஆண்டு சாம்பியனான இந்திய அணி தாமஸ் கோப்பை தொடரில் வெண்கலப் பதக்கம் வெல்வது இது 4-வது முறையாகும். கடந்த 1952, 1955 மற்றும் 1979ம் ஆண்டுகளிலும் இந்தியா வெண்கலப் பதக்கம் கைப்பற்றியிருந்தது.

### வருண் சக்ரவர்த்தி, சுனில் நரைன் அசத்தல்: ஹைதராபாத் அணியை வீழ்த்தியது கொல்கத்தா

**ஹைதராபாத், மே 5:**

ஐபிஎல் தொடரில் நேற்று ஹைதராபாத்தில் உள்ள ராஜீவ் காந்தி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. முதலில் பேட் செய்த ஹைதராபாத் அணிக்கு டிராவிஸ் ஹெட் அதிரடி தொடக்கம் கொடுத்தார். வைபவ் அரோரா வீசிய 2-வது ஓவரில் டிராவிஸ் ஹெட் 4 பவுண்டரிகளை விளாசி அசத்தினார். தொடர்ந்து சுனில் நரைன் வீசிய 3-வது ஓவரில் தலா ஒரு சிக்ஸர், பவுண்டரி விரட்டினார் டிராவிஸ் ஹெட். அதேவேளையில் நிதானமாக விளையாடிய அபிஷேக் சர்மா 10 பந்துகளில், ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரியுடன் 15 ரன்கள் எடுத்த நிலையில் கார்த்திக் தியாகி 144 கிலோ மீட்டர் வேகத்தில் பேக் ஆ◦ஃப் தி லென்ந்த்தில் வீசிய பந்தை விளாச முயன்ற போது மிட்விக்கெட் திசையில் நின்ற கேமரூன் கிரீனிடம் கேட்ச் ஆனது. மறுபுறம் கார்த்திக் தியாகி வீசிய 6-வது ஓவரில் இஷான் கிஷன் தலா ஒரு பவுண்டரி, சிக்ஸர் பறக்கவிட்டார். இதனால் பவர்பிளேவில் ஹைதராபாத் அணி 71 ரன்கள் குவித்தது. வருண் சக்ர வர்த்தி வீசிய 7-வது ஓவரில் டிராவிஸ் ஹெட் தலா ஒரு பவுண்டரி, சிக்ஸர் விளாசினார். மட்டையை சுழற்றிய டிராவிஸ் ஹெட் 28 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 9 பவுண்டரிகளுடன் 61 ரன்கள் விளாசிய நிலையில் வருண் சக்ரவர்த்தி பந்தில் ஆட்டமிழந்தார். ரிங்கு சிங் 11 பந்துளில், ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகளுடன் 22 ரன்களும், கேமரூன் கிரீன் 3 ரன்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகனாக வருண் சக்ரவர்த்தி தேர்வானார். 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணிக்கு இது 3-வது வெற்றியாக அமைந்தது.

# பட்டாசு ஆலை வெடி விபத்தில் காயம் தீயணைப்பு வீரர்கள், போலீசாரின் மருத்துவச் செலவை ஏற்க தமிழக அரசுக்கு கோரிக்கை

**விருதுநகர், மே 5:**

விருதுநகர் அருகே கட்டனார்பட்டி பட்டாசு ஆலையில் இரண்டாவதாக நடைபெற்ற வெடி விபத்தில் காயமடைந்த தீயணைப்பு வீரர்கள் மற்றும் போலீசாரின் மருத்துவச் செலவுகளை தமிழக அரசு ஏற்க வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.



விருதுநகர் அருகே உள்ளது கட்ட னார்பட்டி. இங்குள்ள வனஜா பட்டாசு ஆலையில் கடந்த ஏப்.19 அன்று வெடி விபத்து ஏற்பட்டது. இதில் அங்கு பணி புரிந்த 25 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர்.

இந்நிலையில் அங்கு பாதுகாப்பு மற்றும் மீட்பு பணியில் தீயணைப்பு வீரர்கள் மற்றும் போலீசார் ஈடுபட்டிருந்தனர். இடிபாடுகளை பொக்லைன் இயந்திரம் மூலம் அகற்றிய போது எதிர்பாராத விதமாக உள்ளே இருந்த பட்டாசுகள் வெடித்துச் சிதறின.

இதில் பொக்லைன் இயந்திர ஓட்டுநர், அங்கிருந்த சிவகாசி முன்னணி தீயணைப்பு அலுவலர் அழகுச்சாமி (54), விருதுநகர் தீயணைப்பு அலுவலர் முத்துப்பாண்டியன் உள்ளிட்டோர் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

காயமடைந்த அழகுச்சாமி உள்ளிட்டோர் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு முதலுதவி சிகிச்சையளிக்கப்பட்டது.

பின்பு, மதுரைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். இதில் அழகுச்சாமி மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

அப்போது தீயணைப்புத்துறை இயக்குநர் சீமா அகர் வால் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

இந்தநிலையில் அழகுச்சாமிக்கு மருத்துவ காப்பீடாக ரூ.50 ஆயிரம் மட்டுமே கிடைத்ததாக கூறப்படுகிறது. மீதமுள்ள மருத்துவக் கட்டணத்திற்காக அவர் தனது சொந்த பணத்தை செலவு செய்துள்ளார். மேலும், கண்ணிலும் பாதிப்பு ஏற்பட்டதால் மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்ந்து சொந்த பணத்தை செலவு செய்து சிகிச்சை எடுத்து வருகிறார்.

எனவே, வெடி விபத்தில் கடுமையாக பாதிக்கப்பட்டு சொந்த பணத்தை செலவு செய்து சிகிச்சை பெற்று வரும் தீயணைப்பு அலுவலர்கள் மற்றும் காவல்துறையினருக்கு, முதலமைச்சர் சிறப்பு நிதி அல்லது மாவட்ட ஆட்சியரின் விருப்ப நிதி ஆகிய வற்றிலிருந்து வழங்க வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.

# திருச்செந்தூர் அருகே மினி சரக்கு வாகனத்தை திருடிச்சென்ற சிறுவன் - மடக்கி பிடித்த போலீசார்

**திருச்செந்தூர், மே 5:**

திருச்செந்தூர் பகுதியில் ஆட்டோ ஸ்டாண்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மினி சரக்கு வாகனம் திருடுபோன சில மணி நேரங்களிலேயே காவல்துறையினர் துரிதமாக செயல்பட்டு மீட்டனர். இந்த சம்பவத்தில் 13 வயது சிறுவன் ஒருவர் பிடிபட்டுள்ளார்.

திருச்செந்தூரைச் சேர்ந்த முத்து (24) என்பவர், தனக்குச் சொந்தமான TATA ACE மினி சரக்கு வாகனத்தை 02.05.2026 நள்ளிரவு அரசு மருத்துவமனை அருகிலுள்ள ஆட்டோ ஸ்டாண்டில் நிறுத்தி வைத்திருந்தார். பின்னர் திரும்பி வந்து பார்த்தபோது, வாகனம் திருடு போனதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இதுகுறித்து அவர் அளித்த புகாரின் பேரில், திருச்செந்தூர் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து உடனடியாக தேடுதல் நடவடிக்கையில் இறங்கினர்.

மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அனைத்து சோதனைச் சாவடிகளும் மற்றும் ரோந்து போலீசாரும் உஷார்படுத்தப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, ஸ்ரீவைகுண்டம் காவல் ஆய்வாளர் செந்தில்வேல் குமார் தலைமையில், ஆழ்வார்திருநகரி காவல் உதவி ஆய்வாளர் லதா உள்ளிட்ட போலீசார் சமத்துவபுரம் பகுதியில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது சந்தேகத்திற்கிடமான வகையில் வந்த TATA ACE வாகனத்தை நிறுத்திச் சோதனையிட்டதில், அது திருச்செந்தூரில் திருடுபோன வாகனம் என்பது உறுதி செய்யப்பட்டது.

வாகனத்தை ஓட்டி வந்தது திருநெல்வேலியைச் சேர்ந்த 13 வயது சிறுவன் என்பது தெரியவந்தது. உடனடியாக போலீசார் அந்த சிறுவனை கையகப்படுத்தி, வாகனத்தைப் பறிமுதல் செய்தனர்.

இந்த சம்பவம் குறித்து திருச்செந்தூர் போலீசார் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு மேலதிக விசாரணை நடத்தி வருகின்றனர். குற்றச்சம்பவம் நடந்த சில மணி நேரங்களிலேயே வாகனத்தை மீட்ட போலீசாரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சி. மதன் நேரில் அழைத்து பாராட்டினார்.

## வணிகச் செய்திகள்

### சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல் விலையை உயர்த்த வேண்டும்: எண்ணெய் நிறுவனங்கள் வலியுறுத்தல்

**மும்பை, மே 5:**

ஈரான் போர் காரணமாக கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருவதால் சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல் விலையை உயர்த்த வேண்டும் என எண்ணெய் நிறுவனங்கள் வலியுறுத்தி உள்ளன.

தற்காலிக போர் நிறுத்தத்தை அமெரிக்கா அறிவித்தது. எனினும், ஈரான் மீதான கடற்படை முற்றுகை தொடரும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்தார்.

இதையடுத்து, வியாழக்கிழமையன்று கச்சா எண்ணெய் விலை ஒரு பேரலுக்கு 126 டாலருக்கு மேல் உயர்ந்தது, பின்னர் சற்று குறைந்தது. இது ஹார்முஸ் ஜலசந்தியில் நீடித்த இடையூறு குறித்த கவலைகளை அதிகரித்தது.

இந்த விலை உயர்வு, அரசுக்குச் சொந்தமான எண்ணெய் நிறுவனங்களின் இழப்புகளை கணிசமாக விரிவுபடுத்தியுள்ளது, குறிப்பாக, பெட்ரோல், டீசல், விமான எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு (எல்பிஜி) ஆகியவற்றின் விற்பனையில் அதிக நஷ்யம் ஏற்பட்டு வருகிறது. எனவே, அவற்றின் விலையை உயர்த்த வேண்டும் என எண்ணெய் நிறுவனங்கள் மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளன.

பணவீக்கம் அதிகரிக்கும் ஆனாலும் மத்திய அரசு உடனடியாக விலையை உயர்த்துமா என்பது தெரியவில்லை. ஏனெனில், எரிபொருள் விலையை உயர்த்தினால் பணவீக்கம் கணிசமாக அதிகரிக்கும் என அரசு கருதுகிறது.

# சுத்தம், சுகாதாரமே நோயை தவிர்க்க சிறந்த வழி குழந்தைகள் நல நிபுணர் அறிவுறுத்தல்

**பாபநாசம், மே 5:**


சிறு குழந்தைகளுக்கு இந்த வெயில் காலத்தில் சிறுசிறு சிரங்குகள் மற்றும் வேனல் கட்டிகள் வருவது அடிக்கடி நாம் எதிர்கொள்ளும் பிரச்சினையாகும். ஒரு குழந்தையிடம் இருந்து மற்ற குழந்தைகளுக்கு இது எளிதில் பரவக்கூடிய தொற்றுநோயாகும். வெப்ப மண்டல நாடுகளில் உள்ள குழந்தைகளை எளிதில் பாதிக்கும் இந்நோய் ஸ்ட்ரெப்டோகாக்கஸ் மற்றும் ஸ்டெஃபைலோகாக்கஸ் எனும் நுண்ணியிர்களின் தொற்றினால் ஏற்படுகிறது.



இது பொதுவாக நீர் வடியும் புண்ணாகவோ அல்லது நீர் நிரம்பிய கொப்புளமாகவோ காணப்படும். புண்ணில் இருந்து வழியும் நீர் மூலம் ஒரு இடத்தில் இருந்து மற்ற இடங்களுக்கு எளிதில் பரவும் தன்மையுடையது. சில இடங்களில் நீரானது காய்ந்து தேனின் நிறத்தில் செதில்களாக காணப்படும். ஆரம்ப நிலையில் மருத்துவமனைகளை அணுகி மருத்துவம் செய்து கொண்டால் இந்நோய் மற்றவர்களுக்கு பரவாமல் தடுக்கலாம். மேலும், இதனால் வரும் பின் விளைவுகளையும் குறைக்கலாம். ஆனால் பெரும்பாலான பெற்றோர்கள் இதனை "அக்கி "என்று பெயரிட்டு பானை செய்யும் குயவர்களிடம் சென்று செம்மண்ணை குழப்பி புண்ணின் மீது தடவி வருவார்கள்.

இது வெந்த புண்ணில் வெந்நீர் ஊற்றுவதற்கு சமம். ஏனெனில் செம்மண்ணில் உள்ள கிருமி மூலம் தொற்று அதிகமாகி வேறுவிதமான நோய் தொற்றுகளை ஏற்படுத்திவிடும். சுத்தம், சுகாதாரமே சிரங்குகளை தவிர்க்க சிறந்த வழியாகும். வெளியில் சென்று விளையாடி வந்தபின்பு கை கால்களில் நன்கு சோப் போட்டு கழுவவேண்டும். சிரங்கு வந்தவுடன் சுயவைத்தியமோ அல்லது தவறான மருத்துவமோ செய்யாமல் மருத்துவரை அணுகி, முறையான வைத்தியம் செய்து கொண்டால் பாதிப்புகள் ஏதும் வராமல் தவிர்க்கலாம் என குழந்தைகள் நல நிபுணர் மருத்துவர் ராஜ் மோகன் எம்.டி அறிவுறுத்தியுள்ளார்.

# செல்போன் பயன்படுத்துவதை தடுக்க மகளுக்கு பவுன்சர் நியமித்த தந்தை



அகமதாபாத், மே 5:

குஜராத் மாநிலம் அகமதாபாத்தைச் சேர்ந்த 16 வயது சிறுமி 24 மணி நேரமும் ஸ்மார்ட்போனில் புகைப்படங்கள் எடுப்பது, அதை சமூகவலைதளங்களில் பதிவேற்றுவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வந்தார்.

இதை அவரது தந்தை கண்டித்தபோது அவர் கேட்கவில்லை. ஸ்மார்ட் போனுக்கும், சமூக வலை தளங்களுக்கும் அவர் அடிமையாகி விட்டார். இந்நிலையில் அவர் செல்போன் பயன்படு த்துவதைத் தடுக்க மாதம் ரூ.65 ஆயிரம் சம்பளத்தில் பவுன்சர்களை அந்த தந்தை நியமித்துள்ளார்.

இது குறித்து அகமதாபாத் நகரைச் சேர்ந்த மனநல மருத்துவர் டாக்டர் முருகேஷ் வைஷ்ணவ் கூறும்போது, "அந்த சிறுமி புகைப்படங்களை பகிரும் வலைதளத்துக்கு அடிமையாகிவிட்டார். ஆன்-லைனில் அறிமுகம் இல்லாத நபர்களுடன் பேசி வந்தார். இதைத் தடுக்க மாதம் ரூ.65 ஆயிரம் சம்பளத்தில் 4 பவுன்சர்களை அந்தத் தந்தை நியமித்திருந்தார். ஆனாலும், அவர் செல்போன் பயன்படுத்துவதைத் தடுக்க முடியவில்லை. இதைத் தொடர்ந்து அவர் என்னிடம் அழைத்துவரப்பட்டார். அவருக்கு மருந்து, மாத்திரைகளைத் தந்து ஆலோசனையும் வழங்கப்பட்டது. இதுபோன்று பல சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன" என்றார்.

இதுகுறித்து ஃபோர்ஸ்11 செக்யூரிட்டி நிறுவனத் தலைவர் நிகில் பாண்டே கூறும்போது, "செல்லப்பிராணியான நாயை தனது 17 வயது மகன் அடித்து உதைக்கிறான் என்ற புகாரின் பேரில் அதைத் தடுக்க 8 பவுன்சர்களை நியமிக்குமாறு சிறுவனின் தந்தை கேட்டுக் கொண்டார். சுமார் 9 மாதங்களாக 2 ஷிப்டுகளில் 8 பவுன்சர்கள் அந்தப் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டனர்" என்றார்.

அதேபோல தங்களது குழந்தைகள் போதைப் பொருட்களுக்கு அடிமையாவதைத் தடுப்பதை நோக்கிலும் பவுன்சர்களைக் கேட்கும் பெற்றோர்கள் அதிகரித்து வருகின்றனர் என்று அகமதாபாத்தில் செக்யூரிட்டி ஏஜென்சியை நடத்தி வரும் யாசின் மாலிக் தெரிவித்துள்ளார்.

## மூளைச்சாவு அடைந்த ராணுவ வீரரின் மனைவி: இதய தானத்தால் 14 வயது சிறுவனுக்கு மறுவாழ்வு

புதுடெல்லி, மே 5:

அரியானா மாநிலம் பஞ்சகுலா மாவட்டத்தில் உள்ள சாந்திமந்திர் பகுதியை சேர்ந்த ராணுவ வீரரின் மனைவி, மூளையில் ஏற்பட்ட ரத்தக்கசிவு காரணமாக சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். 41 வயதான அந்த பெண்ணுக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்த நிலையில், கடந்த 2-ந்தேதி(நேற்று), அவர் மூளைச்சாவு அடைந்துவிட்ட தாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து, அந்த பெண்ணின் உடல் உறுப்புகளை தானம் செய்வதற்கு அவரது கணவர், 2 மகள்கள் மற்றும் குடும்பத்தினர் முன்வந்தனர்.

இதற்கிடையில், டெல்லியில் உள்ள இந்திரபிரஸ்தா அப்பல்லோ மருத்துவமனையில் இதய நோய்க்காக சிகிச்சை பெற்று வந்த 14 வயது சிறுவனுக்கு அவசரமாக இதய மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது.

இந்நிலையில், மூளை ச்சாவு அடைந்த பெண்ணின் இதயத்தை சிறுவனுக்கு பொருத்த டாக்டர்கள் முடிவு செய்தனர். இதையடுத்து, சண்டிகரில் இருந்து விமானம் மூலம் இதயத்தை டெல்லிக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்படி, சண்டிகர் விமான நிலைய நிர்வாகம், அரியானா, பஞ்சாப் மற்றும் டெல்லி போக்குவரத்து காவல்துறையினர் ஆகியோரின் கூட்டு முயற்சியால் குறுகிய கால இடைவெளிக்குள் இதயம் டெல்லியில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு டாக்டர்கள் அந்த இதயத்தை சிறுவனுக்கு பொருத்தி, அறுவை சசிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்தனர். இதன் மூலம், 14 வயது சிறுவனுக்கு மறுவாழ்வு கிடைத்துள்ளது. தற்போது அந்த சிறுவன் நலமுடன் இருப்பதாகவும், அவரை தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து டாக்டர்கள் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## இந்திய எரிவாயு கப்பல்: 13-ஆம் தேதி விசாகப்பட்டினம் வந்தடையும்

புதுடெல்லி, மே 5:

ஹோர்முஸ் நீரிணையைக் கடந்த இந்திய எரிவாயு கப்பல்: 13-ஆம் தேதி விசாகப்பட்டினம் வந்தடையும்.

'எம்.டி. சர்வசக்தி' என்னும் அந்த சரக்குக் கப்பல் வரும் 13-ஆம் தேதி விசாகப்பட்டினம் துறைமுகம் வந்தடையும் என தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

எம்.டி. சர்வ சக்தி என்ற சரக்குக் கப்பல், 46,313 மில்லியன் டன் எல்பிஜி எரிவாயு ஏற்றி கொண்டு ஹோர்முஸ் நீரிணையை சனிக்கிழமை கடந்தது. அந்தக் கப்பலில் 18 இந்திய மாலுமிகள் உள்பட மொத்தம் 20 மாலுமிகள் உள்ளனர். அந்த கப்பல் வரும் 13-ஆம் தேதி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி அந்த கப்பல், ஓமன் வளைகுடாவில் நின்று கொண்டிருந்தது. இக்கப்பலில் உள்ள எரிவாயு மூலம் நாட்டில் அரைநாள் எரிவாயு தேவையை பூர்த்தி செய்ய முடியும்.

ஈரான், அமெரிக்கா, இஸ்ரேல் இடையேயான போர் தொடங்கிய பிறகு, ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து வந்த முதல் இந்திய எரிவாயு கப்பல் 'சர்வ சக்தி' ஆகும்.

இந்த கப்பல் தவிர, ஹோர்முஸ் நீரிணையை கடக்க முடியாமல் கடற்பகுதியில் இந்தியாவுக்கு சொந்தமான 14 சரக்குக் கப்பல்கள் நங்கூரமிட்டு நின்று கொண்டிருக்கின்றன என்று மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

## 'கிளாட் மித்தோஸ்' அச்சுறுத்தல்: இணையவழி பாதுகாப்புச் செலவுகளை அதிகரிக்க பொதுத் துறை வங்கிகள் முடிவு

புதுடெல்லி, மே 5:

கிளாட் மித்தோஸ் மேம்படுத்தப்பட்ட செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்பத்தால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலில் இருந்து பாதுகாக்க இணையவழிப் பாதுகாப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டுச் செலவை அதிகரிக்க பொதுத் துறை வங்கிகள் முடிவு செய்துள்ளன.

சாவதேச அளவில் வங்கிகள், பணப் பரிமாற்றம் சார்ந்த நிதி மோசடிகள் அதிகம் நடைபெறும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. இவை பெரும்பாலும் முதலில் அப்பாவி மக்களைக் குறிவைத்து அவர்களின் வங்கி தொடர்பான விவரங்களை மோசடியாகப் பெற்று பணத்தைப் பறிப்பதாகத் தொடங்கியது. இப்போது, எண்ம (டிஜிட்டல்) கைது, போலி 'க்யூஆர்' குறியீடு எனப் பல வழிகளில் மோசடி அதிகரித்துள்ளது.

இவை பெரும்பாலும் வங்கி வாடிக்கையாளர்களைக் குறிவைத்து நடைபெறுவதால் இது தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வை மத்திய அரசு ஏற்படுத்தி வருகிறது. இந்தியாவில் வங்கிக் கணக்கு வைத்திருக்கும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு காலகட்டத்தில் இந்த இணையவழி நிதி மோசடிக்கான அழைப்புகள், மோசடி குறுஞ்செய்திகளைப் பெற்றவர்களாகவே உள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில், அமெரிக்காவின் ஆந்த்ரோபிக் நிறுவனம் உருவாக்கியுள்ள 'கிளாட் மித்தோஸ்' ஏஐ தொழில்நுட்பம் தவறாகப் பயன்படுத்தப்படும்போது அது வங்கித் துறைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கும் என்று கருதப்படுகிறது. ஏனெனில் இந்த ஏஐ தொழில்நுட்பம் இணையவழிப் பாதுகாப்பில் உள்ள சிறிய குறைபாட்டையும் கண்டறிந்து அதன் வழியாக கணினிகள் மற்றும் சர்வர்களுக்குள் ஊடுருவும் திறன்கொண்டது. இதை தேசவிரோதிகள் பயன்படுத்தினால் வங்கி வாடிக்கையாளர்களின் விவரங்களைத் திருடுவது தொடங்கி, ஒட்டுமொத்த வங்கித் துறையின் இணைய சேவை பாதுகாப்பை கேள்விக்குறியாக்கவும் முடியும்.

இதைக் கருத்தில்கொண்டு இணையவழிப் பாதுகாப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக நிதியை அதிகரிக்க வங்கிகள் முடிவு செய்துள்ளன.

## திருப்பதி லட்டு நெய் கொள்முதலில் முறைகேடு: ஒரு நபர் ஆணைய அறிக்கையில் குற்றச்சாட்டு



திருப்பதி, மே 5:

ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி தினேஷ் குமார் தலைமையில் அமைக்கப்பட்ட இந்த ஆணையம், உச்சநீதிமன்ற உத்தரவின் பேரில் அமைக்கப்பட்ட சிறப்பு விசாரணைகுழு அறிக்கைக்குப் பிறகு தனது விசாரணையை மேற்கொண்டது. இதில், திருப்பதி தேவஸ்தானம் லட்டு தயாரிப்புக்காக வாங்கிய 70 லட்சம் கிலோவுக்கும் அதிகமான நெய், கட்டாய தரச் சோதனைகள் இன்றி கொள்முதல் செய்யப்பட்டதாக குற்றஞ்சாட்டியது.

அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது: திருப்பதி லட்டு தயாரிப்பில் அமல்படுத்தப்பட வேண்டிய கட்டாய இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (எஃப்எஸ்எஸ்ஏஐ) சோதனைகளை 2022 ஜூலை மாதம் செயல்படுத்த திருப்பதி தேவஸ்தானம் திட்டமிட்டிருந்தது. ஆனால், பின்னர் இந்த தேவையை தேவஸ்தானம் நீக்கியதுடன், கட்டுபாடற்ற நெய் கொள்முதலுக்கு வழிவகுத்தது.

இதையடுத்து, மிகப்பெரிய அளவில் அவசியமான தரச் சோதனைகள் இன்றி நெய் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2022 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற முக்கிய பரிசோதனையின் முடிவுகள் வெளிவராமல் மறைக்கப்பட்டுள்ளன. அதில் லட்டு தயாரிக்கும் நெய்யில் தாவர எண்ணெய் கலப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், தரச் சோதனை இல்லாமல் நெய்யின் விலையை ஒரு கிலோவிற்கு ரூ. 207 வரை கடுமையாகக் குறைக்கும் நடவடிக்கையில் விநியோகஸ்தர்கள் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக ஏலத்திற்குப் பிந்தைய சட்டவிரோதப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது குறித்து விசாரணையில் தெரியவந்தது.

சில தகுதியற்ற மற்றும் உற்பத்தி திறனற்ற நிறுவனங்களுக்கு தொடர்ந்து ஒப்பந்தம் வழங்கப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. சில விநியோகஸ்தர்கள் செயற்கை சேர்க்கைகள் பயன்படுத்தி சோதனைகளை தவிர்த்ததும், இடைநிலை நிறுவனங்கள் வழியாக நெய் வழங்கப்பட்டதும் கண்டறியப்பட்டுள்ளது. திருப்பதி தேவஸ்தானத்தில் தேவையான உபகரணங்கள் இல்லாததால் நேரடி தரச் சோதனைகள் தாமதமாக நடத்தப்பட்டன. மேலும், புகார்கள் மற்றும் தரக் கண்காணிப்பு அமைப்புகள் பெரும் அளவில் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இந்த முறைகேடுகள் மற்றும் நிர்வாகத் தவறுகளுக்கு திருப்பதி தேவஸ்தானம், கொள்முதல் குழு உறுப்பினர்கள் மற்றும் மூத்த ஆதிகாரிகளே பொறுப்பேர்க்க வேண்டும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

# மேற்கு வங்கத்தின் பால்டா தொகுதியில் மே 21-ல் மறுதேர்தல்



கொல்கத்தா, மே 5:

மேற்கு வங்க மாநிலம் பால்டா சட்டப்பேரவைத் தொகுதியில் நடைபெற்ற வாக்குப் பதிவின் போது, ஜனநாயக நெறிமுறைகளுக்கு மாறாக பல்வேறு முறைகேடுகள் அரங்கேறியதைத் தொடர்ந்து, அங்குள்ள அனைத்து 285 வாக்குச் சாவடிகளிலும் மறுதேர்தல் நடத்த இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, மே 21-ம் தேதி மீண்டும் வாக்குப்பதிவு நடைபெறும்; மே 24-ம் தேதி வாக்குகள் எண்ணப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மேற்கு வங்கத்தில் இன்று 293 தொகுதிகளுக்கு மட்டும் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவு இயந்திரங்களில் கறுப்பு நிற டேப் ஒட்டி வாக்குகளைத் தடுத்தது முதல், வாக்காளர்களைக் கண்டறிய வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்தியது வரை பல்வேறு முறைகேடுகள் குறித்த முக்கிய தகவல்களை தேர்தல் ஆணையம் அம்பலப்படுத்தியுள்ளது. பால்டா தொகுதியில் முறையான வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுத்ததோடு, வாக்குப்பதிவு இயந்திரங்களில் உள்ள குறிப்பிட்ட வேட்பாளர்களின் சின்னங்களுக்கு நேராக கறுப்பு நிற டேப் ஒட்டப்பட்டு, அந்தப் பொத்தான்களை அழுத்த முடியாதபடி முடக்கியதாக புகார்கள் எழுந்தது.

மேலும், அதிர்ச்சியூட்டும் தகவலாக, வாக்குப்பதிவு இயந்திரத்தின் பொத்தான்களில் வாசனைத் திரவியம் மற்றும் மையைப் பூசி, வாக்களித்து விட்டு வரும் வாக்காளர்களின் விரல்களில் ஏற்படும் வாசனை மற்றும் நிறத்தை வைத்து அவர்கள் யாருக்கு வாக்களித்தார்கள் என்பதைக் கண்டறியும் சட்டவிரோதச் செயல்களும் பல வாக்குச் சாவடிகளில் அரங்கேறியுள்ளன.

இது வாக்களிப்பதன் ரகசியத் தன்மையை முற்றிலுமாகச் சிதைப்பதாக அமைந்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. மேலும், தொகுதி முழுவதும் பரவலாக வாக்குச் சாவடிகள் கைப்பற்றப்பட்டதையும், உண்மையான வாக்காளர்கள் மிரட்டப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டதையும் தேர்தல் பார்வையாளர்கள் உறுதி செய்துள்ளனர். தேர்தல் அலுவலர்களே வாக்காளர்களுக்கு வழிகாட்டுவது போல வாக்குப்பதிவு அறைக்குள் நுழைந்து முறைகேடுகளிலும் ஈடுபட்டது வீடியோ பதிவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாகவே. மேற்கு வங்க மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரியின் பரிந்துரையை ஏற்று, பால்டா தொகுதித் தேர்தலை ரத்து செய்து முழுமையான மறுதேர்தலை நடத்தும் முடிவுக்கு வந்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

## திருப்பதியில் த்ரிஷா சிறப்பு தரிசனம்!

திருப்பதி, மே 5:

திருப்பதியில் நடிகை த்ரிஷா நேற்று அதிகாலை சிறப்பு தரிசனம் மேற்கொண்டார்.

நடிகை த்ரிஷா நேற்று தனது பிறந்த நாளை கொண்டாடும் நிலையில், திருமலை ஏழுமலையான் கோயிலில் சுப்ரபாத சேவையில் ஈடுபட்டார். அப்போது, ' ரிசல்ட் பக்காவா நம்ம பக்கம்தான்' என்று ரசிகர் ஒருவர் த்ரிஷாவைப் பார்த்து கூறிய நிலையில், அவர் சிரித்த முகத்துடன் நடந்து சென்றார்.

## கேரள முதல்-மந்திரி பினராயி விஜயன் போட்டியிட்ட தொகுதியில் 5 வெடிகுண்டுகள் பறிமுதல்

கண்ணூர், மே 5:

கேரள முதல்-மந்திரியாக இருப்பவர் பினராயி விஜயன். இவர் கண்ணூர் மாவட்டம் தர்மடம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டார். கேரளத்தில் 140 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு கடந்த மாதம் 9-ம் தேதி நடந் தது. (திங்கட்கிழமை) வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. இந்த நிலையில் தர்மடம் தன்னடா பகுதியில் வெடிகுண்டு தயாரித்து வைத்து உள்ளதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் எடக்காடு போலீசார், தனிப்படை போலீசார் விரைந்து சென்று அந்த பகுதியில் உள்ள ஒரு வீட்டில் சோதனை நடத்தினர். அங்கு பட்டாசு தயாரிக்கும் நானு என்பவரது வீட்டில் இருந்து சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்ட 5 வெடிகுண்டுகள், 3 கிலோ வெடிப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் வெடிகுண்டு தடுப்பு பிரிவு நிபுணர்கள் வெடிகுண்டுகளை கைப்பற்றி செயலிழக்க செய்தனர். முதல்-மந்திரி பினராயி விஜயன் போட்டியிட்ட தர்மடம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் வெடிகுண்டுகள் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## கைலாஷ்-மானசரோவர் யாத்திரை: லிபுலேக் வழித்தடத்தில் செல்ல நேபாளம் அனுமதி மறுப்பு

புதுடெல்லி, மே 5:

உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள லிபுலேக் கணவாய் மற்றும் சிக்கிம் மாநிலத்தில் உள்ள நாதுலா கணவாய் ஆகிய இரு பாதைகள் வழியாக வரும் ஜூன் முதல் ஆகஸ்ட் வரை கைலாஷ்-மானசரோவர் யாத்திரை நடைபெறும் என கடந்த ஏப்.30-ஆம் தேதி இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிவித்தது.

கைலாய மலை மற்றும் சீனாவின் திபெத் தன்னாட்சி பிராந்தியத்தில் உள்ள மானசரோவர் ஏரிக்கு மேற்கொள்ளப்படும் இந்தப் புனித யாத்திரை ஹிந்துக்கள், சமணர்கள் மற்றும் பௌத்தர்களிடையே மத ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது. கல்வான் பள்ளத்தாக்கில் இந்தியா-சீனா இடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து 5 ஆண்டுகளாக இந்த யாத்திரை நடைபெறாமல் இருந்தது. பின்னர் இருதரப்பு உறவை வலுப்படுத்த இரு நாடுகளும் மேற்கொண்ட முயற்சிகளையடுத்து, கடந்த ஆண்டு கைலாஷ்-மானசரோவர் யாத்திரை மீண்டும் தொடங்கப்பட்டது. இந்நிலையில், நிகழாண்டு இந்த யாத்திரைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேபாள வெளியுறவு அமைச்சகம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில், '1816-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சுகௌலி ஒப்பந்தத்தின்படி மகாகாளி ஆற்றின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள லிபுலேக், லிம்பியாதுரா மற்றும் காலாபானி ஆகிய பிராந்தியங்கள் நேபாளத்துக்குச் சொந்தமானவை. யாத்திரைக்கான பாதையை இறுதிசெய்யும் முன் இந்தியா எங்களிடம் கலந்தாலோசிக்கவில்லை. எனவே கைலாஷ்-மானசரோவர் யாத்திரைக்கு நேபாளத்தின் லிபுலேக் கணவாய் வழித்தடத்தை அனுமதிக்க முடியாது என்பதை இந்தியா மற்றும் சீனாவிடம் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்' எனத் தெரிவிக்கப்பட்டது. செயற்கையான முறையில் தன்னிச்சையாக பிராந்தியங்களை உரிமை கோர முடியாது என நேபாளத்துக்கு இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் ஞாயிற்றுக்கிழமை பதிலடி கொடுத்தார்.

## 'ஆப்டோசார்' செயற்கைக்கோள் விண்ணில் வெற்றிகரமாக நிலைநிறுத்தம்

பெங்களூரு, மே 5:

கர்நாடகம் மாநிலம், பெங்களூருவைச் சேர்ந்த கேலக்ஸிஸ்ஐ புத்தாக்க நிறுவனமானத்தால் 'திருஷ்டி' திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட முதன்மை செயற்கைக்கோளான 'ஆப்டோசார்'-ஐ ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் இருந்து ஸ்பேஸ்எக்ஸ் ஃபால்கன் 9 ராக்கெட் மூலம் விண்ணில் வெற்றிகரமாக செலுத்தியதன் மூலம், நாட்டின் தனியார் விண்வெளித் துறை ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது. இந்தத் திட்டம், நாட்டின் வர்த்தக விண்வெளிச் சூழலுக்கு ஒரு குறிப்பிடத்தக்க உத்வேகமாக அமைந்துள்ளதுடன், ஒரு உலகளாவிய ஏவுதளத்தில் மேம்பட்ட உள்நாட்டுப் புத்தாக்கத்தையும் வெளிப்படுத்துகிறது. 190 கிலோகிராம் எடை கொண்ட செயற்கைக்கோளான 'ஆப்டோசார் 'ஒரு இந்திய தனியார் நிறுவனத்தால் இதுவரை உருவாக்கப்பட்டதிலேயே மிகப்பெரிய செயற்கைக்கோள் ஆகும். மின்-ஒளியியல் (எலக்ட்ரோ-ஆப்டிகல்) சென்சார் மற்றும் செயற்கை துளை ரேடார் சென்சார் ஆகிய இருவேறு பிம்பமாக்கல் தொழில்நுட்பங்களையும் ஒரே செயல்பாட்டுத் தளத்தில் ஒருங்கிணைக்கும் செயற்கைக்கோள் ஆகும். இது, விண்வெளித் தொழில்நுட்பத்தின் எல்லைகளை விரிவுபடுத்தும் புதிய தலைமுறை புத்தாக்க நிறுவனங்களில் கேலக்ஸிஸ்ஐ இடம்பெறச் செய்துள்ளது. 'ஆப்டோசார் 'செயற்கைக்கோள், புவிவட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அதன் செயல்பாட்டைத் தொடங்கும் பணிகளில் கவனம் செலுத்தி வருவதாகவும், இது, வழக்கமான பிம்பமாக்கல் அமைப்பு முறைகளில் உள்ள குறைபாடுகளுக்குத் தீர்வளிப்பதுடன், பலதரப்பட்ட காலச் சூழல்களிலும் சீரான மற்றும் நிலையான தரவு சேகரிப்பை உறுதி செய்யும் என நிறுவனம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கென்யாவில் கனமழை, நிலச்சரிவு: 18 பேர் உயிரிழப்பு

நைரோபி, மே 5:

கென்யாவின் பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் கனமழையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக இதுவரை 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

கென்யாவின் மத்திய மற்றும் கிழக்கு பகுதிகளில் அமைந்துள்ள தாராகா நிதி, எல்கேயோ-மராக்வெட் மற்றும் கியாம்பு ஆகிய மாவட்டங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டதாக அந்நாட்டு அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

தொடர்ச்சியான நிலச்சரிவுகள் பல குடும்பங்களை பாதித்துள்ளதுடன், ஏராளமானோர் தங்களது வீடுகளை இழந்து இடம்பெயர்ந்துள்ளனர். மேலும், பொதுக் கட்டமைப்பு வசதிகளும் சொத்துக்களும் பெருமளவில் சேதமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எத்தனை பேர் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்துள்ளனர் என்பது குறித்த துல்லியமான தகவல்கள் இன்னும் வெளிவரவில்லை.

கென்யாவின் தலைநகரான நைரோபியில் சாலைகள் அனைத்தும் வெள்ளநீரில் மூழ்கியுள்ளன. வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் வெள்ளத்தில் தத்தளிக்கும் காட்சிகள் அந்நாட்டு ஊடகங்களில் வெளியாகியுள்ளன. இதற்கிடையில், மழையினால் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகவும், இது தங்களது வணிகத்தைப் பாதிப்பதாகவும் கூறி மாகோங்கனி மற்றும் ருவாய் பகுதிகளில் உள்ள வியாபாரிகள் ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். கனமழையினால் நீர் மூலம் பரவும் நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், நாடு முழுவதும் விவசாய நிலங்கள் மற்றும் பயிர்கள் சேதமடையக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் ஏற்கனவே எச்சரித்துள்ளது. கென்யாவில் கடந்த மார்ச் மாதத்தில் பெய்த மழையின்போது ஏற்பட்ட வெள்ளத்தில் 37 பேர் உயிரிழந்த நிலையில், தற்போதைய பாதிப்பு கடந்த இரண்டு மாதங்களுக்குள் நடைபெறும் இரண்டாவது பெரிய இயற்கைச் சீற்றமாகும்.

வழக்கமாக மார்ச் முதல் மே மாதம் வரை பெய்யும் இந்த பருவகால மழை, மே மாதத்தின் முதல் பாதியில் உச்சத்தை எட்டும் என்பது குறிப்பிடத்தக்கது. மனிதத் தலையீடுகளால் ஏற்படும் காலநிலை மாற்றமே கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் இத்தகைய தீவிர வானிலை மாற்றங்களுக்குக் காரணம் என நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## அரசியல் உள்நோக்கம் கொண்ட 1,500 நியமனங்கள் உடனடி ரத்து: நேபாள அரசு

காத்மாண்டு, மே 5:

அமைச்சரவை பரிந்துரையின் பேரில், இந்த ஆணையை அதிபர் ராம்சந்திர பௌடேல் சனிக்கிழமை வெளியிட்டார். இதன் காரணமாக நிர்வாகம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட பல துறைகள் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்து வருகின்றன.

கடந்த ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற இளைஞர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நேபாளத்தின் அப்போதைய பிரதமர் கே.பி.சர்மா ஒலி அரசு கலைக்கப்பட்டது. இடைக்கால பிரதமராக சுசீலா கார்க்கி நியமிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து, கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பாலேந்திர ஷா தலைமையிலான ராஷ்ட்ரீய சுதந்திர கட்சி ஆட்சிக்கு வந்தது.

இந்நிலையில், முந்தைய இடைக்கால அரசால் நியமிக்கப்பட்ட 1,594 பேரின் பதவிகள் நீக்கம் செய்யப்படுவதாகவும், அவர்களின் பதவிக் காலம் அல்லது நியமன விதிமுறைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாமல், மார்ச் 26-ஆம் தேதிக்கு முன் செய்யப்பட்ட அனைத்து நியமனங்களும் ரத்து செய்யப்படுவதாகவும் ஆணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கை அரசு நிறுவனங்கள், ஒழுங்குமுறை அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் ஊடக அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைப் பாதித்துள்ளது. அரசியல் உள்நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நியமனங்களை திருத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும் என அரசுத் தரப்பில் இதற்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

இதற்கிடையில், காலியாகியுள்ள பதவிகளுக்கு புதிய நியமனங்களை மேற்கொள்ள எந்தக் காலக்கெடு அல்லது நடைமுறை பின்பற்றப்படும் என்பது குறித்தும் அரசு இதுவரை தெளிவான அறிவிப்பை வெளியிடவில்லை. முந்தைய அரசின் முடிவுகளை மறுபரிசீலனை செய்வது சாதாரணமான ஒன்றாக இருந்தாலும், இந்த நடவடிக்கை நிர்வாகத்தில் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தும் எனப் பலரும் விமர்சித்து வருகின்றனர்.

# அமெரிக்க படையிடம் சிக்காமல் தப்பிய ஈரான் கச்சா எண்ணெய்க் கப்பல்: பல ஆயிரம் கி.மீ. தொலைவு ரகசிய பயணம்

வாஷிங்டன், மே 5:




ஈரான் துறைமுகங்களை முற்றுகையிட்டுள்ள அமெரிக்க கடற்படை கப்பல்களிடம் சிக்காமல் ஈரான் கச்சா எண்ணெய்க் கப்பல் ஒன்று பல ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவுக்குப் பயணித்து தப்பி வந்துவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரான் மீதான தாக்குதலை அமெரிக்கா நிறுத்திவைத்த போதிலும், ஹோர்முஸ் நீரிணையை அந்நாடு மூடிவிட்டதற்குப் பதிலடியாக துறைமுகங்களை முற்றுகையிட்டுள்ளது. ஈரானின் கச்சா எண்ணெய் விற்பனைக்கு முற்றுப்புள்ளி வைத்து பொருளாதார ரீதியில் அந்த நாட்டுக்கு நெருக்கடி அளிக்க இந்த வழிமுறையை அமெரிக்கா கையாண்டு வருவதாகக் கூறப்படுகிறது.


இந்தச் சூழ்நிலையில், துறைமுகங்களை முற்றுகையிட்டுள்ள அமெரிக்க கடற்படை கப்பல்களிடம் சிக்காமல் ஈரானில் இருந்து கச்சா எண்ணெய்க் கப்பல் ஒன்று கடல் வழியே தப்பி வந்துவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

220 மில்லியன் டாலர் மதிப்பிலான 16 லட்சம் கச்சா எண்ணெய் பீப்பாய்களை ஏற்றிக் கொண்டு அந்தக் கப்பல் பயணத்தைதொடங்கியதாகவும், அமெரிக்க கடற்படை கப்பல்களிடம் சிக்காமல் இலங்கை கடற்பகுதி வழியே வந்து, தற்போது இந்தோனேசியா கடற்பகுதியைக் கடந்து சென்று கொண்டிருப்பதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தக் கப்பல் எந்த நாட்டுக்குச் செல்கிறது என்ற தகவல் இல்லை. எனினும் அமெரிக்க கடற்படை கப்பல்களிடம் சிக்காமல் அந்தக் கப்பல் தப்பித்து பல ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவு பயணித்தது வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

## அமீரகத்துக்கு 'அயர்ன் பீம்' ஆயுதங்களை அனுப்பியது இஸ்ரேல்

டெல்அவிவ், மே 5:



ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியபோது, ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்கள் மற்றும் பிற இடங்களை குறி வைத்து ஈரான் 500 ஏவுகணைகள், 2,000 ட்ரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியது. இவற்றில் பெரும்பாலானவை நடுவானில் இடைமறித்து அழிக்கப்பட்டன. சில ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் அமீரகத்தில் பாதிப்பை ஏற்படுத்தின.

ஐக்கிய அரபு அமீரகத்துக்கு இஸ்ரேல் ஏற்கெனவே அயர்ன் டோம் என்ற வான் பாது காப்பு ஆயுதங்களையும், அவற்றை செயல்படுத்த ராணுவத்தினரையும் இஸ்ரேல் அனுப்பியுள்ளது. இந்நிலையில் ஈரானின் ட்ரோன் தாக்குதலை சமாளிக்க இஸ்ரேல் புதிதாக உருவாக்கிய 'அயர்ன் பீம்' என்ற ஆயுதத்தை அமீரகத்துக்கு அனுப்பியுள்ளது. இதில் உள்ள லேசர் கற்றைகள், ஈரான் ட்ரோன்களை நடுவானிலேயே சாம்பலாக்கிவிடும்.

இது தவிர 'ஸ்பெக்ட் ரா' என்ற கண்காணிப்பு கருவியையும் அமீரகத்துக்கு இஸ்ரேல் வழங்கியுள்ளது. இது ஈரானின் ட்ரோன்கள் 20 கி.மீ தூரத்துக்கு அப்பால் வரும்போதே எச்சரிக்கை விடுக்கும். இதன் மூலம் அயர்ன் பீம் ஆயுதங்களை பயன்படுத்தி ட்ரோன்களை அழித்துவிடலாம்.

## அமெரிக்கா போரை நிறுத்த 14 அம்ச அமைதித் திட்டத்தை வழங்கிவிட்டோம்: ஈரான் அறிவிப்பு

டெஹ்ரான், மே 5:



அணுசக்தி விவகாரத்தில் ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து தொடங்கிய போரில் தற்போது தற்காலிக சண்டை நிறுத்தம் அமலில் உள்ளது. யுரேனியம் செறிவூட்டல் பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா-ஈரான் இடையே பேச்சுவார்த்தை நடப்பதில் இழுபறி நீடிப்பதால் போரை முடிவுக்கு கொண்டு வருவதில் சிக்கல் நிலவுகிறது. இதனிடையே நிரந்தர போர் நிறுத்தத்துக்கு ஈரான் புதிய சமரச திட்டத்தை பாகிஸ்தான் மூலம் அமெரிக்காவிடம் வழங்கியுள்ளது.

ஆனால் இந்த சமரச திட்டத்தில் தனக்கு திருப்தி இல்லை என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இதனிடையே ஈரான் அளித்த சமரச திட்டம் தொடர்பாக புதிய தகவல் வெளியாகி உள்ளது. அதில் ஈரான் 14 அம்சங்களை தெரிவித்து இருக்கிறது. லெபனான் உள்பட அனைத்து முனைகளிலும் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். ஈரானைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள கடற்படை முற்றுகையை நீக்க வேண்டும். அமெரிக்க படைகளை திரும்ப பெற வேண்டும். ஹார்முஸ் ஜலசந்திக்கு ஒரு புதிய நிர்வாக அமைப்பை நிறுவ வேண்டும். ஈரான் மீதான தடைகளை நீக்க வேண்டும். முடக்கப்பட்ட ஈரான் நாட்டு சொத்துக்களை விடுவிக்க வேண்டும். ஈரானுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்ட 14 அம்சங்கள் அதில் இடம் பெற்று உள்ளன.

மேலும் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க 30 நாள் காலக்கெடுவையும் ஈரான் வலியுறுத்தி உள்ளது. ஈரான் அளித்த சமரச திட்டத்தில் திருப்தி இல்லை என்று அதிபர் ட்ரம்ப் தெரிவித்திருந்த நிலையில் தற்போது அதை ஆய்வு செய்ய உள்ளதாக அறிவித்து உள்ளார்.

ட்ரம்ப் பரிசீலனை: இதுதொடர்பாக ட்ரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில் கூறியிருப்பதாவது: ஈரான் தற்போது எங்களுக்கு அனுப்பியுள்ள சமரச திட்டத்தை நான் விரைவில் ஆய்வு செய்ய உள்ளேன். ஆனால், கடந்த 47 ஆண்டுகளில் மனிதகுலத்துக்கும் உலகுக்கும் எதிராக அவர்கள் செய்த செயல்களுக்கு இன்னும் போதுமான அளவு பெரிய விலையை அவர்கள் செலுத்தாத நிலையில், அத்திட்டம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கும் என்று என்னால் கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை. இவ்வாறு ட்ரம்ப் கூறி உள்ளார்.

இதனிடையே நேற்று ஈரான் நாட்டு வெளியுறவுத்துறை துணை அமைச்சர் காசெம் கரீபாபடி கூறியதாவது:

போரை நிறுத்துவது தொடர்பான 14 அம்ச அமைதித் திட்டத்தை அமெரிக்காவுக்கு வழங்கிவிட்டோம். இப்போது முடிவு அமெரிக்காவின் கையில் உள்ளது. ஜனநாயகப் பாதையைத் தேர்ந்தெடுப்பதா அல்லது மோதல் போக்கை நீடிப்பதா என்பதை அமெரிக்காதான் முடிவு செய்யவேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## இஸ்ரேல் வான்வழி தாக்குதல்; லெபனானில் கடந்த 24 மணிநேரத்தில் 41 பேர் பலி

பெய்ரூட், மே 5:

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் இணைந்து ஈரானை தாக்கி வருகிறது. இந்த போரில், ஈரானுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா அமைப்பு லெபனானில் இருந்து செயல்பட்டு வருகிறது. இஸ்ரேல் மீது தாக்குதலை தொடுத்து வருகிறது. பதிலடியாக லெபனானை இஸ்ரேல் தாக்கியது. இதில், லெபனான் நாட்டில் பொதுமக்கள் பலர் பலியானார்கள். இதனால், உடனடியாக போர்நிறுத்த உடன்பாடு ஏற்படுத்த முடிவு செய்து, இஸ்ரேலிடம் லெபனான் கோரி வந்தது.

அதில் பலன் ஏற்பட்டது. லெபனான் ஜனாதிபதி ஜோசப் ஆவன் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகிய இருவரும், பேச்சுவார்த்தை நடத்தி, பெரிய அளவில் தீர்வு ஏற்படுவதற்கான நடவடிக்கையாக, தற்காலிக ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தினர்.

இதனை அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப்பும் உறுதிப்படுத்தினார். இதன்படி, லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையே 10 நாட்களுக்கு தற்காலிக போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு உள்ளது. ஏப்ரல் 17-ந்தேதி வரை போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்ட நிலையில், அது பின்னர் மே மாதம் தொடக்க வாரம் வரையில் நீட்டிக்கப்பட்டு உள்ளது.

எனினும், தெற்கு லெபனானில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இதன்படி, இஸ்ரேல் நேற்று நடத்திய வான்வழி தாக்குதலில் லெபனான் நாட்டில் 10 பேர் பலியானார்கள். கடந்த 24 மணிநேரத்தில் 41 பேர் பலியாகி உள்ளனர். இதனால், கடந்த மார்ச் 2-ந்தேதியில் இருந்து இதுவரை 2,659 பேர் உயிரிழந்தும், 8,183 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

ஹிஸ்புல்லா குழுக்களின் தளங்களை இலக்காக கொண்டு தாக்குதல் நடந்து வருகிறது என இஸ்ரேல் கூறி வருகிறது. ஆனால், பலியானவர்களில் பலர் பொதுமக்கள் ஆவர் என தகவல் தெரிவிக்கின்றது. லெபனானை இஸ்ரேல் தாக்க தொடங்கியதில் இருந்து இதுவரை 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு தேடி, லெபனானில் இருந்து இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்கு சென்று விட்டனர்.

## போர் பதற்றத்திற்கு இடையே ஹார்முஸ் ஜலசந்தியை இந்திய கப்பல் கடந்தது




மத்திய கிழக்கு போரில் ஹோர்முஸ் ஜலசந்தியை ஈரான் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இதனால் அங்கு கப்பல் போக்குவரத்து முடங்கியது.இருந்தபோதிலும் இந்தியாவை நோக்கி புறப்பட்ட கப்பல்களுக்கு ஈரான் அனுமதி அளித்தது. இதனால் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றிய சில கப்பல்கள் இந்தியாவை வந்தடைந்தன.

இதற்கிடையே ஈரான் துறைமுகங்களை முடக்கும் வகையில் ஹோர்முஸ் ஜலசந்தியில் கடந்த ஏப்ரல் 13-ந்தேதி முதல் அமெரிக்க கடற்படை முற்றுகை நடவடிக்கையை மேற்கொண்டு உள்ளது. இதற்கு பதிலடியாக ஈரான் அந்த ஜலசந்தியில் தனது கட்டுப்பாட்டை அதிகரித்து உள்ளது. இதில் 2 இந்திய கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இந்த நிலையில் ஹோர்முஸ் ஜலசந்தியில் நிலவும் பதற்றங்களுக்கு மத்தியில் இந்தியாவை நோக்கி புறப்பட்ட கப்பல் ஒன்று பாதுகாப்பாக ஹோர்முஸ் ஜலசந்தியை கடந்து உள்ளது.

மார்ஷல் தீவுகளின் கொடியை ஏந்திய எம்.டி. சர்வ சக்தி என்ற கப்பல் 46,313 மெட்ரிக் டன் எல்.பி.ஜியுடன் (திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு) ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துறைமுகத்தில் இருந்து புறப்பட்டது. அந்த கப்பல் வெற்றிகரமாக ஹோர்முஸ் ஜலசந்தியை கடந்து உள்ளது.

அது வருகிற 13-ந்தேதி விசாகப்பட்டினத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் கடற்படை முற்றுகை மற்றும் ஈரானின் கடும் கட்டுப்பாடுகளுக்கு பிறகு ஹோர்முஸ் ஜலசந்தியை கடந்த முதல் இந்திய கப்பல் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

மார்ச் மாதத்தில் இருந்து இதுவரை, இந்திய கொடியை ஏந்திய 10 எரிசக்தி கப்பல்கள், 9 எல்.பி.ஜி. கப்பல்கள் மற்றும் ஒரு கச்சா எண்ணெய் கப்பல் ஹோர்முஸ் ஜலசந்தியைக் கடந்துள்ளன.

# எரிபொருள் நெட்வொர்க்கை சிதைக்க ரஷ்யாவின் 2 கப்பல்களை அழித்தோம்: உக்ரைன் அதிபர் தகவல்

கீவ், மே 5:



ரஷ்யாவின் 2 எண்ணெய் கப்பல்களை உக்ரைன் ராணுவம் தாக்கி அழித்தது என்று அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பில் சேர உக்ரைன் விரும்பியது. இதற்கு ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்தது. இதை ஏற்க மறுத்த உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 2022-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் போர் தொடங்கியது. கடந்த 4 ஆண்டுகளாக இரு நாடுகளும் ஒன்றின் மீது ஒன்று தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், டெலிகிராம் சமூக வலைதளத்தில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வெளியிட்ட பதிவில் நேற்று கூறியிருப்பதாவது: ரஷ்யாவின் எரிபொருள் நெட்வொர்க்கை சிதைக்க உக்ரைன் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது.

அந்த வகையில் ரஷ்யாவின் நிழலாக செயல்பட்டு வந்த 2 எண்ணெய் கப்பல்களை ட்ரோன்கள் மூலம் தாக்கி அழித்தோம்.

அந்தக் கப்பல்கள்தான் ரஷ்ய கச்சா எண்ணெய்யை கொண்டு சென்று வந்தன. இப்போது அந்த கப்பல்கள் இல்லை. அந்த 2 கப்பல்களையும் ரஷ்யாவின் நோவோராசியிக் துறைமுகத்தின் நுழைவு வாயில் பகுதியில் தாக்கி அழிக்கப்பட்டது. தரை, வான், கடல் வழியாக தொலைதூர இலக்கை தாக்கும் உக்ரைனின் ராணுவ நடவடிக்கை தொடரும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

உயிரிழப்பு எதுவும் இல்லை: முன்னதாக ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட தகவலில்,

"ரஷ்ய தலைநகர் மாஸ்கோ மற்றும் லெனின்கிரேன் உட்பட 15 பகுதிகளில் தாக்குதல் நடத்த அனுப்பிய உக்ரைனின் 334 ட்ரோன்களை இடைமறித்து அழித்தோம்.

இதில் உயிரிழப்பு எதுவும் ரஷ்ய தரப்பில் இல்லை" என்று கூறியிருந்தார்.

# முதல்வர் ஆகிறார் விஜய்



## மேற்கு வங்கம், புதுச்சேரி, அசாமில் பாஜக: கேரளாவில் காங்கிரஸ் ஆட்சி

## பூந்தமல்லி - வடபழனி வழித்தடத்தில் விரைவில் ரயில் சேவை

## திருப்பதி லட்டு நெய் கொள்முதலில் முறைகேடு: ஒரு நபர் ஆணைய அறிக்கையில் குற்றச்சாட்டு

## மேற்கு வங்கத்தின் பால்டா தொகுதியில் மே 21-ல் மறுதேர்தல்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 05.05.2026 செவ்வாய்க்கிழமை இலவச இ–பேப்பர்